Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 15

வாரப்பதிப்பு

ஈழநாடு

போன் 389

EELA NADU National Tamil Daily தேசிய தினசரி

தபாற் பெட்டி எண்: 49

மலர் 4 யாழ்ப்பாணம் சுபகிருது தை 14 ஆம் நாள் ஷஃபார் பிறை 30 (27-1-63) ஞாயிற்றுக்கிழமை இதழ் 346

யாழ்ப்பாண மக்களுக்கோர் நற்செய்தி!

புதிதாகத் திறக்கப்பட்ட ஸ்தாபனம்

அல்பேட் எதிரிசிங்க

பிரசித்தமான கண் பரிசோதகரும்

மூக்குக்கண்ணடி விற்பனையாளரும்

45, மெயின் வீதி, யாழ்ப்பாணம்.

'பாதுகாப்பு பணியில் ஓயாது உழையுங்கள்'

பாரத மக்களுக்கு பிரதமர் நேரு உரை

கிராமத் தொண்டர்படை ஆரம்பிக்கப்பட்டது

புதுடில்லி, ஜன. 26

'பாரதநாடு ஒரு பெரிய குடும்பம். இந்த நாட்டிலுள்ள மக்களெல்லோரும் இந்த குடும்பத்தின் அங்கத்தவர்கள். நாட்டிலுள்ள பெரும்பகுதிமக்கள் கிராமங்களில் தான் வசிக்கிறார்கள். எனவே அவர்களின் நலனைப்பாதுகாப்பது அவசியம். கிராமத்தொண்டர்படை கிராமமக்கள் தம்மைத்தாமே பாதுகாத்துக்கொள்ள உருவாக்கப்படும் ஒரு இயக்கமாகும்' என்று கிராமத் தொண்டர்படையை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் பாரதப் பிரதமர் திரு. நேரு கூறினர்.

திரு. நேரு தமது உரையில் மேலும் கூறியதாவது:

நமது நாடு கடந்த மூன்று, நான்கு மாதங்களாக பெரும் நெருக்கடிக்குள்ளாகி வந்துள்ளது.

நமது லட்சியத்துக்கும், ஜனநாயகக் கொள்கைக்கும், கலாசாரத்துக்குமெதிராக விடுக்கப்பட்ட இந்தச் சவாலை நாம் சமாளித்தேயாக வேண்டும். நமது எல்லைகளில் போர்நடந்தாலும் நடக்காதுவிட்டாலும் எதிர்ப்புகளைச் சமாளிக்க நாம் நம்மைத் தயாராக்கிக்கொள்ள வேண்டும்.

உணவு உற்பத்திப்பெருக்கத்துக்கும், பொருளாதார வளத்துக்கும், பாதுகாப்புநடவடிக்கையிலும் நாம் அயராது உழைக்கவேண்டும்.

கிராமமக்களுக்கு கல்விவசதி யளிப்பது மிகவும் அவசியமான தொன்று. கிராமமக்கள் தமக்குள் ஏற்படும் விஷயங்களுக்கு தாமே தீர்வு காணும் முகமாகவே பஞ்சாயத்துக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதை அவர்கள் முறையாகப் பயன்படுத்தவேண்டும். தமதுதேவைகளைத் தாமே பூர்த்திசெய்யும் வகையில் அவர்கள் உழைக்க வேண்டும்.

நமதுநாட்டுக் குழந்தைகளுக்கும் லயது குறைந்தவர்களுக்கும் போதிய வசதிகள் செய்து கொடுப்பது நமது பொறுப்பு.

நாட்டின் சுதந்திரம் நாட்டிலுள்ள கிராம மக்களுக்கும் நாட்டிலுள்ள அத்தனை பேருக்கும் உரியது. நமது பழம் பெருமை வாய்ந்த பாரதநாட்டின் பெருமையை நாம் உணர்ந்து செயலாற்ற முற்படுவோம்.

நாடு பூராவும் குடியரசு விழா

பதின்மூன்றாவது குடியரசு ஆண்டு விழா இன்று நாடு பூராவும்கொண்டாடப்பட்டது. இந்த ஆண்டு குடியரசு விழா, வழக்கமான ஆடம்பரமான வைபவங்களின்றி எளியமுறையில் கொண்டாடப்பட்டது. முதற்தடவையாக இம்முறை, பாரதப் பிரதமர் நேரு மந்திரி சபையிலுள்ள பலஅங்கத்தினர்களுடன் அணிவகுப்பில்கலந்து கொண்டார்.

முப்பத்தியொரு தடவைகள் பீரங்கிகள் முழங்க முப்படை அணிவகுப்பு ஆரம்பமானது. ராஷ்டிரபதி டாகடர் ராதா கிருஷ்ணன் அணிவகுப்புகளை ஏற்றுக்கொண்டார். பீரங்கிப் படை, காவலர்படை, கடற் படை, விமானப்படை யாவும் வாத்தியகோஷ்டிகளுடன் அணிவகுத்துச் சென்றன. இதை யடுத்து, பல கிராமத் தொண்டர்கள் படைகளும் அணிவகுத்துச் சென்றன.

நேரு தலைமையில் அணிவகுப்பு

அடுத்து 4,000 பாடசாலை சிறுவர், சிறுமிகள் தேசியப் பாடல்கள் பாடி, அணிவகுத்துச் சென்றதைத் தொடர்ந்து பாரதப் பிரதமர் நேருவின் தலைமையில், மந்திரி சபை அங்கத்தினர்கள் கம்பீர நடைபோட்டு, ராஷ்டிரபதி ராதா கிருஷ்ணனுக்கு கரம் கூப்பி வணக்கக் தெரிவித்து அணிவகுத்துச் சென்றனர். மேடையில் நின்ற ராஷ்டிரபதி அணிவகுப்புக்கு மரியாதை செலுத்தினர். குடியரசு தின வைபவங்களைப் பார்வையிடுவதற்கு, தலைநகரில் குழுமியிருந்த லட்சக்கணக்கான மக்களுக்கு இக் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக விருந்தது. பார்லிமெண்ட் அங்கத்தினர்கள் அணிவகுத்துச் சென்றபொழுது, மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

அணிவகுப்பில் மாதர்கள்

மாதர்கள் இந்த ஆண்டு முதன் முறையாக அணிவகுத்துச் சென்றனர். காலை ஒன்பது மணிக்கு ஆரம்பமான அணிவகுப்புகள் பிற்பகல் இரண்டு மணி வரை நடைபெற்றன. கம்போடிய இளவரசர் நொரடும் சிகானுக் உட்பட பல வெளிநாட்டு தூதுவர்களும், பிரமுகர்களும் அணிவகுப்புகளை பார்வையிடும் பொருட்டு வந்திருந்தனர்.

புதுடில்லியில் நடைபெற்ற அதிகநேர அணிவகுப்புகளுடன், நாட்டின் ஏனைய ராஜ்யங்களிலும் குடியரசுதின அணிவகுப்புகள் நடைபெற்றன. அவசரகால நிலைமை குறித்து பல நிகழ்ச்சிகள் இம்முறை நடைபெறவில்லை.

'தளர்ச்சி கூடாது'

தமிழ்நாட்டில், அரசாங்க கட்டடங்களிலும், தனியார் கட்டடங்களிலும் தேசியக்கொடிகள் இன்று பறக்கவிடப்பட்டன. ஏழைகளுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. தமிழ் நாட்டில் 13 பொலிஸ் அதிகாரிகளுக்கு, அவர்களது சேவைகளைப் பாராட்டி பொலிஸ்பதக்கங்கள் வழங்கப்பட்டன. கூட்டமொன்றில் தமிழ்நாட்டு முதன் மந்திரி திரு. காமராஜர் பேசுகையில், நாட்டின் பாதுகாப்புக்காகத் தங்களது சேவைகளைக் கொடுக்க மக்கள் முன்வந்துள்ளனரென்றும், நாட்டை வலுப்படுத்தும் முயற்சியில் மக்கள்

(12-ம் பக்கம் பார்க்க)

தமிழரசுக்கட்சி செயற்குழு கூட்டம்

திருக்கோணமலை, சனி

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் இன்று நண்பகல் 12 மணிக்கு ஆரம்பமானது. திருக்கோணமலை எம். பி. திரு. ஆர். ராஜவரோதயம் தலைமையில் அவரது இல்லத்தில் நடைபெற்ற இக்கூட்டத்துக்கு வழக்கறிஞர் திரு. சி. சுதர வேற்பிள்ளை, திரு. ஏ. அமிர்தலிங்கம் எம். பி., திரு. முகம்மது அலி எம். பி., திரு. வி. என். நவரத்தினம் எம். பி., திரு. க. துரைரத்தினம் எம். பி. ஆகியோர் சமூகமளித்திருந்தனர். கடும்மழை காரணமாக ஏனையோர் சமூகமளிக்கவில்லையெனத் தெரியவருகிறது. அடைமழை காரணமாக நாளைவரை கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

இன்று தமிழரசுக் கட்சியின் திருக்கோணமலைக் கிளை புனருத்தாரணம் செய்துவைக்கப்பட்டது. புனருத்தாரணக் கூட்டத்தில் தமிழரசுக்கட்சி நிர்வாகச் செயலாளர் திரு.

(12-ம் பக்கம் பார்க்க)

கிரிக்கெட்

முதல் இன்னிங்ஸில் ஆஸி: 393.

அடலேட், ஜன 26

அவுஸ்திரேலியாவுக்கும் இங்கிலாந்துக்குமிடையே அடலேட் நகரில் நடைபெறும் நான்காவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில், இரண்டாவது நாளான இன்று அவுஸ்திரேலியா தனது முதலாவது இன்னிங்ஸில் மொத்தம் 393 ரன்கள் எடுத்தது. இங்கிலாந்து தனது முதல் இன்னிங்ஸில் 5 விக்கட்டுகள் நஷ்டத்துக்கு 192 ரன்கள் எடுத்தது.

நேற்று அவுஸ்திரேலியாக் கோஷ்டி, 5 விக்கட்டுகளை இழந்து 322 ரன்கள் எடுத்தது. இன்று தொடர்ந்து விளையாடியதால் மொத்தம் 71 ரன்கள் மட்டுமே எடுத்தது. இதன் பின்னர் இன்று விளையாடிய இங்கிலாந்து கோஷ்டி 5 விக்கட்டுகளை இழந்து 192 ரன்கள் எடுத்தது.

சிங்கள அறிவில்லாத ஆசிரியர் தற்காலிகமாக்கப்படுவர்

கல்வி இலாகாவின் புதிய விதி

கொழும்பு, சனி

அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்ட பாடசாலைகளில் கடமை புரியும் ஆசிரியர்கள் சிங்களத்தில் எட்டாம் வகுப்பு அறிவைப் பெறும்வரையில் அவர்களின் சேவை தற்காலிகமானதாகக் கருதப்படும். கல்வி இலாகாவின் இப்புதிய விதியினால் தமிழ், ஆங்கில ஆசிரியர்களே பெரிதும் பாதிக்கப்படுவார்கள் எனத் தெரியவருகிறது.

இருபது வருடத்திற்கு சேவை செய்த ஆசிரியர்கள் கூட சிங்களத்தில் எட்டாம் வகுப்பு அறிவைப் பெற்றே யாகவேண்டும்; அல்லாவிடில் அவர்களும் தற்காலிக ஆசிரியர்களாகவே கருதப்படுவர்.

இப் புதிய விதி ஆசிரியர்களுக்குப் பெரும் அதிர்ச்சியை உண்டுபண்ணியிருக்கிறது. இப் புதிய விதியின் பிரகாரம் ஆசிரியர்களின் சேவை தற்காலிகமானதாகக் கருதப்படுவதால், அவர்களின் சேவை நிரந்தரமாக்கப்படுவதற்கு முன்னர் இவர்கள் காரணமில்லாமல் வேலைநீக்கம் செய்யப்படலாம். இப் புதிய விதியை ஆட்சேபிப்பதற்கு ஆசிரியர்கள் யோசனை செய்துவருகிறார்கள்.

பாடசாலை

இடவசதி நெருக்கடி

பெற்றோர் வழக்கு தொடருவர்?

கொழும்பு, சனி

குறிப்பிட்ட பாடசாலையின் இரண்டு மைல் விஸ்தீரணத்திற்குள் வசிக்காத காரணத்தால் பல பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை பாடசாலையில் அனுமதிக்க முடியாமல் இருக்கின்றனர். இப் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை மேற்சொன்ன காரணத்திற்காக பாடசாலையில் அனுமதிக்காததைக்கோரி வழக்குத்தொடர உத்தேசித்திருக்கிறார்கள். இதுபற்றி இவர்கள் பல வழக்கறிஞர்களைக் கலந்தாலோசித்திருக்கிறார்கள். சட்டப்படி மேற்சொன்ன காரணத்தைக் கொண்டு பிள்ளைகளை, தலைமையாசிரியர்கள் அனுமதிக்காமல் இருக்கமுடியாது என வழக்கறிஞர்கள் தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

உங்கள் இராசி பலன்

சோதிட ஆசான் செ. தெல்லியூர் எழுதுவது

சுபகிருது ஆண்டு தைத் திங்கள் 14-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை (2-1-63) முதல் தைத் திங்கள் 20-ம் நாள் சனிக்கிழமை (2-2-63) வரை உள்ள பலன்கள்.

மேட இராசி

(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1-ம் பாதம்.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் உடல்நலக்குறைவு, விபத்துக்கள சிலருக்கு ஏற்படல், நண்பர்-உறவினர் தொல்லை, வீண் செலவு, சிலருக்குப் புத்திர பாக்கியம், தொழில் மேன்மையும்வருமானமும், வர்த்தகத்தில் ஆதாயம், கமத்தொழிலில்கடும்உழைப்பு, உத்தியோகத்தினருக்கு வருமான உயர்வு அல்லது இட மாற்றம், மாணவருக்குக கல்வியில் தடை, பெண்களுக்கு தேக நலக்குறைவு, கணவருக்கு இட மாற்றம், பணவசதி ஆகியன காணப்படும். இவர்களுக்கு ஜனவரி 27, 28, 31, பெப்ரவரி 1, 2 ஆதியன சுபதினங்களாகும்.

★

இடப இராசி

(கார்த்திகை பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடம் முன்னரை.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் செய்காரியத்தடை, தேகநலக்குறைவு, இனபந்துக்களிடைவிரோதம், திடீர்திடீரென இவை நீங்கி சுபம் அடைதல், பணச்செலவு, உத்தியோகத்தருக்கு மேலதிகாரிகளது எதிர்ப்பு, வர்த்தகத்துறையினருக்கு நல்ல ஆதாயமும் உத்தியோகத்தருக்குள் சிலருக்கு இடமாற்றமும் மாணவருக்கு கல்விவசதிகளும் கமத்தொழில் மத்திமபலிதமும், பெண்களுக்கு கலைமுன்னேற்றம், களத்திர புத்திரசுகம், பணவரவு ஆதியனவும் காணப்படும். இவர்களுக்கு ஜனவரி 27, 28, 29, 30, பெப்ரவரி 2 சுபதினங்களாகும்.

★

மிதுன இராசி

(மிருகசீரிடம் பின்னரை, திருவாதிரை, புனர்பூசம் முன்முக்கால்.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் தேகநலக் குறைவு, சந்தேகம், பல்லிவி போன்ற கஷ்டங்கள், குடும்பவாழ்வில் பணமுடை, மாணவரது கல்வி முன்னேற்றம் பாதிக்கப்படல், கமத்தொழில் மத்திமபலிதம், உத்தியோகத்திலுள்ளவர்களுக்கு வருமான மதிகரிப்பு, வர்த்தகத்துறையினருக்கு மந்தநிலை, பெண்களுக்கு கலைகளில் பற்று, உடல்நிலையில் கண், வாய், பல்வலி கஷ்டங்கள், குடும்பத்தில் சுகக்குறைவு, சிலரது கணவர் உத்தியோகங்களில் மாற்றம் செய்தல், விபரீத முறைகள் அதிகரித்தல் ஆதியன காணப்படுகின்றன. இவர்களுக்கு ஜனவரி 27, 29, 30, 31, பெப்ரவரி 1 சுபதினங்களாகும்.

★

கடக இராசி

(புனர்பூசம் நான்காம் பாதம், பூசம், ஆயிலியம்.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் மனநிம்மதியின்மை, சுகங்கெடுதல், வர்த்தகத்தில் மந்தநிலைமை ஏற்படல், வாக்குச் சாதுரியத்தால் ஓரளவு நற்பலன் கிட்டல், சகோதரர்களுக்கு கஷ்டம், கல்வி ற்கும் மாணவருக்கு மத்திமமான பலன், கமத்தொழிலாளருக்கு இனபந்துக்கள் கஷ்டம்விழைத்தலால் தொழிற்கேடு, உத்தியோகத்திலுள்ளவர்களுக்குநற்பலன், பெண்களுக்கு தேகநலக்கேடு, கணவருக்கு இடமாற்றம், அசுபசெய்தி கேட்டல், வெளிவிவகாரங்களில் தலையிடுவதால் அவப்பெயர் கிட்டல் ஆதியனவுண்டு. இவர்களுக்கு ஜனவரி 31, பெப்ரவரி 1, 2 சுபதினங்களாகும்.

★

சிங்க இராசி

(மகம், பூரம், உத்தரம் 1-ம் பாதம்.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் செலவுகள் அதிகரித்தல், காரியசித்தி, தொழில்களில் வெற்றி, வருமான அதிகரிப்பு, பதவி உயர்வு, கடன் நீக்கம், வர்த்தகத்துறையிலுள்ளவர்களுக்கு பெருமாதாயம், பழையன சேருதல், குடும்பத்தில் நிதானமாகப்பழகல் அவசியம், கமத்தொழிலாளருக்கு ஆதாயச்சிறப்பும் பயிர்த்தொழில் விருத்தியு , மாணவருக்கு கல்விச்சிறப்பு, பெண்களுக்கு உத்தியோகத்திலுள்ளவர்களுக்கு உயர்வு, வருமான மதிகரிப்பு, கன்னியருக்கு விவாக முயற்சிகள் நடத்தல், சிலருக்கு பிரயாணம், சிலரது பெற்றோருக்கு தேகநலக்குறைவு ஆதியன காணப்படுகின்றன இவர்களுக்குஜனவரி 27, 28, பெப்ரவரி 2 சுபதினங்களாகும்.

★

கன்னி இராசி

(உத்தரம் பின் முக்கால், அத்தம், சித்திரை முன்னரை)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் புதியவழி துறைகளில் முயற்சிகள் செய்தல், சுபகருமங்களிற் பணச் செலவு, குடும்பத்தில் ஆரோக்கியக்குறைவு, இதனால் வைத்தியச்செலவு, வர்த்தகத்துறையினர் புதிய முறைகளில் தொழில் கலை விருத்திசெய்து ஆதாயம் பெறுவர், மாணவருக்குக் கல்வி அபிவிருத்தி, விவாகப் பேறுகள் சிலருக்குக் கிட்டுதல், கமத்தொழிலில் ஈடுபட்டோர் பொறுமையாக இருப்பின் நற்பலன் அடைதல், பெண்களுக்கு களத்திர புத்திரச் சிறப்பு, கணவருக்கு உத்தியோக உயர்வு, உல்லாசப் பிரையாணம, தெய்வவழிபாடு ஆகியன காணப்படுகின்றன. இவர்களுக்கு ஜனவரி 27, 28, 29, 30 சுப தினங்களாகும்.

★

துலா இராசி

(சித்திரை பின்னரை, சுவாதி, விசாகம் முன்முக்கால்)

இவவிராசியாளருக்கு இவ்வாரத்தில் நற்பலன்கள் அதிகரித்து புதிதாக சொத்துக்கள் தேடிக்கொள்ளல், சுயமாக தொழில்ஸ்தாபனங்களை அமைத்தல், கமத்தொழிலில் பயிர் வருவாய் அதிகரித்தல், இனி கால்நடைப்பயன்களால் இலாபம் கிட்டுதல், வர்த்தகர்களுக்கு ஆதாயச் சிறப்பு, மாணவருக்கு கல்வியில் முன்னேற்றம், பெண்களுக்கு சுபகரும முயற்சிகள், கணவருக்கு உத்தியோகச் சிறப்பு, வருமானமதிகரிப்பு, புதல்வருக்கு நற்பலன் ஆகியன காணப்படுகின்றன. இவர்களுக்கு ஜனவரி 28, 29, 30, 31 பெப்ரவரி 1 சுபதினங்களாகும்.

★

விருச்சிக இராசி

(விசாகம் 4-ம் பாதம், அனுஷம், கேட்டை)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் தேகசுகம், பொருள்வரவு, கடன் நிவர்த்தி, உத்தியோகத்துறையினருக்கு பதவி அந்தஸ்து உயர்தல், மேலதிகாரிகள் ஆதரவு, இனபந்துக்கள் உதவி, வர்த்தகத்துறையில் உயர்ச்சியும் ஆதாயப் பெருக்கமும், குடும்பவாழ்வில் சிறப்பு, மாணவருக்கு கல்விச்சிறப்பு, கமத்தொழிலில்மத்திம பலிதம், பெண்களுக்கு இஷ்ட சித்தி, கணவரால் நற்பலன், ஆகியன காணப்படுகின்றன. இவர்களுக்கு ஜனவரி 31, பெப்ரவரி 1, 2 சுபதினங்களாகும்.

★

தனு இராசி

(மூலம், பூராடம், உத்தராடம் 1-ம் பாதம்)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் குடும்ப கஷ்டம், கடன்படுதல், சச்சரவு, வர்த்தகத்துறையில் தொழில் விருத்தி, பண ஆதாயச்சிறப்பு, கமத்தொழில் நற்பலிதம், உத்தியோகத்துறையினருக்கு சிலருக்கு பதவியிலிருந்து ஓய்வு பெறுவதற்கான முயற்சிகள் நடத்தல், பலர் இடமாற்றம் பெறுதல், பெண்களுக்கு கல்வி கலைகளில் விருத்தி, உடல்நலக் குறைவு, களத்திர புத்திர சுகங்கள் பாதிக்கப்படல் ஆதியன காணப்படுகின்றன. இவர்களுக்கு ஜனவரி 27, 28, பெப்ரவரி 2 சுபதினங்களாகும்.

★

மகர இராசி

(உத்தராடம் பின்முக்கால் திருவோணம், அவிட்டம் முன்னரை.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் எதிர்ப்புகள் இருப்பினும மனந்தளராத நிலை, தேகசுகத்தல் ஓரளவு பாதித்தல், பிரயான கஷ்டம், மாணவருக்குக் கல்விப்பயிற்சி தடை, இனபந்துக்களால் கஷ்டம், வர்த்தகத்துறையில் பணக்கஷ்டம், தொழில் மந்தம், உத்தியோகத்தருக்கு இடமாற்றம், கமத்தொழிலாளருக்கு இது சோதனைகரிய வாரம், பெண்களுக்கு கஷ்டங்கள் விலகுதல், தாம்பத்திய வாழ்வில் விரக்தி, கணவருக்கு இடமாற்றம் ஆதியன காணப்படுகின்றன. இவர்களுக்கு ஜனவரி 29, 30 சுபதினங்களாகும்.

★

கும்ப இராசி

(அவிட்டம்பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால்)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் எண்ணியவை நிறைவேறல், பிரயாணங்கள் ஏற்படல், எதிர்ப்புகள் குறைதல், வர்த்தகத்துறையினருக்கு ஆதாயச் சிறப்பு, தொழில் முன்னேற்றம், விவசாயிகளுக்குப் பயிர் பலிதம், உத்தியோகத்துறையினருக்கு இட மாற்றம், பெரியோர் ஆதரவு, கன்னியருக்கு விவாக நிச்சயம், கணவருக்கு நற்பலன் ஆதியன காணப்படுகின்றன. இவர்களுக்கு ஜனவரி 27, 28, 31, பெப்ரவரி 1 சுபதினங்களாகும்.

★

மீன இராசி

(பூரட்டாதி நாலாம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் முன்னேற்றப் பாதையில் வெற்றிகளும், தொழிற் சிக்கல்களும் அமைதல், பணவருவாய் காணல், பிறநாட்டு வர்த்தகச்சிறப்பு, வர்த்தகத்துறையில் உள்ளவர்கள் தொழிலை விருத்திசெய்தல், குடும்பத்தில் ஒற்றுமை, உத்தியோகத்துறையில் உள்ளவர்களுக்கு மேலதிகாரிகள் ஆதரவு, மாணவருக்குக் கல்விச்சிறப்பு, கமத்தொழிலாளருக்கு மத்திமபலிதம், பெண்களுக்கு குடும்பவாழ்வில் சிறப்பு, விரும்பியவை கிட்டல் ஆதியன காணப்படுகின்றன. இவர்களுக்கு ஜனவரி 29, 30, பெப்ரவரி 2 சுபதினங்களாகும்.

நமது நூல் நிலையம்

ஆதிகால — மத்திய கால இலங்கைச் சரித்திரம்: ஆசிரியர்: வ. மகாலிங்கம்; வெளியீடு: ஸ்ரீகாந்தா அச்சகம், யாழ்ப்பாணம்; விலை: ரூ. 2-50

எச். எஸ். வி. பல்கலைக் கழகப் புகுமுக வகுப்புகளின் பாடத்திட்டத்தை அடிப்படையாகக்கொண்டு இந்நூல் எழுதப்பட்டுளது. இலங்கை வரலாற்றுடன் வேண்டிய இடங்களில் இந்திய வரலாற்றினையும் இணைத்து இந்நூலை ஆக்கியுள்ளார். ஆட்சித்துறை வரலாற்றை மாத்திரம் எழுதாமற் சமயம், சமூக கலாச்சாரம போன்றவற்றைப் பற்றியும் எழுதியுள்ளார் என, ஆசிரியரின் முயற்சியைப் பேராசிரியர் ச. பேரின்பநாயகம் பாராட்டியுள்ளார். இலகுவான நடையில் எழுதப்பெற்றுள்ள இந்நூலை உயர்ந்த தாளில் அச்சிட்டிருக்கலாம்.

●

கலைச்செல்வி (பொங்கல் மலர்): **ஆசிரியர்கள்:** சிற்பி, தமிழ்ச் செல்வன்; **வெளியீடு:** பாலன் வெளியீடு, செட்டிகுளம்; **தனிப்பிரதி விலை:** ச. 50

கலைச்செல்வி மாத இதழில் முந்திய சில பிரதிகளை ஒருதடவை பார்க்க நேரிட்டபோது இது இலங்கையில் நடைபெறும் முயற்சியா, இவ்வளவு கண் கவர்ச்சியாக அச்சிட்டுப் பத்திரிகை வெளியிடுவது இங்கெல்லாம் இப்பொழுது எப்படிச் சாத்தியப்படுகிறதோ என வியப்பாக இருந்தது.

'கலைச்செல்வி' பொங்கல் மலரோ அதற்கு இன்னும் ஒருபடி மேலேபோய் நமது கண்ணையும் கருத்தையும் ஒன்றுக அள்ளிச்செல்லும் புதுமைப் பொலிவுடன் வெளிவந்திருக்கிறது.

சிறுகதை, கவிதை, கட்டுரை, கருத்துரை என ஒரு சிறந்த மாத சஞ்சிகைக்கு இருக்க வேண்டிய எல்லா நல்ல அம்

(5 ம் பக்கம் பார்க்க)

ஸி. டபிள்யூ. ஈ.
உங்களுக்கு அளிக்கும்
சிறந்த ஒலி இணைப்புகளை
உங்கள் வீட்டில்
பொருத்துங்கள்

மேற்கு ஜெர்மனியிலிருந்து தருவிக்கப் பெற்ற இச் சிறந்த ஒலி இணைப்புகள் உங்கள் வீடுகளுக்கு புதியதோர் அழகைத் தருகின்றன. அது மட்டுமா? உங்கள் ஒவ்வொருவருக்கும் நல்ல பிரகாசத்தையும் அவை அளிக்கின்றன.

கிடைக்குமிடம்

ஸி. டபிள்யூ. ஈ. ரேடியோ இலாகா,
85, மெயின் வீதி, கொழும்பு.

ஸி. டபிள்யூ. ஈ.
பிறின்ஸ் வீதி, கோட்டை.

ஸி. டபிள்யூ. ஈ. ரேடியோ இலாகா
131, வாக்சால் வீதி, கும்பனித் தெரு.

சிறுகதை

இதயம் தாங்குமா?

வசந்தி தென்னோலைக்குச் சீறிதளவு நீர் தெளிக்கும் போது பணம் வரட்சியாய் இருந்த தனது உளத்திற்கே நீர் ஊற்றுவது போல் இருந்தது. முற்றத்தில் நனைந்த ஓலையைப் போட்டுவிட்டு வழமை போல் பாவாடையை முழங்காலுக்குச் சீறிது பதிவாக இருக்கக்கூடியதாகப் பிடித்துக் கட்டிவிட்டுக் குந்தியிருந்து கொண்டு பின்னினுள்.

சு. துரைசிங்கம்

மழைபெய்து ஓய்ந்ததும் புற்றீசல்கள் வெளியே பறந்து வருவதுபோல் நான்குமணி அடித்ததும் பாடசாலைமாணவர்கள் வீடுநோக்கி விரைந்து கொண்டிருக்கின்றார்கள். இவர்களைத் தொடர்ந்து பள்ளிக்கூட ஆசிரியர்கள் சைக்கிளிலும் மோட்டாரிலுமாகச் செல்கின்றார்கள்.

ஒரு படியாக வீதியிற்சன நடமாட்டம் குறைந்துவிட்டது.

எல்லா ஈசல்களும் வெளியே பறந்தபின் ஒன்று மாத்திரம் கடைசியாகப் புற்றுக்குள் இருந்து வெளியேறி மெல்ல மெல்லப் பறப்பது போல் ஒரு மாணவியும் இப்பொழுதுதான் செல்கின்றாள். அவளின் வாயின் இருகடைகளும் கீழ் நோக்கி வளைந்து இருக்கின்றன. இதனால் முகத்தில்சோக ரேகைகள் பதிந்திருப்பது புலனாகின்றது. எதற்காக இப்படிப் பின்னே போகவேண்டும்? யாராயினும் ஆசிரியர்கள் அடித்தார்களோ? மாணவர்கள் தான் அடித்தார்களோ? எதைத்தான் கொள்வது என்பதைத் தவிர வேறு எதுவும் சொல்ல முடியாதே? இருந்தும் பின்னேயின் பின்புறச்சட்டையில் ஏதோ கறுப்பாகத் தெரிகிறதே ...

அந்தப் பெண்ணின் வீடு பள்ளிக் கூடத்திற்குக் கிழக்கே செல்லும் வீதியின் வலதுபக்கத்தில் அரைமைல் தூரத்தில் உள்ளது அதே வீடுதான் வன்னிமாட்டு வியாபாரி பேரம் பலத்துடன் செல்லும் கந்தையாவின் வீடும்.

பள்ளிக் கூடத்தால் வரும் வசந்தியின் தந்தை தான் கந்தையாவும். பிறந்த மூன்றும் மாதத்திலேயே தாயைப் பறிகொடுத்த வசந்தியைத் தகப்பனரின் தாயாகிய பாட்டிதான் வளர்க்கிறாள்.

பள்ளிக் கூடத்தால் வந்த வசந்தி, படலையைத் திறந்து கொண்டு வீட்டுக்குச்சென்று உடைகளை மாற்றிவிட்டு. பள்ளிக் கூடத்திற்கு அணிந்து சென்ற சட்டையையும்தேய்ந்த நீலக்கட்டி சவர்க்காரத்தையும் எடுத்துக்கொண்டு கிணற்றடிக்குச் செல்கின்றாள்.

கிணற்றடிக்குச் செல்லும் வசந்தியைக் கண்ட பாட்டி "என்ன பிள்ளை நேத்தெல்லே உந்தச் சட்டை தோச்சனி, அதுக்கிடேலை என்ன தோச்சல்" என்றவள் சட்டையில் ஏதோ அழுக்குப்படிந்திருப்பதைக் கண்டதும் "உதென்ன சட்டேலை கறுப்புப்பொட்டுப் பொட்டாய்ப் பிரண்டு கிடக்கு" என வினவினாள்.

"அதெண வகுப்புப் பிள்ளையள் மைதெளிச்சுப் போட்டுதுகள். அதுதான் தோய்க்கப் போறன்."

"என்ன சண்டை பிடிச்சனீங்களே? அதுக்கு மையேதெளிக்கிறது? அதுக்கென்ன செய்யிறது. இந்தக்காலத்துப் பிள்ளையள் இப்பிடித்தான்."

"சண்டையில்லையெண இன்டைக்கு "ஏப்ரல் பூல்." அதாவது பொடியளும் சரி, பெரிய மனிதரும் சரி என்ன பிழை தான் செய்தாலும் குற்றமாக எடுக்கக் கூடாதாமெண. அதுதான் நான் வாத்தியாரிட்டையும் சொல்லேல்லை."

"எட அதுவும் அப்படியொரு காலிருக்கே."

"பின்னை என்னெண, பள்ளிக் கூடத்திலை வாத்தியார் ஒருத்தருக்கு ஒரு பார்சல் வந்தது. அதைப் பிரிச்சுப்பார்த்தால் தவக்கையள் பத்துப் பதினேந்து கிடந்ததுகள்."

"எட பெரிய ஆக்களும் இப்படிச் செய்யிறதோ? இந்த இங்கிலீசாலைதான் ஏதோ புதிசு புதிசெண்டு பொடியளெல்லாம் கெட்டுப்போய்ச்சுதுகள்."

பேச்சை நிறுத்திவிட்டுக் கிணற்றடிக்குச் சென்ற வசந்தி சட்டையையும், சவர்க்காரத்தையும் கல்லில் வைத்துவிட்டு, தான் கட்டியிருந்த பாவாடையின் நடுப்பகுதியைப் பிடித்து உயர்த்திக்கீழ்ப் பாவாடையில் நீர் படாதபடி மடித்துக்கட்டிவிட்டு, தண்ணீரை அள்ளி தோய்க்கும் சட்டையை நனைத்து, அடிக்கும் கல்லில் வைத்துச் சவர்க்காரம் போடுகின்றாள். அப்பொழுது கண்ணடி வலையல்களின் ஒலியும் கேட்கத் தவறவில்லை.

ஒருதரம் சவர்க்காரம் போட்டு அடித்து அலம்பியும் விட்டாள். ஆனாலும் மைக்கறை சிறிதளவு இருக்கத்தான் செய்தது.

அட இப்படி மைக்கறை போகாதபடி யார் கூடுதலாகத் தெளித்திருப்பார்கள். யாருமல்ல வகுப்பில் வசந்திக்குப் பக்கத்திலிருக்கும் சரோதான்.

இடைவேளைக்குப்பின் பள்ளிக் கூடம்தொடங்கி இரண்டாம் பாடம் நடைபெற்றுமுடிந்ததும் அடுத்து கணிதஆசிரியர் வருவதற்கிடையில்தான் சரோ வசந்திக்கு இப்படி மைதெளித்தாள்.

கணித ஆசிரியர் வந்ததும் வசந்தியின் முதுகுப்புறச் சட்டையில் பெரிய அளவில் மை இருப்பதைக் கவனிக்கத் தவறவில்லை.

"நேற்றுத்தந்த கணக்குகள் பார்க்கவேண்டும். முன்வரிசையிலிருந்து ஒவ்வொருவராகக் கொண்டு வாருங்கள்" இது கணித ஆசிரியரின் கட்டளை.

முன்வரிசையில் இருப்பவர்கள் பெண்கள் தானே. ஆதலால், அவர்கள் ஒவ்வொருவராகக் காட்டிக்கெண்டுவருகிறார்கள். வசந்தியின்முறையும் வந்துவிட்டது. கடுதாசியிற் செய்த கணக்குகளைப் பழைய கணக்குக் கொப்பிக்குள் வைத்துக்கொண்டு தயங்கித்தயங்கிச் சென்றவளின் முதுகுப்புறச் சட்டையைக்கவனித்தவகுப்பே பெரும் ஆரவாரத்துக்கு ஆயத்தப்படுத்தியது. இருந்தாலும் கணக்குவாத்தியாரின் தண்டனைக்குப் பயந்து அடங்கிவிட்டது.

கல்லூரியில் விளையாட்டுப் போட்டிக்கு ஏற்றி வைத்த கொடி காற்றிலே படபடப்பது போல் வசந்தியின் நெஞ்சமும் படபடத்தது. சிந்தனையோ "இவ்வளவு மாணவர்களுக்கு முன்னால் அடிப்பாரோ அல்லது என்ன தண்டனைதான் செய்யப் போகின்றாரோ" என்று அலைமோதிக்கொண்டிருந்தது.

"வசந்தி, யாரை ஏமாற்றப் பாக்கிறாய். புதுக்கொப்பி வேண்டிக் கணக்குச்செய்து கொண்டுவரச்சொல்ல நீ கூடதாசியிலை செய்துபோட்டு அதுவும் கொப்பிக்குள்ளை செருகிக் கொண்டு வாறாய்." இவ்வேளையில் வசந்தியின் நிலையைப் பார்த்தால் எந்த மனித இதயம் தான் இரங்காது. "சரி, இன்றைக்குமட்டும் மன்னித்து விடுகின்றேன். நாளைக்குப் புதுக்கொப்பி வேண்டிக்கணக்குச் செய்துகொண்டு வரவேண்டும், விளங்குதா? இல்லாவிடில் தலைமையாசிரியரிடம் சென்று அடிவாங்க நேரிடும்." ஆசிரியர் சொன்னதை ஏற்றுச் செய்வதாக வசந்தியின் தலை இலேசாக அசைகிறது.

துக்கம் நெஞ்சையடைக்கக் கண்கள் இரண்டிலும் நீர் முட்டி எப்பொழுதும் கன்னங்களிற் புரளலாமென்றிருக்கின்றன. வகுப்பிலுள்ளோர் வசந்தியைப் பரிவோடு நோக்குகின்றனர். வசந்தியின் கண் இமைகள் இலேசாக அசைகின்றன. கண்ணீர் விழுந்து விட்டதா? இல்லவே இல்லை. நீர் கண்மடலுக்குள் செல்கின்றது.

ஆசனத்தில் வந்தமர்ந்த வசந்தி மற்றவர்கள் எவரையும் கவனியாது, பிழைவிட்ட கணக்குகளைச் செய்துகொண்டிருந்தாள்.

கணக்கு வாத்தியார் முன்னர் ஒருபோதும் அப்படிக் கடிந்து பேசியது கிடையாது. அவர் ஒரு தங்கமான மனிதன். எந்த மாணவர்களுடனும் அன்பாகப் பழகுவார். அப்படிப்பட்டவர் இப்படிக் கடிந்து பேசலாமா? அவர் கடமையைத் தானே செய்தார்.

சட்டையைத் தோய்த்துக் கொடியிற் போட்டு விட்டு "எணை காசு கிடந்தா ஒரு பதினஞ்சுசதம் தாணை, கணக் கொப்பியொண்டு வேண்டவேணும்."

"உன்னணை இல்லைப் பிள்ளை. கொப்பரும் தந்திட்டுப் போனதெல்லாம் செலவாப் போச்சு. நானென்ன செய்ய. அங்காலை பவளம் அக்காட்டைக் கேட்டுப்பார்."

வசந்தியும் காசு கிடைத்து விட்ட நினைப்பில் பவளத்தின் வீட்டுக்குச் சென்றாள். வசந்தியைக் கண்ட பவளம் காய் பிஞ்சு அரிவதையும் நிறுத்திவிட்டு முந்தானையால் நெற்றியில் சிலிர்த்திருந்த வியர்வையைத் துடைத்துவிட்டு, "தங்கச்சி வா, வா. என்ன விசேஷம். ஆச்சி என்ன சொல்லிவிட்டவ."

"உங்களிட்டை ஐம்பது சதம் இருந்தால் வேண்டியரட்டாம்."

"இரு தங்கச்சி, பார்த்துக் கொண்டு வாறன்" என்று சொல்லிவிட்டு வீட்டுக்குள் சென்றவள் ஏமாற்றத்தின் சுவடுகள் முகத்தில் படிய அறைக்குள்ளிருந்து வந்தாள் பவளம்.

"தங்கச்சி சில்லறையாக ஒன்றுமில்லை. ஐம்பது ரூபா நோட்டுத்தான் ஒன்று கிடக்கு. என்ன தங்கச்சி செய்ய நான். குறைநினைக்க வேண்டாமென்று ஆச்சியிட்டைச் சொல்லு தங்கச்சி."

"அதுக்கென்ன அக்கா. பறவாயில்லை, நான் போயிட்டு வாறன்" என்று விடைபெற்றுச் சென்ற வசந்தியின் வதனத்தில் சோக ரேகைகள் படர்ந்தன. உளத்தில் கொப்பி எப்படி வேண்டலாமென்று எண்ணங்குமைய, பார்வையை வானத்திலே விட்டுக்கொண்டு செல்கின்றாள். இடையே தனது இருகைகளாலும் மேற்சட்டையின் கீழ்ப்புறத்தைப் பிடித்துப் பாவாடை கட்டிய நாடா மறையும் படியாக இழுத்து விட்டுக்கொண்டு செல்கின்றாள்.

வசந்தியின் வருகையைக் கண்ட பாட்டி "என்ன பிள்ளை பவளம் காசு தந்ததோ?" என்றாள்.

"அவவிட்டை இல்லையாமெணை."

"என்ன பிள்ளை செய்யிறது நான். கொப்பரும் நாளைக்கு வந்துவிடுவார். பிறகு கொண்டு போகலாம். வாத்தியாரிட்டையும் சொல்லு, நாளைக்குக் கொண்டு வாறதெண்டு."

"அவர் அடிப்பாரணை..."

முற்றத்தில் பாட்டியுடன் உரையாடிக்கொண்டிருந்த வசந்தி கிணற்றடிப் பக்கமாகத் தனது பார்வையைச் செலுத்தினாள். ஆடுகாலுக்குப் பக்கத்தில் நின்ற தென்னையிலிருந்து ஓலை ஒன்று வீழ்ந்து கிடந்தது. இதைக் கண்ட வசந்தி பின்னதேவையில்லை. பதினைந்து சதம் கிடைத்தாலே போதும். நாற்பது பக்கச் சதுரமாவது கொப்பியும் பதினைந்து சதம் தான். பள்ளிக்கூடத்திற்குப் பக்கத்திலுள்ள ஆறுமுக அம்மான் கடையில். நாளைக் காலை ஏழு மணிக்கு வேண்டி, கணக்குகள் எல்லாம் செய்துவிட வேண்டும். இவை வசந்தியின் எண்ணத் திரையில் நிழலாடின.

பின்னிய இடத்திலேயே கிடுகைப் போட்டுவிட்டு, கிணற்றடிக்குச் சென்று கால், கை அலம்பிவிட்டு, பக்கமட்டைகளால் சுவரெழுப்பட்ட அடுக்களையின் படலையைத் திறந்து கொண்டு உணவு அருந்தச் செல்கின்றாள்.

சாப்பிடும்பொழுது பாட்டியையும் அழைத்துத்தான் சாப்பிட்டாள். அந்தச்சோறு வியர்த்திருந்தது.

பாட்டி காலை பதினொரு மணிக்கு அரைக்கொத்து அரிசிச்சோறு ஆக்குவாள். அதை மத்தியானம் சாப்பிட்டுவிட்டு அரைவாசிக்கு மேலிருக்கும் சோற்றை இரவுச் சாப்பாட்

[8-ம் பக்கம் பார்க்க]

உருவகக்கதை

குழந்தையும் ரோசாவும்

— 'சசிபாரதி' —

முற்றத்திலே எனது மனைவி குழந்தைக்கு நடை பழக்கிக் கொண்டிருந்தாள். நான் விருந்தையிலிருந்து அவதானித்துக்கொண்டிருந்தேன்.

நடை பயின்றுகொண்டிருந்த குழந்தை திடீரென்று உட்கார்ந்து மேலே பார்த்தது. முற்றத்துப் பந்தரிலே மலர்ந்திருந்த ஒரு ரோசா மலரைக் கண்டுவிட்டது. அதைப் பறித்துத் தரும்படி கேட்கின்ற பாவனையில் "... ம்மா... ம்... ம்..." என்று தன் பிஞ்சுக்கையை மேலே உயர்த்தி, அந்த ரோசா மலரைக் காட்டியது. மலரைப் பறிப்பதற்கு அம்மா கையை உயர்த்திப் பார்த்தாள்; எம்பிக்குதித்துப் பார்த்தாள். மலர் கைக்கு எட்டவில்லை. கிட்டே இருந்த ஒரு மல்லிகை மலரைப் பறித்துக்கொடுத்தாள். குழந்தை அதை வாங்கிக்கொள்ளவில்லை. கோபத்துடன் தாயின் கரத்திலிருந்த மலரை மண்ணிலே தட்டிவிட்டது.

குழந்தை மீண்டும் மேலே பார்த்து அந்த ரோசா மலரைக் காட்டி "...ம் ...ம்" என்றது. "நீ சரியான குறும்புப் பாப்பா" என்றபடி செல்லமாகக் குழந்தையை ஏசிக்கொண்டே வேறோர் அழகிய மலரைப் பறித்துக் கொடுத்தாள் அம்மா. அதையும் வாங்கிக்கொள்ளாமல் குழந்தை நிலத்திலே விழுந்து புரண்டு கொண்டே அழத் தொடங்கி விட்டது. தாய் எவ்வளவோ சமாதானம் செய்தும் குழந்தையின் அழுகை ஓயவில்லை.

குழந்தை அழுவது எனக்குச் சகிக்கவில்லை. முற்றத்துக்கு இறங்கிவந்து, "குழந்தை ஏன் அழுகிறாள்?" என்றேன். "உயரே இருக்கின்ற அந்த ரோசா மலரைப் பறித்துத் தரட்டுமாம்" என்று மேலே பந்தரிலுள்ள ஒரு ரோசா மலரைக் காட்டி "இப்பொழுதே என்ன பிடிவாதம் பாருங்களேன்" என்றாள் மனைவி.

குழந்தை 'வீல்' என்று அழுதுகொண்டிருந்தது. நான் ஒரு தடியின் உதவியுடன் அந்த ரோசா மலரைப் பறித்துக் குழந்தையிடம் கொடுத்தேன். குழந்தை தன் பொக்கை வாயைப் பிளந்து சிரித்தது. நான் மீண்டும் விருந்தையில் போய் உட்கார்ந்துகொண்டேன்.

●

"...ம்மா... ம்... ம்..."

திரும்பிப் பார்த்தேன். அவள் மலர்ச்செடிகளுடன் பேசிக்கொண்டிருந்தாள். குழந்தை மீண்டும் சப்தம் செய்கிறது. அவள் குழந்தையண்டை வருகிறாள். தன இருகரங்களையும் உயர்த்தி, தன்னைத்தூக்கிக்கொள்ளும்படிகுழந்தை பாவனை செய்கிறது. "ராஜா, கண்ணே" என்று அவள் தூக்கிக்கொள்ளுகிறாள். குழந்தை, தாயின் இடையிலிருந்துகொண்டு 'கெக்கொலி' கொட்டிச் சிரிக்கிறது.

நான் பறித்துக்கொடுத்த அந்த ரோசா மலரின் இதழ்கள் கசங்கியபடி அங்கொன்றும் இங்கொன்றுமாகப் புழுதியில் கிடந்தன.

(சென்றவாரத் தொடர்ச்சி) ஈழத்துச் சிறுகதைகள்

சிறுகதை இலக்கியத்தில் எல்லைக்கோடுகளுக்கு இடமில்லை

— சு. வே. —

ஈழத்துச் சிறுகதைகளிலே மாமூலான வாழ்க்கை நிகழ்ச்சிகளையோ, அடிபட்டு அடிபட்டு பழையதாகி வாசகர்களுக்குச் கலிப்புத்தரும் கதாபாத்திரங்களையோ காணமுடியாது. நிகழ்ச்சிகளிலும் சரி கதாபாத்திரங்களிலும் சரி ஒரு புதுமையான, தனித்துவமான தன்மையையே காணமுடியும். இத் தனித்துவம் ஈழச் சிறுகதைகளுக்கமைந்த நல்லியல்புகளுள் முக்கியமானதென்று கூறலாம். இத்தனித்துவம் உள்நாட்டுச் சரக்கு என்ற காரணத்தாலோ, அன்றி, தமிழகக் கதைகளையும் மேல்நாட்டுக் கதைகளையும் வாசித்து அதிலே திழைத்த பழக்கதோஷத்தாலோ சிலருக்கு அவை அருவருப்பைத் தருகின்றன.

ஈழத்துச் சிறுகதைக்குரிய கதைப் பொருள்களை அவதானித்ததோடமையாது, அவற்றை நம் எழுத்தாளர் எவ்விதம் நடத்திக் கதை சொல்கிறார்கள் என்றும் அறிதல் நன்மைபயக்கக்கூடிய தொன்று. அதற்குமுன் இலக்கிய சிருட்டிகள் பற்றியும் இலக்கிய கர்த்தாவுக்கும் வாசகனுக்குமுள்ள தொடர்பு பற்றியும சிந்தித்தல் நன்று. இலக்கியத்துறைகள் எதற்குமே எல்லைக்கோடிட்டு இன்ன இன்ன எல்லைக்குள் அடங்குபவை தாம் உயர்ந்தன; ஏனைய தாழ்ந்தன என முடிபுகட்டி விடுதல் இயலாது. இலக்கியம் பொழுதுபோக்கிற்கென்றே, சமூகசீர்திருத்தத்துக் கென்றே, தொழிலாளர் நலவுரிமைக்கென்றே, மொழி-, இனம், கலை இவற்றின் உயர்வுக்காக என்றே, வாசகர்களின் அறிவுப்பசிக்கும் ஏனைய அசுரப்பசிகளுக்குமான உணவுக்காக வென்றே வரையறுத்தல் இயலாது. எக்காலத்திலும் இந்த எல்லைக்கோடு நிரந்தரமாய் நிற்பதில்லை. மேற்கூறிய எல்லாவற்றின் கலப்பினாலே, புதிதுபுதிதான மனோபாவ விரிவிலே, இலக்கிய வெள்ளம் பெருகி அலைமோதுகையில் இந்த எல்லைக்கோடுகள் வெறும் மாயக் கோடுகளாய் மறைகின்றன. அன்றி விடாப்பிடியாய் இலக்கியத்துக்கு இதுதான் நோக்கம் இதுதான் எல்லை என்று ஒன்றைத்தாபித்தால் அது பூரணத்துவமான இலக்கியத்திற்கு மாசு கற்பித்ததாகும். இயற்கை அழகு என்ற ஒன்று பலபல வேளைகளிலே, பலபல கோணங்களிலே பிரகாசிக்கும் போது அவற்றுளொன்றை உயர்ந்த அழகு என்றும் இன்னொன்றைத் தாழ்ந்த அழகென்றும் கூறமுடியுமா? அழகு என்றுமே அழகுதான். அப்படியே இலக்கியமும் என்று கூறலாம்.

உள்ளீடு

இலக்கிய கர்த்தா யதார்த்தபூர்வமான ஒன்றையே, யதார்த்தத்தை உள்வீடாக்கித் தன் மனோபாவ நறுந்தேன் பூசிய கற்பனையையோ அக்கற்பனையிற் கண்ட லட்சியத்தையே வாசகனுக்கு அறிமுகப்படுத்த முயல்கிறான்; அன்றியும் தன் எண்ண அலைகளையும் அவற்றில் வீழ்ந்த அசைவுகளையும் கவர்ச்சிகளையும் அனுபவங்களையும் அவ்வனுபவங்களின் தனி இழைகளையும் அறிமுகப்படுத்த முயல்கிறான். இந்த அறிமுக முயற்சியில் சிருட்டிகர்த்தாவிடமிருந்து வாசகன் கிரகித்துகொள்வது அவனது சிருட்டியின் உள்ளீட்டையேயன்றி சொல்லும் முறையையன்று. ஆனால் சிருட்டி கர்த்தாவுக்கு உள்ளீட்டைப்போன்றே அவ்வுள்ளீட்டை வெளிப்படுத்தும்—வாசகனுக்கு அறிமுகப்படுத்தும் முறையும்—உத்தியும் மிக முக்கியமானதாகும். அவனது கதை சொல்லும் உத்தியினாலேதான் வாசகன் மனதிலே கதையின் உள்ளீடு பதிகிறது என்று சொல்லலாம். அறிமுக முயற்சியில் உத்திகளனைத்தும் கருவி மாத்திரமே. அறிமுகப்படுத்தும் முறையினாலே—உத்தியினாலே வாசகன் தான்கண்ட அனுபவத்திற் சில சமயம் புதுமையையும் சிலசமயம் தன்காட்சியோடொட்டிய அங்கீகரித்தலையும் சிலசமயம் வியப்பையும் பெறுகிறான். இந்த உணர்ச்சிக் கூட்டத்தோடு சிருட்டிகர்த்தா கூறும் உள்ளீடு வாசகன் மனதில் இறங்குகிறது. எப்போது வாசகன் சிருட்டிகர்த்தாவின் உள்ளீட்டை முற்று முழுதாக வெகு ரசனையோடு கவர்கிறானோ அப்போது சிருட்டிகர்த்தா கையாண்ட உத்தி பூரண வெற்றியளிக்கிறதென்னலாம். சிருட்டிகர்த்தா, தன் கருத்து வெளிப்பாட்டுக்காக, புதிய புதிய உத்திகளைக் கையாண்டு சோதனை புரிவதிலே எதுவித தவறுமில்லை. ஆனால் அவை வாசகனால் கவரப்படும்போதுதான் அவை உத்திகளாகக் கவரப்படுகின்றன. இவ்விதம் வாசகன் என்ற தராசைக்கொண்டு அளந்து நிர்ணயிக்கப்பட்ட சிறுகதையுத்திகள் சிலவே யெனலாம். இவைகளை மேல் நாடுகளிலிருந்து இறக்குமதியானவையென்றோ, பிறரைப் பார்த்துப் பிரதி செய்யப்பட்டனவென்றோ, ஒதுக்கிவிடுவதில் எவ்வித பயனும் ஏற்படப் போவதில்லை. ஏனெனில் இலக்கியம் வளர்ந்த பாதையிலே பிறரின் அடிச்சுவட்டைப் பின்பற்றுவதிலானே ஒருவாகியுளது. இதை யாருங் குற்றமாகக் கொள்வதானால் இக்குற்றத்திலிருந்து உலகின் முனனணியில் திகழும் எந்த எழுத்தாளரும் தப்பமுடியாது!

உத்திமுறை

இங்கிலியில் ஈழத்து எழுத்தாளர் சிறுகதையை நடத்திச் சென்ற உத்தி முறைகளைக் கவனிப்போமாகில், முதலில் நிற்பது படிமுறை வெளிப்பாடு (Narration) எனலாம். எவ்வித கோணல் மாணலுமின்றி நேரே வாசகன் மனதைத் தாக்கக்கூடியது இது. இதனால் கதையின் நடுவில் முடிவில் எவ்வித மயக்கமும் ஏற்பட இடமில்லை. இவ்வுத்தியைக் கையாள்வதே ஈழத்தில் மாத்திரமன்று எங்கும் சிருட்டி கர்த்தாக்களுக்கு வாலாயமாயமைந்த முறையாகும். இவ்வுத்தியே தொன்று தொட்டு மக்கள் சமுதாயத்தில் நிலவிவந்த முறையாதலின் வாசகனோடு அதற்கு நெருங்கிய பழக்கம் ஏற்பட்டு விட்டது.

அடுத்ததாக, நினைவைப் பின்திருப்பிப் பார்த்தலைக் (Flash-back) கூறலாம். நினைவைப் பின்திருப்பிச் சம்பவத்தை நினைத்தலையும் சொல்லுதலையும் அந்நினைப்பையும் வார்த்தைகளையும் சிருஷ்டி கர்த்தா தான் விரும்பியவாறு புனைதலையும் இச்சிறுகதையின் சிறப்பம்சம் எனலாம். இவை வாசகனுக்குத் திருப்பங்கள் சிலவற்றை யுண்டாக்கி, புதுமையையூட்டி, இரசனையுணர்வைப் பிறப்பிக்கின்றன. ஈழத்து எழுத்தாளர்களிற் சிலர் இவ்வுத்தி முறையை வெகுலாவகமாகக் கையாண்டு வெற்றிபெற்றுள்ளனர்.

சிந்தனைகொண்டு புடமிட்டு அமைக்கப்பட்ட சம்பாஷணைகள் மூலம் கதையைச் சுவை குன்றுமற் கூறுவதென்பது மகா கடினமான உத்தியாகும். கதைகளில் இடையிடையே வரும் சம்பாஷணைகளைத் திறம்பட அபைப்பதே சிரமமான முயற்சியாகக் கருதப்படும் போது கதாபாத்திரங்கள் ஒன்றுடனொன்று உரையாடும் முறையிலேயே கதாசிரியனின் படர்க்கைக் கூற்றுக் குறைந்து காண, கதையமைத்தலைப் பெரியதொரு சாதனையென்றே கூறவேண்டும். இதனால் இந்த உத்தியைக் கையாண்டு சிறுகதை எழுதி வெற்றி பெற்றவர்கள் இல்லையென்றே கூறவேண்டும. கருத்தாழமும் கவர்ச்சியுமுள்ள சம்பாஷணைகளை அமைத்துக்கொள்வதில் இலங்கையர்கோனும் சம்பந்தனும் ஓரளவு வெற்றிபெற்றுள்ளனர் எனலாம்.

நிகழ்ச்சிப் பின்னணி

சிறுகதையாசிரியன் தான் கூறும் கதையில் தானும் ஒரு பாத்திரமாயிழைந்து, கதைச் சம்பவங்களிலீடுபட்டும் சிந்தித்தும் பேசியும் கதையை நடத்துவதுண்டு அதில் அவன் தன் அனுபவங்களின் வெளிப்பாட்டையோ, அன்றி, இரண்டாவதான ஒரு பவனத்தைத் தனதாக்கிக்கொண்ட வெளிப்பாட்டையோ காணமுடிகிறது. இங்கிலியில் அப்பாத்திரம் கனதியும் கருத்துமுடையதாய் அனுபவங்களின் படப்பிடிப்புப் போல இயங்குவதைக்காண முடியும். இந்த உத்தியிலே ஆசிரியன் நிகழ்ச்சிப் பின்னல்களிற் சிக்கித் தத்தளித்தும் ஆனந்தித்தும் உணர்ச்சிகளை வெளிப்படுத்துவான். அன்றி நினைவுத் திரள்களைத் தெளித்துவிட்டு, அவைகளைக் கோத்து மாலையாக்கியும் விடுவான். லா.ச. ரா.வும் மௌனியும் ஆரம்பகாலத்தில்தொட்டு வெற்றிகண்ட இம் முறையைப் பின்பற்றி, ஈழத்தில் உரிவாகி நிலைநிற்கும் தகைமைபெற்ற சிறுகதைகள் ஒரு சிலவே.

இந்த முறையும் மனவோட்டத்தின் முழுப்பொலிவையும் முழுவேகத்தையும் காட்டுவதிற் குறையுடையனவே. ஆசிரியன்தன் மனவோட்டத்திற் பிரதிபலிக்கும் உணர்ச்சிகளைத் தரப்படுத்தியும் நன்மை தீமைகளை அலசியும் எஞ்சியவற்றை ஒழுங்குபடுத்தியும் காட்டுகின்றன். இத்தனை படிமுறைகளையும் தாண்டி, அம்மனவோட்டம் அறிமுகப்படுத்தப்படும் போது அதன் முழுப் பொலிவும் வேகமும் பிரதிபலிப்பதில்லை. எனவே மன ஓட்டத்தின் அப்பட்டமான உண்மை நிலையை-அவை உயர்ந்த இலட்சியங்களாயும் இருக்கலாம்; வெறும் மனவிகாரங்களாயுமிருக்கலாம்; அருவருக்கத்தக்க உறுத்தல்களாகவும் இருக்கலாம்-அவையெல்லாவற்றையும் அதனதன் உருவில் காட்டமுடியுமா என்ற பரிசோதனைக்கு ஆசிரியன் தன்னை உட்படுத்துகிறான் — அச்சோதனை நினைவோட்டமென்னும் புது உத்தியாகப் பிறந்தது. இதில் மனவோட்டத்தைக் கட்டுப்படுத்தி, கூட்டியும் குறைத்தும் மெருகிட்டும் காட்டுதலில்லை-ஒரு கருவைச் சூழ்ந்தெழுந்த அந்த மனவோட்டம் முடிவெதுவுமின்றி, அரைகுறையாக நிற்பது போலவும் தோன்றலாம்; தோன்றினாலும் அதற்கு அதுவே விதி, கரு உருவாகவில்லையே, கதையாக வளரவில்லையே, ஏதோ மயக்குவது போலத் தோன்றுகிறதே என்று எண்ணலாம். எண்ணினாலும் அதற்கு அதுவே விதி. ஆசிரியனின் மனவோட்டத்தைப் புரிந்துகொள்ள முடிந்தால், அந்த ஆட்டத்திற் பெருகும் அனுபவத்தில் மிதக்க முடிந்தால் அதற்கு அவையே பயன். இம்முறையில் வியக்கத்தக்க வெற்றிகண்டவர் லா. ச. ரா. வின் சிறுகதைகளையொத்து ஈழத்திலும் சிறுகதைகள் பிறந்துள்ளன வெனப் பெருமை கொண்டாட முடியாது. சம்பந்தன், எஸ். பொன்னுத்துரை போன்ற சிலர் முயற்சித்தனராயினும் வெற்றிகாணும் எல்லையைத் தொடவில்லை.

இவ்வுத்திகளனைத்தும் ஆசிரியனுக்கும் வாசகனுக்குமிடையே உண்மையைக்காணும் முயற்சிக்குக் கருவிகளாயமைவனவே. உள்ள ஒரு தன்மையை, உள்ளத்தின் தன்மையை வாசகனுக்கு அறிமுகப்படுத்துதற்கு இவைதாம் முடிந்த முடிபான உத்திகள்—கருவிகள் என்றுகூறிவிடமுடியாது. ஆசிரியனின் அறிமுக முயற்சியை வாசகன் உள்வாங்கும் எந்த முறையும் உத்திகளாய் உருப்பெறலாம்.

சுவையுணர்வுள்ள வாசகனின் நிலையினின்று பார்க்கும் போது மனதில் தங்கக் கூடியனவான சில சிறு கதைகள் ஈழத்தில் படைக்கப்பட்டுள்ளன. சிறுகதைகளை எடுத்துக்கொண்டு உருவமுண்டா? உள்ளடக்கமுண்டா? இது யதார்த்த வட்டத்துளடங்குமா? அல்லாத ஒன்றுளடங்குமா? இது முற்போக்கா? அல்லாத ஒன்றா! இதில் பிரதேச மணம் கமழுகிறதா? இல்லையா? என்றெல்லாம் தத்தம் மனக் கொள்கைகளையே விமர்சனத்திற்கு வரைவிலக்கணம் எனக் கருதிய விமர்சனக் கண்ணோட்டமின்றிப் பார்க்கும் போது ஐம்பது அறுபது சிறுகதைகளைப் பொறுக்கி எடுக்க முடியும். இந்தச் சேகரிப்புக்கு அத்திவாரமாயமைந்த சில நெறிகளுள. அவற்றுளொன்றுகருத்துச்சுதந்திரத்தையும் கதைப்பொருட் சுதந்திரத்தையும் ஆசிரியனுக்கு விடுத்து, அக்கருத்தைக் கதைப்பொருளை அவன் எப்படிக கூறுகிறான் என்பது. இரண்டாவது அவன் தனது உள்ளடக்கப் பொருளுக்கு எவ்வாறு உருவம் கொடுத்துள்ளான் என்பது. மூன்றுவது வெகுசாதாரண கதைப்பொருளானல் அதில் மனங்கவரும் உருவமைப்பு உளதா எனச் சாண்பது. நாலாவது உருவமில்லாவிட்டாலும் அவன் கூறுவது அபூர்வகதைப்பொருளா? கருவா? எனக் காண்பது. இந்நான்கையும் மனதிற்கொண்டே ஈழத்து எழுத்தாளர்களின் சிறுகதைகளை அறிதல் நலம்.

[முற்றும்]

மலர்க் கொத்து

— தாஸ் —

விளக்கில் பற்றிய நெருப்பைக் கண்டு மக்கள் வழிபடுவார்கள். ஆனால், சாதாரண விறகில் எரியும் நெருப்பைக்கண்டால் கவனிக்கமாட்டார்கள். இஃயவன் கற்றவனாக இருந்தால் உலகத்தில் மதிப்பு உண்டு. படிக்காதவனுக்கோ எங்கும் மதிப்பில்லை!

—நான்மணிக்கடிகை.

∴ ∴ ∴

ஜூலுலாந்தில் கொல்லப்பட்ட ஒரு முதலையின் வயிற்றைக் கிழித்துப் பார்த்த பொழுது 32 அலுமினியத் தகடுகள் கண்டு பிடிக்கப்பட்டனவாம். அந்த அலுமினியத் தகடுகளைப் பரீட்சித்துப் பார்த்ததில், அவை நாய்களுக்காக நகராண்மைக் கழகத்தினர் வழங்கிய 'லைசென்ஸ்' பட்டயங்கள் என்று தெரியவந்தது!

∴ ∴ ∴

தமிழகத்திலுள்ள எழுத்தாளர்களான 'அகிலன்', 'அநுத்தமா' ஆகியோரைத் தெரியாத தமிழ் வாசகர்கள் இருக்கமுடியாது. ஆனால், அவர்களது உண்மைப் பெயர்கள் மட்டும் அநேகருக்குத் தெரியாது. அகிலனின் இயற்பெயர், பி. வி. அகிலாண்டம். அநுத்தமாவின் இயற்பெயர், ராஜேஸ்வரி பதமநாபன்.

∴ ∴ ∴

பரத நாட்டியம், தமிழகத்திற்கே தனிப்பெருமைதேடித் தரும் ஒரு தெய்வீகக் கலை. 'பரதம்' என்ற பெயர் வந்ததற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. பரதமுனிவரால் வகுக்கப்பட்ட கலையாதலால் பரதக்கலை என்பர் சிலர். சகுந்தலையின் மகன் பரதன் அரசாண்ட பரதகண்டத்தில் தோன்றிய கலையாதலால் பரதம் என்ற பெயர் வழங்கியதாகவும் சிலர் கொள்கின்றனர். பாவ, ராக, தாளங்களின் சேர்க்கையான கலையாதலால் இவற்றின் முதல் எழுத்துக்களைச் சேர்த்து இப்பெயர் வழங்கி வருவதாகவும் சிலர் சொல்கின்றனர்.

∴ ∴ ∴

"இன்று ஏடுதூக்கிப் பள்ளி செல்லும் பாலகனே நாளை நாடுகாக்கும் தலைவனுவான்".

—அழ. வள்ளியப்பா.

∴ ∴ ∴

"இன்னிக்கவேண்டும். தங்கள் திருமணத்துக்கு என்னால் வர முடியாமல் போய்விட்டது" என்றார் ஹாலிவுட் ஸ்டூடியோவைச் சேர்ந்த ஒரு உத்தியோகஸ்தர்.

"அதைப் பற்றிப் பரவாயில்லை. ஆனால், அடுத்த முறை இப்படிச் செய்யாதீர்கள்" என்றாள் நடிகை.

∴ ∴ ∴

'பூக்கள் பூக்கின்றன; வாடுகின்றன; மண்ணில் உதிர்கின்றன. ஒரு கணக்கு உண்டோ? கவலைப்படுவார் உண்டோ? அன்று முதலையின்வாயில் அகப்பட்டுக்கொண்டவனை, தன்முன்னே தோன்றிய திருமாலின் திருவடிகளில் ஒரு தாமரை மலரைப் பறித்துச் சூடியது. யானையும் வீடுதலை பெற்றது; அந்தத் தாமரையும் என்றும் வாடாத ஒளியுடனும் அழகுடனும் ஆண்டவன் அடிமலர்களில் திகழ்கின்றது. அந்த ஒரு மலர்பெற்ற பேறுதான் என்னே! இன்று பாரத அன்னை முதலை வாயில் சிக்கி இடர்ப் படுகிறாள். விடுதலை வேண்டி நிற்கிறாள். இப்போது நம் பூங்காவனத்தில் புகுந்து ஒரு நறுமலர் கொய்தாள், திருமாலின் திருவடிகளிற சாறறிவன்.'

[தமது தமையனார் கனேச பந்த் ஸாவர்க்கர் அந்திய அரசினரால் தண்டனை பெற்றது குறித்து வினாயக தாமோதர ஸாவர்க்கர் தமது அண்ணியாருக்கு எழுதிய கடிதத்தின் ஒரு பகுதி இது.]

கலை அரங்கம்

பத்மினி நடிக்கும் படத்தை சாவித்திரி துவக்கிவைத்தார்

மீண்டும் பத்மினி - ஜெமினி ஜோடி!

பத்மினியின் உறவினரான ஓரியண்டல் மூவிஸ் அதிபர் சத்தியபால் 'பொன் விளையும் பூமி'க்குப்பின் தயாரிக்கவுள்ள தமிழ்ப் படத்தில் பத்மினி கதாநாயகியாக நடிப்பார் என்ற செய்தி வெளியாகியுள்ளது.

இவருடன் கதாநாயகனாக ஜெமினி கணேசன் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறார். மற்றும் மனோகர், பாலாஜி, அசோகன், ராமராவ், சுகுமாரி ஆகியோரும் நடிப்பார்கள்.

இதன் துவக்கவிழா 15-1-63 இல் சிட்டாடல் ஸ்டுடியோவில் நடைபெற்றது. சாவித்திரி "கிளாப்ஸ்" பலகையைத் தட்ட பத்மினியின் தாயார் கமிராவை முடுக்கிவைத்தார். இப்படத்தை ஜி. விஸ்வநாதன் டைரக்ட் செய்கிறார்.

"தங்கையின் காதலன்"

"வாழ்வும் விதியும்" என்ற நாடகத்தை மேடைபேற்றிய பாஷையூர் 'உதயசூரியன்' நாடக மன்றத்தினர். தங்களது இரண்டாவது தயாரிப்பான "தங்கையின் காதலன்" என்ற உயரிய சமூக நாடகத்தை தயாரித்து வருகின்றனர். பாக்கியன், எமிலியானுஸ், மரியதாஸ், கிப்பொலிற், குழந்தை, அந்தோனிப்பிள்ளை மற்றும் பலர் பங்குகொண்டு நடிக்கும் இந்நாடகம் விரைவில் அரங்கேற்றப்பட விருக்கிறது.

"வேங்கைப்பாலம்"

கண்ணுடி மாளிகையைத் தயாரித்த ராணி பிக்சர்சார் அடுத்து "வேங்கைப்பாலம்" என்ற படத்தைத் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளனர். இப் படத்தை டி. ஆர். ராதாராணி தயாரிக்கிறார். இதில் ராதா ராணி, அவர் சகோதரி டி. ஆர். சரோஜா ஆகியோர் நடிப்பதோடு மற்றும்பல முக்கிய நடிகர்களும் நடிப்பார்கள். இப்படத்தின் துவக்க விழா கடந்தவாரம் மெஜஸ்டிக் ஸ்டுடியோவில் நடைபெற்றது.

'வைத்தியர் மகள் ரங்கம்'

சட்டராஜா பொழுதுபோக்குச் சங்கம் பிரபல யூனியன் கம்பெனியில் பணிபுரிவோரை அங்கத்தினர்களாகக் கொண்டது. இச்சங்கத்தினர் அண்மையில் சம்பங்குமார் எழுதி பயிற்சி அளித்த 'வைத்தியர் மகள் ரங்கம்' என்ற நாடகத்தைச் சிறப்பாக நடித்தனர். யூனியன் கம்பெனி டைரக்டர் திரு. கே. வி. ஸ்ரீனிவாசன் தலைமையில் நடைபெற்ற இந்நாடகத்தில் பூசாரியாக நடித்த ஜி. கார்த்திகேயனது நடிப்பு குறிப்பிடத்தக்க வகையில் சிறப்பாக நகைச் சுவையுடன் இருந்தது.

பாலச்சந்தரின் 'பொம்மை'

எஸ். பாலச்சந்தர் அடுத்து தயாரிக்கவிருக்கும் 'பொம்மை' படத்தின் படப்பிடிப்பு 21-1-63 லிருந்து தரிதமாக வளர ஆரம்பித்துள்ளது.

இப்படத்தில் விஜயலட்சுமி, லட்சுமி ராஜ்யம், ரமேஷ், வி. கோபாலகிருஷ்ணன், வி எஸ். ராகவன். மாலி, சுதன், சாந்தினி, கொட்டாப்புளி ஜெயராமன், என். எஸ். லட்சுமி ஆகியோரும் நடிப்பர். இவர்களோடு எஸ். பாலச்சந்தரும் நடிப்பார். தயாரிப்பாளரான பாலச்சந்தரே இதன் கதையை எழுதியுள்ளார். இசையமைப்போடு டைரக்ஷனையும் கவனித்துக் கொள்வார். வசனத்தையும் பாடல்களையும் வித்வான் வே. லட்சுமணன் எழுதுகிறார். இது புரட்சிகரமான கதை என்று கூறப்படுகிறது. இரண்டுமாதங்களில் படத்தை முடித்துவிட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வீரப்பா படத்தில் எம். ஜி. - தேவிகா நடித்தனர்

பி. எஸ். வீரப்பா தயாரிக்கும் ஹரிஹரன் பிக்சர்ஸ் 'ஆனந்த ஜோதி' படப்பிடிப்பு 18-ந் தேதி விஜயா ஸ்டுடியோவில்வளரத்தொடங்கியுள்ளது. எம். ஜி. ஆர்., தேவிகா, கமல ஹாசன் ஆகியோர் கலந்து கொண்ட காட்சியொன்று முதல்காட்சியாக சுடப்பட்டது. மற்றும் எம். ஆர். ராதா, அசோகன், தயாரிப்பாளர் வீரப்பா ஆகியோரும் இப் படத்தில் நடிக்க உள்ளனர். இதை ஒரு துரித தயாரிப்பாக்க வீரப்பா திட்டமிட்டுள்ளார்.

குட்டி பத்மினிக்கு ஸ்ரீதரின் பரிசு

'நெஞ்சில் ஓர் ஆலயம்' தமிழ் ஹிந்தி ஆகிய இரு மொழிப் படங்களில் நடித்த குட்டி பத்மினிக்கு ஹிந்திப் படப்பிடிப்பு முடிந்ததும் அப்படத்திற்காக வழங்கப்பட்ட சுமார் 250 ரூபாய் பெறுமதியான பொம்மைகளை டைரக்டர் ஸ்ரீதர் பொங்கல் பரிசாக குட்டி பத்மினிக்கு அளித்து விட்டார்.

டி. எம். சௌந்தரராஜன் இம்மாதம் வரமாட்டார்

பிரபல பின்னணிப் பாடகர் திரு. டி. எம். சௌந்தரராஜன் இம்மாதம் வரமாட்டாரெனத் தெரிகிறது. கடந்த மாதம் இலங்கை வரவிருந்த திரு. சௌந்தரராஜன் இம்மாதம் வருவாரென அறிவிக்கப்பட்டிருந்தது.

இம்மாதம் அவர் வருவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டபோதிலும் பாஸ்போர்ட் கிடைப்பது கஷ்டமாக இருப்பதினால் அடுத்த மாதம் வருவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. சௌந்தரராஜன் யாழ்ப்பாணம் வாய்க்காற்தரவைப் பிள்ளையார் கோயில் நிதிக்காக இன்னிசைக் கச்சேரி செய்யவே இங்கு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

'ஆசை அலைகள்' முடிவடையும் கட்டத்தில் உள்ளது

அன்பு பிலிம்சார் சப்தமில்லாமல் வாகினி ஸ்டுடியோவில் வளர்த்துவரும் 'ஆசை அலைகள்' படம் முடிவடையும் கட்டத்தில் உள்ளது. இதற்காக எஸ். எஸ். ராஜேந்திரன் பாலாஜி, சௌகார் ஜானகி, பேபி பத்மினி நடித்த சில காட்சிகள் சமீபத்தில் படமாக்கப்பட்டன.

மற்றும் விஜயகுமாரி, சந்தியா, நாகேஷ் நடிக்கும் இப் படத்திற்கு கே. வி. மகாதேவன் இசையமைக்கிறார். எஸ். ஏ. சாமி டைரக்ட் செய்கிறார்.

தருமம் ஒருமுறைதான் தலைகாக்கும்!

தருமம் செய்தால் அது வீண் போகாது. அது பல தலமுறைகள் வரை காக்கும் என்று தானே நமது சாஸ்திரங்கள் கூறுகின்றன ஆனால் எம். ஆர். ராதாவுக்கு இதில் நம்பிக்கையில்லை. தருமம் தினமும் தலையைக் காக்காது. ஒருமுறை தான் காக்கும் என்கிறார்.

இப்படி ஒரு பிரசாரத்தை அவர் மேடை மேடையாகச் செய்துவரவில்லை. தேவர் பிலிம்சார் வாகினி ஸ்டுடியோவில் துரிதக்காகத் தயாரித்து வரும் 'தருமம் தலைகாக்கும்' படத்தில் வரும் ஒருகாட்சியில் தான் அவர் எம். ஜி. ராமச்சந்திரனிடம் இவவாறு கூறினர்.

சரோஜாதேவி, ஜெமினி சந்திரா, எம். வி. ராஜம்மா, அசோகன், ஜெமினிபாலு ஆகியோர் நடிக்கும் இப்படத்திற்கான வசனங்களை அய்யா பிள்ளை எழுத, கே. வி. மகாதேவன் இசையமைக்க, எம். ஏ. திருமுகம் டைரக்ஷனில் இப்படம் வளர்ந்துவருகிறது.

நல்லகோழிக்கு சிலஇலட்சணங்கள்உண்டு

(8ம் பக்கத் தொடர்ச்சி)

பத்து நாட்கள் வளர்ந்த குஞ்சுகளை கவனிப்போம். விரைவில் வளர்க்கும் குஞ்சுகளின் வால் சிறகுகள் ஒரு அங்குல நீளமிருக்கும். தாமதித்து வளர்க்கும் குஞ்சுகளின் வால் இறகுகள் அநேகமாக தோன்றியே இருக்காது.

பன்னிரண்டு வாரமான பறவைகளை எடுத்துக்கொண்டாலோ மேற்கூறியபடி விரைவில் வளர்க்கும் குஞ்சுகளின் முதுகில் பூராவும் சிறகு முடியிருக்கும். இரண்டு இறக்கைகளின் மேல்பக்கங்களும் முடியிருக்கும். தாமதமாக வளர்க்கும் குஞ்சுகளுக்கு அப்படியிராது.

தாமதமாக சிறகு வளர்க்கத் துவக்கும் குஞ்சுகளுக்கு சிறகுகள் குழுதும் வளர்ந்து முடிக்கவும் தாமதம் ஏற்படுகிறது. இரண்டாவது தடவை சிறகு உதிர்வதில்லை.

நன்றாக முட்டையிடக்கூடிய தரமான பறவைகளைப் பொறுக்கி வளர்க்கவேண்டுமானால் முதல் தடவையாக சிறகு உதிர்த்து வளர்க்கும் தருணத்தில் குஞ்சுகளைப் பொறுக்கவேண்டும். தரம் அற்ற பறவைகள் ஒரு இறகு உதிர்ந்தபின் மறு சிறகு உதிர்க்க காலதாமதமாகிறது. உடலில் உள்ள இறகுகள் அதிகமாக உதிருகின்றன. சிறகு உதிரத் தொடங்கியதும் முட்டையிடுவது நின்றுவிடுகிறது. நன்றாக முட்டையிடும் தரமான பறவை இலையுதிர்காலத்தில் பின் பக்கத்தில் சிறகு உதிர்க்கத் தொடங்கும். சிறகு உதிர்க்கையில் முட்டையுமிடும். முட்டையிட்டுக் கொண்டிருக்கையில் ஐந்தில் ஒரு பகுதி சிறகுகள் உதிர்ந்துவிடும். ஒரே சமயத்தில் நான்கைந்து சிறகுகளை உதிர்க்கும். அடுத்த ஆண்டு முட்டையிடும் பருவம் வரையில் ஒன்று அல்லது இரண்டு ஆதார இறகுகள் இருந்துகொண்டே இருக்கும்.

முதலாண்டில் மே, ஜூன் சிறகு உதிர்க்கத் தொடங்கிய பறவைகளைவிட ஆகஸ்டில் தொடங்கிய பெட்டைகள் சராசரி 50 முட்டைகள் அதிகம் இட்டன. முதலாண்டிலேயே எல்லா ஆதாரச் சிறகுகளையும் உதிர்த்துவிட்ட பறவைகளைவிட இரண்டாவது முட்டையிடும் பருவம்வரை ஒன்று அல்லது இரண்டு ஆதாரச்சிறகுகள் உதிர்க்காமலே வைத்துக் கொண்டிருக்கும் பெட்டைகள் சராசரி 26 முட்டைகள் அதிகம் இட்டன. ஆகையால் தாமதித்து இறக்கை உதிர்க்கத் தொடங்கி விரைவில் புது இறகு வைக்கும் பறவைகளையும் இரண்டாவது ஆண்டு முட்டையிடும் பருவம் வரை இரண்டொரு ஆதாரச் சிறகுகளை உதிர்க்காமல் இருக்கும் பறவைகளையும் வைத்துக் கொள்ளவும்.

மேற்சொன்னது குஞ்சு பருவத்திலேயே நிரம்ப முட்டை யிடக்கூடிய குஞ்சை பொறுக்குவதற்கு கூறப்பட்டது.

முதிர்ந்த பறவைகள்

முதிர்ந்த பறவைகளில் நிரம்ப முட்டையிடும் பறவைகளின் லட்சணங்களைப் பார்ப்போம். நல்ல கோழியின் கொண்டையும், தானசதையும் நல்ல சிவப்பாகவிருக்கும். இவை நல்ல திரட்சியுள்ளவையாக இருக்கும். மட்டரகப் பெட்டையின் கொண்டை மங்கலாக இருக்கும். நல்ல கோழியின் மலப்பாதை நீள வட்டவடிவமாக, மென்மையாக ஈரப்பசையுடன் இருக்கும். முட்டை குறைவாக இடும் கோழிக்கு வட்டமாக, சிறிதாக, வரட்டு, மடிப்புள்ளதாக இருக்கும். நிரம்ப முட்டையிடும் கோழியின் அடிவயிறு பெரிதாக இருக்கும். நெகிழ்வாக இருக்கும். அதன் தலை குறுகி இருக்கும். கபாலம் அகன்றிருக்கும். கண்கள் பளபளப்பாக இருக்கும். அடிவயிற்றுத்தோல் மெலிதாக இருக்கும்.

வைட் லெக்ஹார்ன், ரோட் ஐலண்டு, ரெட் போன்ற மஞ்சள் நிறத்தோல் உடைய பறவைகள் முட்டையிடும்போது தோலின் மஞ்சள் நிறத்தை இழக்கிறது. நம்காட்டில் முட்டையிடத் தொடங்கிய ஐந்து மாதங்களில் கண்வளையம், மலப்பாதை, காது, மூக்கு கால் முதலிய இடங்களில் உள் மஞ்சள் மாறும். முட்டையிடுவது நின்றதும் இந்நிறம் திரும்பி வரும். இவ்வாறு நிறமாற்றம் ஆக்கப்படாத மஞ்சள் நிற ராசிப் பறவைகளைப் பொறுக்கி விற்றுவிடுவது இலாபகரமாக இருக்கும்.

நமது நூல் நிலையம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

சங்களுடனும் அதன் நாலாவது ஆண்டில் தேனமுதாகவும் நிறைகுடமாகவும் பொங்கி வழியும் கலைச் செல்விக்கு மேலும் பல்லாண்டு கூறுகிறேம். அதன் ஆசிரியர் 'சிற்பி'யின் தளராத ஊக்கத்தையும் உழைப்பையும் பெரிதும் பாராட்டுகிறேம். -"லோம்பரி"

●

திருவருட்பயன்: உமாபதிசிவாச்சாரியார் 'திருவருட்பயன்' எனும் சித்தாந்தஞான நூலை அருளிச் செய்தார். திருவருளின் பயனை விளக்கும்நூல் எனப் பொருள்படும். இது நூறு குறள் வெண்பாக்களால் ஆனது.

இந்நூல் திருமதி பொன்னுசின்னையாவின் நினைவாகவெளியிடப் பெற்றுள்ளது. திரு. க. சி. குலரத்னைக்கிடம் (நல்தர்மடம், யாழ்ப்பாணம்) இலவசமாக இதனைப பெற்றுக் கொள்ளலாம். அழகான வெளியீடு.

●

ஸ்ரீகாந்தா நாட்காட்டி: ஸ்ரீகாந்தா அச்சகம், கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

1963 க்குரிய ஸ்ரீகாந்தா நாட்காட்டி நல்ல முறையில் வெளிவந்துள்ளது. தெய்வத் திருவுருவங்களின் படங்கள் பல வர்ணத்தில் அழகாக அமைந்துள்ளன. திதி, நட்சத்திரம் போன்ற பஞ்சாங்கக் குறிப்புகளும் நாட்காட்டியிற் சேர்க்கப்பட்டுள்ளன.

விடைகொடு தாயே

நாடக விமர்சனம்

தந்தையை இழந்த செல்வம் வேலுதேடும் நோக்கமாக பட்டணத்துக்கு வருகின்றான். வழியில் தேவி என்ற பெண்ணைச் சந்திக்க நேரிடுகிறது. செல்வத்துக்கும் தேவிக்கும் காதல் மலர்கிறது. ஆனால் மூர்த்தி என்றகேடி தேவியைக் கெடுத்துவிடுகிறான். இதையறிந்த செல்வம் மூர்த்தியைக் கொலை செய்கின்றான். இறுதியில் செல்வத்துக்கும் தேவிக்கும் திருமணம் நடைபெறுகிறது.

ஆனைக்கோட்டை கலைவாணி நாடக மன்றத்தினர் சமீபத்தில் யாழ்ப்பாணம் மனோகரா தியேட்டரில் மேடையேற்றிய 'விடைகொடு தாயே' என்ற நாடகத்தின் கதை இதுதான்.

நாடகத்தின் முக்கிய பாத்திரம் செல்வம். செல்வமாக நடித்தவர் தமது செல்வத்தைப் பறிகொடுத்தவர்போல ஆனந்தமாக இருக்கவேண்டிய நேரத்திலும் ஆழ்ந்ததுயரில் இருப்பவர் போலிருந்தார். நடிப்பில் முன்னேற்றம் தேவை. மூர்த்தியாக நடித்தவர் தமது நடிப்பில் சில புதிய உத்திகளைக் கையாண்டது குறிப்பிடத்தக்கது. வில்லனாக நடிப்பதென்றால் அட்டகாசமாகச் சிரிப்பது தான் என்பதை மாற்றி முகபாவங்களால் வில்லன் என்றால் இப்படியிருப்பான் என்பதைக் காட்டிவிட்டார் மூர்த்தியாக நடித்தவர்.

ஆறுமுகம் என்பவன் ஒரு பரம ஏழை அவன் மூர்த்தியின் கொடுமைகளுக்கு இலக்காகியவன். ரசிகர்கள் பராட்டுக்கு இலக்காகியவர் ஏழை ஆறுமுகமாக நடித்தவர்.

தேவி, பொன்னம்மா, மங்கம்மா, காவேரி- இந்த வேடங்களைத் தாங்கியவர்கள் கொஞ்சம் அக்கறையோடு நடித்திருக்கலாம். பெண்மையைப் பறிகொடுத்த தேவி தலைமயிரைக் குலைத்துவிட்டு மேடையில் உலாவினார். இதுமட்டும் வேதனையை வெளிப்படுத்திவிடாது.

துணிக்கடைத் துரைச்சாமியாக நடித்தவர் சிறுபாகமேற்றாலும் நன்றாக நடித்தார்.

நாடகத்தை டைரக்ட் செய்த நமசிவாயம் இன்னும் சிறிது கவனம் எடுத்திருந்தால் ரசிகர்களின் பாராட்டைப் பெற்றிருக்கலாம்.

ஒப்பனை நாடகத்தின் தரத்தை ஓரளவுக்கு உயர்த்த முனைந்தது என்று கூறலாம். மேக்கப் ராசாவின் ஒப்பனையில் அனுபவமும் திறமையும் வெளிப்பட்டன.

—கணேஷ்

ஈழநாடு

EELA NADU: National Tamil Daily post box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna. Phone: 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு தைமீ 14 (27 - 1 - 63)

கலைமகளும் அலைமகளும்

கலைமகளும் அலைமகளும் ஒன்றுசேரமாட்டார் களாம். இப்படி ஒரு கதையுண்டு. வேறு பல நாடுகளிலும் இக்கதை பொய்யாகி, இவ்விரு மகளிரும் ஒன்றுசேர்ந்து வருகையில், இங்கு இதை நமது மாட்சிமை தங்கிய அரசியலார் மெய்யாக்க தங்களாலான முயற்சிகளெல்லாம் செய்து வருவதாகத் தெரிகிறது.

வடமாகாணத்திலே இவ்வாண்டில் கலாதேவிக்கு கலாச்சார அமைச்சு எவ்வளவு மான்யம் அளித்துள்ளதாம் தெரியுமா? இரண்டாயிரத்து ஐநூறு ரூபாய்கள்! இந்தத் தொகையை இங்குள்ள பிரதேச கலாமன்றத்தார், பல பல கலை ஸ்தாபனங்களுக்கும் எப்படி பகிர்ந்தளித்து கலைகளை வளர்க்கப் போகிறார்களோ!

கிறிஸ்து பெருமான் ஏழு அப்பங்களைக் கொண்டு, ஸ்தோத்தரித்து, ஐயாயிரம் மக்களுக்குப் பரிமாறும்படி செய்தாராம். அம் மக்களெல்லாரும் சாப்பிட்டுத் திருப்தியடைந்த பின், மீதியான துணிக்கைகளை ஏழு கூடை நிறையவெடுத்தார்களென்று பைபிள் கதை கூறும். அவ்வித சக்தி இம்மன்றத்துக்கு உண்டென்பது அரசாங்கத்தின் கருத்துப்போலும்.

இது குறித்து ஒரு கலை அன்பரிடம் பேசுகையில், இவ்வித பெரிய சாதனையை நமது பிரதேச கலாமன்றம் ஓராண்டுக்கு முன் செய்ததாகவும், அரசாங்கம் அளித்த பத்தாயிரம் ரூபாயில், ஆருயிரம் மட்டும் செலவழித்துவிட்டு, பாக்கி நாலாயிரத்தையும் அரசாங்கத்திடமே திருப்பிக் கொடுத்துவிட்டதாகவும் தெரிவித்தார். இது எவ்வளவு தூரம் உண்மையோ அறியோம். உண்மையாயின், இங்கு இம்முறை மான்யம் குறைக்கப்பட்டது பற்றி நாம் வியப்படைவதற்கில்லை.

* * *

நரி வலம் போனால் நல்லதா இடம் போனால் நல்லதா? மேலே விழுந்து அது பிடுங்காமல் போனால் நல்லதென்று கூறுவர். அதுபோல, நமது கலை வளர்ச்சிக்கு அரசாங்கம் உதவி எதுவும் செய்யாவிட்டாலும், இதற்குத் தடை முட்டுக்கட்டைகளைப் போடாமல் இருந்தால் அதுவே போதுமென்று கூறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அந்நியர் ஆட்சிக் காலத்திலே கூட பல பல கலைஞர்களும் வடகரையிலிருந்து இங்கு தாராளமாக வந்து நம்மை இன்புறுத்தி, தாங்களும் பயன்பெற்றுச் செல்வது வழக்கம். ஆனால் சமீப வருடங்களிலே, இசைக் கலைஞர் வருவதற்குத் தடை போடப்பட்டுள்ளது. சென்ற ஆண்டில் 12 பேர்களே வர அனுமதி அளிக்கப்பட்டதாம். இவ்வருடம் 6 பேருக்கே பர்மிட் அளித்துள்ளதாயும், அடுத்த ஆண்டில் அதுவுமில்லாமல் செய்யப்பட்டுவிடலாமென்றும் பயமுறுத்தப்படுகிறது. உலகமெல்லாம் ஒரே குடும்பமென்று பேசப்படும் இக்காலத்தில், அண்டை நாட்டிலிருந்தும் கலைஞர்கள் வருவதற்கு இவ்வித தடை களைப் போடுவது எக்காரணத்தை முன்னிட்டும் நல்லதாகாது

உள்நாட்டிலுள்ள கலைஞர்களுக்குப்பாதுகாப்பளிக்க இவ்வித தடைகள் தேவை என்றுவாதிக்கலாம். உள்நாட்டிலே கலைப்பயிரைக் காத்து வளர்க்க நாம் எல்லா முயற்சிகளும் செய்ய வேண்டியதுதான். இதற்குவழி அண்டை நாட்டிலிருந்து கலைஞர்களை வரமுடியாமல் தடுப்பதன்று. இதற்குப் பதிலாக, இங்கு ஒவ்வொரு முக்கிய கோவிலிலும் இசைக் கலைஞர்களைப் பதிவாக நியமித்து, தினசரி இசை முழக்கம் செய்து, அவருக்கு தாராளமாக ஊதியமளித்து ஆதரிக்கவேண்டும். விவாகம் முதலிய விசேஷங்களுக்கு கிராமபோன் டப்பாப் பாட்டுக்களை ஒலிபெருக்கும் அநாகரிக பண்பற்ற முறையைக் கைவிட்டு, மங்களகரமான நாதசுர இசையை முழங்கச்செய்யவேண்டும். இப்படிச் செய்தால், இங்கு இசைக்கலைஞர் அதிகம் தேவைப்படுவதுடன் அவர்கள் கவலையின்றி ஜீவனம் நடத்த முடியும். இனி நாம் இதில் அதிக கவனமெடுத்து கலைகளையும் கலைஞர்களையும் ஆதரிக்க எவ்வளவு முன் வருகிறோமோ அவ்வளவுக்கு இங்கு கலைமகளும் அலைமகளும் சேர்ந்து நம் கலைஞர்களை வளர்க்கவும் நாம் இன்புற்றுவாழவும் முடிவதாக இருக்கும்.

சுபாஷ் போஸ் நோக்கில் சுவாமி விவேகானந்தர்

சுபாஷ் சந்திரபோஸ் ஸ்ரீ ஏ. ஆர். பட்டுக்கு எழுதிய கடிதத்தின் சுருக்கம் இது. 'பிரபுத்த பாரதம்' 1952 ஜூலை இதழிலிருந்து எடுக்கப்பெற்றது.

சுவாமி விவேகானந்தரைப் பற்றித்தாங்கள் எழுதியுள்ளது மிகச்சுவையாக இருக்கின்றது. அவரது தனிப்பட்ட கடிதங்களும், சம்பாஷணைகளும், அவரது பிரசங்கங்களையும், அவர் எழுதியுள்ள நூல்களையும் காட்டிலும் எவ்வளவோ கவர்ச்சிகரமாகவும், சிந்தனையைத் தூண்டுவதாகவும் உள்ளன. அவர் உயர்ந்த பண்பாளர். அவரது போதனைகள், நூல்கள் ஆகியவற்றிலிருந்து வேறுபட்டன. இந்த உயர்ந்த பண்புதான் நாட்டுமக்களை அவரிடம் ஈர்த்தது. சுவாமி விவேகானந்தர் தியாகத்துக்கு அஞ்சினவர்அல்ல. எப்போதும் சுறுசுறுப்பான போக்கு, கரையில்லா அன்பு, அதியற்புத விவேகம், அஞ்சாது கண்டிக்கும் தன்மை இத்தனையும் அவரிடத்தே நிரப்பியிருந்தன. அவரைப் போன்ற மகாபுருஷர்கள் நம் மத்தியில் அபூர்வமாகவே தோன்றுகிறார்கள.

விவேகானந்தர் ஒரு வேதாந்தியாக இருந்த போதிலும் புத்தர்பிரானிடம் அளவற்ற பக்தி மிக்கவர். ஒருநாள் அவர் புத்தரைப்பற்றி மிகவும் உற்சாகத்துடன் பேசிக் கொண்டிருந்தார். ஆசாமிஒருவர் "சுவாமிஜி தாங்கள் ஒரு பௌத்தரா?" என்று கேட்டார். உடனே சுவாமி விவேகானந்தர் உணர்ச்சிவசப்பட்டு விட்டார். "என்ன? நான் ஒருபௌத்தன். புத்தரின் அடியார்க்கும் அடியேன் நான்" என அவர் கூறினர்.

சங்கராச்சாரியாரின் விவேகமும புத்தரின் இதயமும் நமக்கு வேண்டும் என்று சுவாமிஜி அடிக்கடி சொல்வதுண்டு.

தாழ்த்தப்பட்ட மக்களிடம் அவர் கொண்டிருந்த அன்பு கடலிலும் பெரியது. அவர் குறிப்பிடுகிறார் "சரியான ஆடையில்லாத இந்தியன், படிப்பு வாசனையில்லாத இந்தியன், பறையனாக உள்ள இந்தியன் எனது சகோதரன் என்று கூறுங்கள், சகோதரர்களே!"

"இந்தியாவின் கடவுளே எனது கடவுள்; இந்தியாவின் நன்மையே எனது நன்மை என்று உங்கள உச்சஸ்தாயில் கூறுங்கள் சகோதரர்களே."

"கௌரி தேவதையே, வலிமையின் அன்னையே, எனது பலவீனத்தை அகற்று, எனது ஆண்மையற்ற தன்மையை நீக்கிவிடு; என்னையும் ஒரு மனிதனாக்கிவிடு என்று அல்லும் பகலும் பிரார்த்தனை செய்யுங்கள்."

சுவாமிஜி முழுக்க முழுக்க திடகாத்திரமானவர். சண்டைக்குப் பின்வாங்கமாட்டார். சக்தியை வழிபடுபவர், தமதுநாட்டவர் உயரவேண்டுமென்றஆசைமிகுந்தவர்.வேதாந்தத்துக்கு அவர்தந்தவியாக்கியானம் இதுதான்: 'வலிமை, வலிமை இதைத்தான் உபநிஷத்துக்கள் கூறுகின்றன' எல்ல பண்புகள் வளர்ந்தோங்கச் செய்வதை அவர் அதிக அளவு வலியுறுத்தினர்.

இப்படியே மணிக்கணக்காக சுவாமிஜியைப்பற்றிக் கூறிக்கொண்டே போகலாம். அப்படியிருந்தும் அவரைப் பற்றி நான் பூரணமாகக் கூறிவிட முடியாது. அத்தனை பெரிய மகா புருஷர் அவர். அவர் உயிருடன இருந்திருந்தால் அவரது காலடியில் நான் இருந்திருப்பேன். சத்தியத்துடன், உண்மைப்பொருளுடன் மிகவும் உன்னத ஆத்மீகக் கட்டத்தில் நேரடித் தொடர்புகொண்டிருக்கும் ஒரு யோகி அவர். அப்படியிருந்தும் தாது நாட்டின் மனித சமுதாயத்தின் தார்மீக ஆன்மீக உயர்வுக்காகத் தமது வாழ்க்கை முழுவதையும் அர்ப்பணித்தார்.

சுவாமி தயானந்தர் அல்லது ஆர்யசமாஜ வாதிகளைப் போன்று ஸ்தாபன ரீதியான பணியில் அவருக்கு விருப்பம் கிடையாது. அவர் முயற்சிக்கவும் இல்லை.

'மனிதனை உருவாக்குவதுதான் எனது பணி' என்று அவர் கூறுவது உண்டு. உண்மையான உத்தமர்களை உருவாக்கிவிட்டால், ஸ்தாபனத்தை உருவாக்குவது பின்னர் எளிது என்பதனை அவர் அறிவார். சுவாமிஜி தமது சீஷர்களுக்குப் பயிற்சியளிப்பதில் விசேஷ அக்கறை எடுத்துக்கொண்டார். ஆனால் சீஷர்களின் சுய சிந்தனையைத் தடுத்ததில்லை. நீண்ட காலம் தம்முடன் எந்தச் சீஷரையும் வைத்துக்கொள்வதில்லை. ஒரு பெரிய மரத்தினடியில் மற்றொரு பெரிய மரம் வளரமுடியாது என்று சுவாமிஜி அடிக்கடி கூறுவதுண்டு. பிற்காலத்தில் வந்த சில தலைவர்கள் சுய சிந்தனையைச் சகிப்பதில்லை. நமது புத்தியை அவர்களிடம் அடகுவைத்துவிட்டு, நமக்காக அவர்களைச் சிந்திக்க அனுமதிக்க வேண்டுமென அவர்கள் விரும்புகின்றனர். இப்படிப்பட்டவர்களுக்கும் சுவாமிஜிக்கும்தான் எவ்வளவு வித்தியாசம்.

இந்தியாவுக்கு உகந்த வழி

நல்லதோ கெட்டதோ, மேனாட்டு முறையில் இந்தியா ஏன் யந்திரத் தொழில்மயமாகவேண்டும்? மேற்கத்திய நாகரிகம் நகரங்களைப் பற்றியது. இங்கிலாந்து அல்லது இத்தாலி போன்ற ஒரு சிறு நாடு, தனது முறைகளை நகரமயமானவையாக ஆக்கிக்கொள்ள முடியும். ஜனத்தொகையை மிகக் குறைவாகக் கொண்ட அமெரிக்கா போன்ற பெரிய நாட்டுக்கு இதைத் தவிர வேறு வழியில்லாமலும் இருக்கலாம்.

ஆனால், நம் நாடோ பெரிது. ஏராளமான ஜனத்தொகையைக் கொண்டது. நமக்குப் புராதனமான கிராமப் பாரம்பரியமும் உண்டு. இது இந்நாட்டுக்கு உகந்ததாகவும் இருந்துவந்திருக்கிறது. ஆகையால் இந்நாடு மேனாட்டு முறையைப் பின்பற்றக்கூடாது என்றுதான் யாரும் நினைக்க வேண்டும். குறிப்பிட்ட ஒரு நிலையில் இருக்கும் ஒரு நாட்டுக்கு நல்லதாக இருப்பது, அதற்கு மாறுபட்ட நிலையிலிருக்கும் மற்றொரு நாட்டுக்கும் நல்லதாகவே இருக்கவேண்டும் என்பதில்லை. ஒருவருக்கு உணவாக இருப்பது இன்னொருவருக்கு விஷமாகவும் ஆகிவிடுகிறது. ஒரு நாட்டின் பண்பாட்டை நிர்ணயிப்பதில் அந்த நாட்டின் இயற்கை அமைப்புக்குப் பிரதானமான பங்கு உண்டு. துருவப்பிரதேசத்தில் வசிப்பவருக்கு ரோமத்தோலினாலான சட்டை அவசியமாக இருக்கலாம். ஆனால் உஷ்ணப் பிரதேசத்திலிருப்போர் அதை அணிந்தால் உடல் வெந்து போகும்.

இந்தியா உயிருடன் வாழவேண்டுமானால் கிராமக்கைத்தொழில்கள் அவசியமானதை முக்கியமானவர்கள் ஒவ்வொரு வரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். மக்களின் கைகளிலும் கால்களிலும் தேங்கிக்கிடக்கும் சக்தி வீணாகப்போகும்படி செய்து அதற்குப் பதிலாக நீராவி அல்லது வேறு சக்தியை அவர்கள் உயிருடன் வாழும்படி செய்வதற்கு உபயோகிக்க முற்பட்டால் அது தற்கொலையாகவே முடியும். இப்படி மற்றச் சக்திகளை உபயோகிப்பது, தன் உணவைத் தன் கையால் எடுத்து வாயில் வைத்துக்கொள்வதற்குப் பதிலாக அந்த வேலையை ஒரு யந்திரம் செய்யும்படி செய்வதற்கே சமமாகும்.

— காந்தியடிகள்

புற்றுநோய் தீர புது மருந்து

ஆற்றல் மிக்க புதிய புற்று நோய் ஒழிப்பு மருந்து கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க விஞ்ஞானிகள் அறிவிக்கின்றனர். "அஸிடிஜேமைமின் — எக்ஸ் 2" என்பது இந்த மருந்தின் பெயர். புற்று நோய் கட்டிகளை ஒழிக்க இப்பொழுது பயன்படுத்தப்படும் மருந்தைவிட இது இருமடங்கு ஆற்றலுள்ளது. சோதனைக் கண்ணுடிக் குழாயில் ஒரு ஆராய்ச்சியில், இந்த புது மருந்து புற்றின் வளர்ச்சியையும், பெருக்கத்தையும் தடுக்கிறதாக கண்டுகொள்ளப்பட்டது.

புற்றுநோய் கண்ட விலங்குகள் மீது நடத்தப்படும் சோதனைகள் பலனளிப்பவையாகவும் பத்திரமாகவும் இருக்கக் கண்டால், இந்த மருந்து மனிதர்களுக்குப் பயன்படுத்திப் பார்க்கப்படும்.

சிக்காக்கோ பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டாக்டர் ஈவிஸ். எச். கொல்ட் பெர்க், டாக்டர் எம். ரபினோவிட்ஸ், நியூயார்க் ராக்பெலர் கழகத்தைச் சேர்ந்த டாக்டர் ஈ. ரீச் ஆகிய மூவரும் இப் புதிய மருந்துபற்றி அமெரிக்க புற்று நோய் சங்கத்திற்கு ஒரு கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

தமிழாசிரியர் ஆட்சேபம்

யாழ்ப்பாணம், ஞாயிறு சிங்களத்தில் தேர்ச்சியடையாத தமிழாசிரியர்களுக்குச் சம்பளப்படி உயர்ச்சியும், சேவை நீடிப்பும் தடைப்படுத்தப்பட்டிருப்பதனைக் கண்டித்து வலிகாமம் வடக்கு தமிழாசிரியர் சங்கம் தீர்மானமொன்று நிறைவேற்றியுள்ளது.

மல்லாகம் அமெரிக்கமிஷன் பாடசாலை மண்டபத்தில் திரு. ஆ. சின்னத்தம்பி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் வித்தியாதிபதியின் என். எஸ். ஏ. 70 இலக்கமுடைய சுற்று நிருபம் பற்றியும் பரிசீலனை செய்யப்பட்டது.

பாடசாலை முதலாம் தவணை விடுமுறையின்போது, ஆசிரியர்களுக்கான விடுமுறைக் கழகம் ஒன்றினை ஆரம்பிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

உலகமேடை

டி. எம். எம்.

கெயிட்ஸ்கல்

பிரிட்டிஷ் பொதுவாழ்வில், பிரதமர் மாக்மில்லனுக்கு அடுத்த ஸ்தானத்தை வகித்த திரு. கெயிட்ஸ்கல் மரணமடைந்தது, அந்நாட்டுக்கு ஏற்பட்ட மாபெரும் நஷ்டமாகும். அவரது மரணத்தின் மூலம் காமன்வெல்த், ஒரு பலம் வாய்ந்த வீரரை இழந்தது. உலகம், ஒரு ராஜதந்திரியை இழந்தது.

கெயிட்ஸ்கலுக்கு 56 வயது. வெள்ளைக்காரர் பாஷையில், நடுத்தர வயது. வெள்ளைக்காரர்களுக்குச் சராசரி வயது அதிகம். எனவே கெயிட்ஸ்கலை ஒரு இளம் தலைவராகவே கொள்ள வேண்டும். திரு. கெயிட்ஸ்கல், இந்தியாவில் பிறந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. அவரது தந்தை இந்தியாவில் ஐ. ஸி. எஸ். அதிகாரியாகக் கடமையாற்றியவர். இன்றைய உலகில் எந்த நாட்டின் எதிர்க்கட்சித் தலைவரும், திரு. கெயிட்ஸ்கலைப் போன்ற செல்வாக்கை அனுபவித்ததில்லை.

திரு. கெயிட்ஸ்கல் துரிதமாகப் புகழேணிக்குச் சென்றவர். ஆனால் அதற்கிடையில் அவர் பல முட்டுக்கட்டைகளைத் தன் சாதுரியம், தைரியம், ராஜதந்திரம் ஆகிய குணவிசேஷங்களால் தாண்டியிருக்கிறார். திரு. கெயிட்ஸ்கலின் சிறப்பு இதில் தான் தங்கியிருக்கிறது.

திரு. கெயிட்ஸ்கலின் மரணத்தைத் தொடர்ந்து, பிரிட்டிஷ் தொழிற்கட்சியின் எதிர்காலம் நிச்சயமற்ற நிலையில் இருக்கிறது. தொழிற்கட்சியின் அடுத்த தலைவர் எவராயிருந்த போதிலும் அவர் கெயிட்ஸ்கலின் ஸ்தானத்தைப் பூர்த்தி செய்ய இயலாது என்பதில் எவருக்குமே சந்தேகமில்லை.

முன்னாள் பிரிட்டிஷ் தொழிற்கட்சித்தலைவர் திரு. அட்லியின் ராஜினாமாவுக்குப் பின் நடைபெற்ற தேர்தலில், திரு. கெயிட்ஸ்கலுடன் போட்டியிட்டவர்களிருவர். ஒருவர் புகழ்பெற்ற அநுரின் பெவான். மற்றவர் ஹெர்பர்ட் மொரிஸன். ஆயினும் தம்மைவிடச் சிறப்புப் பெற்றிருந்த பெவானை, திரு. கெயிட்ஸ்கல் தோற்கடித்து தொழிற்கட்சியின் தலைமைப் பதவியை ஏற்றார். அவரது சிறப்பான தலைமை தொழிற்கட்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்தது. அடுத்த பொதுத் தேர்தலில் தொழிற்கட்சியின் வெற்றி பற்றியும் ஹேஸ்யம் கூறப்பட்டது. திரு. கெயிட்ஸ்கலின் தனிப்பட்ட செல்வாக்கின் காரணமாகக் கட்சியின் நிலை இவ்வாறு கணிக்கப்பட்டது.

தொழிற்கட்சியில் ஏற்பட்ட அணுத்தடை ஆதாவாளர்களை திரு. கெயிட்ஸ்கல் ஒதுக்கிவிட்டார். ஜரோப்பியப் பொதுச்சந்தையில் பிரிட்டன் சேரும் விஷயத்தில், திரு.கெயிட்ஸ்கல், காமன்வெல்த்துக்கே முதலிடம் அளித்தார். பொதுச்சந்தையை விட, காமன்வெல்த்தே பிரிட்டனுக்கு முக்கியம் என்பதை அவர் தம் கட்சியின் சார்பாகப் பிரகடனப்படுத்திவந்தார்.

பிரிட்டிஷ் அரசியலுக்கு எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறதோ, அதே நஷ்டத்தைக் காமன்வெல்த்துக்கும் அவரது மரணம் கொண்டுவந்திருக்கிறது எனக் கூறுவது வெறும் புகழ்ச்சியல்ல.

★

சுபாஷ் சந்திரபோஸ்

நேதாஜி சுபாஷ்சந்திர போஸின் 67-வது பிறந்ததினம் கடந்த 23-ம் திகதி இந்தியா வெங்கும் கொண்டாடப்பட்டது. வங்காளச்சிங்கம் சுபாஷ் போஸைப் பற்றி பெருமை கொள்ளாத இந்தியனே கிடையாது.

சுபாஷ்போஸின் வாழ்வை இரு பெரிய அத்தியாயங்களாகப் பிரிக்கலாம். மகாத்மா காந்தியின் தளகர்த்தராக அவர் இந்தியாவில் சுதந்திரப் போராட்டம் நடத்தியது முதலாவது அத்தியாயம். பின் அவர் வெளிநாடுசென்று, இந்திய சுதந்திரத்தை ராணுவ அடிப்படையில் நிலைநாட்ட முயன்றது இரண்டாவது அத்தியாயம்.

இந்திய சுதந்திரப்போராட்டத்தில் முதல்தரத்தலைவர்களில் சுபாஷ் பாபுதான் வயதில் இளையவர். மகாத்மாகாந்தி, ஸர்தார் வல்லபாய் படேல், மௌலானா அபுல்கலாம்ஆஸாத், ஸ்ரீமதிசரோஜினிநாயுடு, ஆச்சார்யா கிருபாளினி, டாக்டர் ராஜேந்திரபிரஸாத், ஸி. இராஜகோபாலாச்சாரியார், பண்டித ஜவஹர்லால்நேரு ஆகிய அனைவரும் சுபாஷ்பாபுவுக்கு மூத்தவர்கள். அக்காலத்தில் காங்கிரஸின் இளம் தளபதிகளாக ஜவஹரையும், சுபாஷ்போஸையுமே கொள்வார்கள். இருவரும் தீவிரப்போக்கு நிறைந்தவர்கள். ஆனால் நேருஜி எவ்வளவுதான் தீவிரப்போக்கு கொண்டிருந்தாலும், காந்திஜியின் வசியத்தில் கட்டுப்பட்டு விடுவார். போஷ்அப்படியல்ல. பிற்காலத்தில் அவர்கள் காந்திஜியின் அகிம்சைக்கொள்கைகளிலிருந்து மாறுபட்டார். காங்கிரஸிலிருந்து பிரிந்து, "பார்வர்ட் பிளாக்" கட்சியை நிறுவினர்.

வீரம் செறிந்த தலைவரான சுபாஷ் பாபு, காங்கிரஸில் இருக்கும்போதுகூட பெரும் தலைவர்களுடன் பலமுறை மோதிக்கொண்ட சுவாரஸ்யமான சம்பவங்கள் இந்திய தேசிய காங்கிரஸின் சரித்திரத்தில் ஏராளமாக உண்டு. ஸர்தார் படேலுக்கும் சுபாஷுக்கும் சிலவிஷயங்களில் ஒற்றுமை உண்டு. எதிரிகளைத் தாக்குவதில் இருவரும் வல்லவர்கள். ஆனால் சாம, பேத, தானப்பிரயோகங்கள் அனைத்தையும் பிரயோகித்த பின்பே இறுதியாகத் தாக்குவார் ஸர்தார் படேல். அதில் நிச்சயம் வெற்றியும் அடைவார். சுதந்திரத்திற்குப்பின் அவர் இந்தியசமஸ்தானாதிபதிகளுடன், குறிப்பாக ஹைதராபாத் மன்னருடன் தண்டப்பிரயோகத்தில் இறங்கியது இதற்கு உதாரணம். ஆனால் சுபாஷ், பின் விளைவுகளைப் பற்றிச் சிந்திப்பதில்லை. அவரது இளமையும், வீரமும் உடனடித்தாக்குதலையே விரும்பின.

இரண்டாவது மகாயுத்தம் ஆரம்பமானபோது காங்கிரஸின் சம்மதமின்றி இந்தியா யுத்தத்தில் பலவந்தமாக இழுத்துவிடப்பட்டது. இதை ஆட்சேபித்து மாகாணங்களில் காங்கிரஸ் மந்திரிசபைகள் ராஜினாமாச்செய்தன. 1942-ம் ஆண்டு இந்தியத் தலைவர்கள் நாடெங்கும் திடீரெனக் கைதுசெய்யப்பட்டார்கள். இறுதிப்போராட்டம் நடத்துவதற்காக காங்கிரஸ் காரியக்கமிட்டி, காந்திஜிக்குச் சர்வாதிகாரம் அளித்ததைத் தொடர்ந்து லட்சக்கணக்கானோர் கைதாகினர். ஆயினும் அதற்கு முன்பே சுபாஷ்பாபு இந்தியாவைப் பலாத்காரத்தின் மூலம் விடுதலைசெய்வதில் நம்பிக்கைகொண்டுவிட்டாராதலால், யுத்த காலத்திலேயே பிரிட்டிஷ் அரசாங்கம் அவரை வீட்டுக்காவலில் வைத்திருந்தது. ஆனால் அவர் அதிகாரிகளுக்கு டிமிக்கிகொடுத்துவிட்டு, நீர்மூழ்கியின் மூலம் ஜெர்மனிக்குத் தப்பிச்சென்றார். அவரது வாழ்க்கையின் 2-வது அத்தியாயம் அதன்பின் ஆரம்பமாகியது.

அச்சுநாடுகளுடன் (ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான்) சேர்ந்து, அவர்கள் உதவியுடன் இந்தியாவை விடுவிக்கத்திட்டம் தீட்டினார்போஸ். ஜெர்மனியில் அடால்ப் ஹிட்லரைச் சந்தித்தார். இத்தாலியில் முஸோலினியைச் சந்தித்தார். இரு சர்வாதிகாரிகளும் அவருக்குப் பூரண ஆதரவு அளித்தனர். பின் அவர் ஜப்பானுக்குவந்து, பிரதமர் டோஜோவின் உதவியைப் பெற்றார். சுதந்திர இந்திய அரசாங்கத்தை நிறுவும் பொருட்டு அந்தமான், நிக்கோபார் தீவுகளை ஜப்பான் அவரிடம் ஒப்படைத்தது. சுபாஷ்பாபுவின் சுதந்திர அரசாங்கத்தை அந்த நாடுகள் அங்கீகரித்தன.

சுபாஷ் பாபுவின் செல்வாக்கின் காரணமாக அச்சுநாடுகளிடம் கைதிகளாய் இருந்த இந்திய வீரர்கள் கொடுமைகளிலிருந்து தப்பினர். சாதாரண இந்தியப் பிரஜைகளும் அவ்வளவு துன்பத்திற்காளாகவில்லை. இந்தியக்கைதிகளையும், இந்தியர்களையும் கொண்டு ஆஸாத் ஹிந்த் படையை சுபாஷ் நிறுவியும் அதன்பின் அவரது படைகள் ஜப்பானியர் உதவியுடன் இந்தியாவின் கிழக்குப் பகுதியில் மணிப்பூர், கொஹிமா, இம்பால் ஆகிய பகுதிகளைக் கைப்பற்றியதும் தெரிந்திருக்கும்.

ஆனால் யுத்தப்போக்கு மாறியது. ஆபிரிக்காவில் 2-ம் போர்முனை ஆரம்பிக்கப்பட்டாலும், இதைத் தெரிந்துள்டாலின்கிராட் போராட்டமும், ஜெர்மனியின் வீழ்ச்சியும், குறிப்பாக ஹிரோஷிமாவில் அணுக்குண்டுத் தாக்குதலும் ஜப்பானை சரணகதிக்கு இழுத்துச் சென்றன. இக்கட்டத்தில் தான் சுபாஷ்பாபு விமான விபத்தில் உயிர் நீத்ததாகச் செய்தி வந்தது. ஆனால் இன்றும்கூட அவர் உயிர்நீத்தார் என்ற செய்தியை ஒரு சிலர் நம்பவில்லை.

ஆயினும் இந்திய அரசாங்கம் நியமித்த விசாரணைக் கமிட்டி அவரது மரணத்தை ஊர்ஜிதம் செய்தது. கமிட்டியில் ஒருவர் மட்டும் (போஸின் சகோதரர்) இக்கருத்துக்கு மாறுபட்டார். ஜப்பானிய பௌத்த ஆலயத்தில் வைக்கப்பட்டிருந்த அவரது அஸ்தி இந்தியாவுக்குக் கொண்டுவரப்பட்டது. ஆயினும் தமிழ் நாட்டில் முத்துராமலிங்கத் தேவர் போன்றவர்கள் அவர் உயிரோடிருப்பதாகப் பிரசாரம் செய்து வந்தனர்.

இந்திய சுதந்திரம், மகாத்மா காந்தியின் மறைவு ஆகிய இரு பெரிய நிகழ்ச்சிகளின்போதும்கூட அவர் தாய்நாடு திரும்பவில்லை என்பதும், சுதந்திர இந்திய அரசாங்கம் அவர் மீதிருந்த தடையை அகற்றியும் இந்தியாவுக்கு அவர் வரவில்லை. என்பதும் குறிப்பிடத்தக்க விஷயங்கள்.

இந்திய யுத்தக் குற்றவாளிகளின் பட்டியல் சுபாஷ்போஸின் பெயர் முதலிடம் வகித்தது. ஆனால் ஹிட்லரைப் போலவே அவரது மறைவும் மர்மமாய் இருந்தது. இந்திய தேசிய ராணுவத்தை நிறுவி அவர் பிரிட்டனுக்கெதிராகப் போர் தொடுத்தார் என்ற அடிப்படையில் டில்லி செங்கோட்டையில் வழக்கு விசாரணை ஆரம்பமாகியது. சரித்திரப் பிரசித்திபெற்ற இந்த வழக்கில் இந்திய தேசிய ராணுவத்தைச் சேர்ந்த காப்டன் ஷாநவாஸ், காப்டன் சைகால், காப்டன் டில்லன் ஆகியோருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டு, பின் ஆயுள் தண்டனையாகமாற்றப்பட்டது. பின் அவர்கள் மன்னிப்பளிக்கப்பட்டனர்.

டில்லி செங்கோட்டை வழக்கில் எதிரிகளின் சார்பாக, உலகப் புகழ்பெற்ற வழக்கறிஞர் திரு புலாபாய் தேசாய் தலைமையில் தலைசிறந்த தலைவர்கள் வழக்கறிஞர்களாகத் தோன்றினர். பண்டித நேருவும் 25 வருடங்களுக்குப்பின் பாரிஸ்டர் உடையில் தோன்றினர். பின் நடைபெற்ற விஷயங்கள் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தவை.

சுபாஷ் போஸின் வழக்கு தேசபக்திக்கு ஒரு எடுத்துக் காட்டாய் இருந்தது. தூய்மையும், வீரமும் பொருந்திய அவர் கடைசிக் காலத்தில், தனது காரியதரிசியாக ஹிட்லர் அனுப்பிவைத்த ஆஸ்திரியப்பெண்ணை மணந்ததும், அதன் பலனாக அனிதா போஸ் என்ற புதல்வியைப் பெற்றதும், சமீபத்தில் அவர் புதல்வி இந்தியா வந்திருந்ததும் அனைவருக்கும் தெரியும். இந்திய அரசாங்கம், ஆஸ்திரியாவிலுள்ள போஸின் மனைவிக்கும், புதல்விக்கும் மாதாந்த உதவி அளித்துவருகிறது.

பூஜ்யம் தபால்

ஜெனரல் டிகால், ஜனாதிபதி, பாரிஸ், பிரான்ஸ்.

வீரரே!

பல நாட்களுக்கு முன்னரே தங்களுக்குக் கடிதம் எழுதி இருக்கவேண்டும். அல்ஜீரியா சேற்றிலிருந்து விடுதலை பெற்றதுடன், பிரான்ஸிலே சர்வஜன வாக்கெடுப்பு மூலம் தங்களது அரசியல் எதிரிகளையெல்லாம் தோற்கடித்து, தனிப்பெருந் தலைவராகி விட்டதற்காக அப்போதே தங்களுக்கு 'டபிள் காங்கிராசுலேஷன்' கூறி இருக்கவேண்டும். தவக்கத்துக்கு தயவுசெய்து மன்னிக்க வேண்டுகிறேன்.

முக்கியமாக ஒரு பெரிய 'தாங்ஸ்' கூறுவதற்காகவே இக்கடிதத்தை எழுதுகிறேன். ஐரோப்பிய பொதுச்சந்தையில் சேரவேண்டாமென்று காமன்வெல்த் குடும்பத்தைச் சேர்ந்த, நாங்கள் கரடியாகக் கத்தினோம். தங்கள் நண்பரான பிரிட்டிஷ் பிரதமர் மாக்மிலன் செவிசாய்க்க மறுத்துவிட்டார் பிரிட்டனின் நன்மையைக் கருதி, அதில் சேரத்தான் வேண்டுமென்று பிடிவாதம் பிடித்தார். நாங்கள் ஒன்றும் பேசமுடியாமல் 'விதியே' என்றிருந்தோம். நல்லவேளை. தாங்கள் எங்களுக்குத் தோன்றுத் துணையாக முன்வந்து பிரிட்டனை ஐரோப்பிய பொதுச் சந்தையில சேர்த்துக்கொள்ள முடியாதென்று மறுத்துவிட்டீர்கள். சபாஷ்!

சென்ற யுத்த காலத்திலே தங்களுக்குத் தஞ்சமளித்துக் காத்த பிரிட்டனிடம் நன்றியோ தயவு தாட்சண்யமோ இன்றி, கைவிரித்து, எங்கள் விருப்பத்தை நிறைவேற்றி வைத்தமைக்காக எங்கள் நன்றியைத் தங்களுக்கு எப்படித் தெரிவித்துக்கொள்வதென்று தெரியவில்லை. காமன்வெல்த் குடும்பத்தைக் கைவிட்டு, ஐரோப்பிய குடும்பத்தில் சேரத் தயாராக இருந்தார் பிரிட்டிஷ் மாமா மாக்மிலன். அவரைத் தடுத்துக் காமன்வெல்த் குடும்பத்தைக் காத்தமைக்காக, தங்களுக்கு காமன்வெல்த் குடும்பச் சார்பாகவும், என் சார்பாகவும் 'டபிள் தாங்க்ஸ்' கூறுகின்றேன். உங்களுக்கு இதனால் நல்ல புண்ணியமும் கூட.

மாக்மிலன் மாமாவுக்கு மட்டுமன்றி, கென்னடி மச்சானுக்கும் தாங்கள் 'பேப்பே' கூறிவிட்டதாகக் கேள்விப்பட்டேன். அடேயப்பா! தங்கள் துணிச்சலே துணிச்சல். பிரான்ஸைக் காக்க, அமெரிக்க உதவியை நம்பியிருக்க முடியாதென்றும், தாங்களே காத்துக்கொள்ள முடியுமென்றும் கூறியதுடன், மாமாவும் மச்சானும் மிகப்பாடுபட்டுக் கட்டிய 'நேட்டோ' என்ற வடஅட்லாண்டிக் உடன்படிக்கையைத் தவிடுபொடி செய்து மச்சான் உதவுவதாகக் கூறிய போலாரிஸ் ஆயுதத்தையும் வேண்டாமென்று மறுத்துப் போட்டீர்கள். தங்களிடம் அணுகுண்டு இருப்பதாயும், அதனால் தங்களைக் காத்துக் கொள்ள முடியுமென்றும் கூறினீர்களாம். இதையெல்லாம் பார்க்கையில், தாங்கள் ஐரோப்பாவின் புதிய ஹிட்லராகி வருகிறீர்களோ என்று கூடச் சந்தேகமேற்பட்டது.

உலகமெல்லாம் ஒருகுடும்பமாக வேண்டியிருக்க ஐரோப்பிய குட்டிக் குடும்பத்தைக் கட்டிக் கொண்டு குண்டு சட்டியிலே தாங்கள் குதிரை ஓட்டமுற்படமாட்டீர்களென்றே நம்புகிறேன்.

இப்படிக்கு,
பூஜ்யம்.

குறிப்பு:

தங்களது ஜன்ம சத்துருவான ஜெர்மனியின் தலைவர் அடினோர் பாட்டையா தங்கள் ஊருக்கு வருவதாயும் தாங்களும் ஜெர்மனிக்குச் செல்ல இருப்பதாயும் கேள்விப்பட்டு மிக மகிழ்ச்சி. பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ! தங்கள் புதிய போக்கு தங்கள் மாமனுக்கும் மச்சானுக்கும் அதிக கவலை அளித்திருக்கிறது. பாவம்! இதனால் தான் மச்சான் கென்னடி மாஸ்கோ பக்கம் சாய்ந்துவருவதாயும் கேள்விப்பட்டேன். அதற்காகவும் தங்களை நன்றியுடன் பாராட்டவேண்டும்.

எனக்கு இப்போது ஒரு விஷயம் புரியவில்லை. உங்களில் யாருக்கு யார் நண்பர்? யார் விரோதி? எந்த விரோதிக்கு மாறுக நீங்களெல்லாம் அணுகுண்டு ஆயுதங்களை உற்பத்தி செய்துகொண்டு போகிறீர்கள்?

"பூ"

'ராடார்' சங்கிலித் தொடர்பு

பிரெமன் நகரைச் சேர்ந்த வீசர் சங்கமத்திலிருந்து, பிரெமர் ஹேவன் துறைமுகம்வரை ராடார் சாதன சங்கிலித் தொடர்பு 1964-65 க்குள் அமைக்கப்பட்டுவிடும் என்று தெரிகிறது. இந்த சாதனங்கள் அமைக்கப்பட்டுவிட்டால் மிகக் கடுமையான மூடுபனியின் போதுகூட கப்பல்கள் வழியறிந்து செல்லமுடியும்.

மூடுபனி ஏற்பட்டுவிட்டால் கப்பல்கள் நங்கூரம் பாய்ச்சி தங்கிவிட வேண்டியிருப்பதால் காலமும் பொருளும் விரயமாகின்றன. இந்த 36 மைல் தூரத்திற்கு 'ராடார்' சாதனங்கள் அமைப்பதுடன் பிரெமர் ஹேவனில் 77 அடி கோபுரமும் கட்டப்படும்.

நல்ல கோழிக்கு சில இலட்சணங்கள் உண்டு

சிறந்த குஞ்சுகளைப் பொறுக்கி எடுத்தால் நிரம்பிய பயனைப் பெறலாம்

முட்டை வியாபாரத்துக்காக கோழிகளை வளர்ப்பவர்கள், தாம் வளர்க்கவேண்டிய கோழிகளை குஞ்சுப்பருவத்திலேயே கவனித்துப் பொறுக்கி வளர்ப்பது இலாபகரமானது. திறமையுடன் குஞ்சுகளைப் பொறுக்குவதால் அவைகளை வளர்த்துப் போஷிப்பது மிகவும் சிக்கனமாக இருக்கும். கோழி சிறிய காலம். அந்தக் காலத்தை எவ்வளவு இலாபகரமாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டுமோ அவ்வளவு இலாபகாமாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

நன்றாக முட்டையிடக்கூடிய கோழிகள் கொண்ட கூட்டம் சில சமயம் அதிக முட்டை தராமல் போகலாம். அதற்குக் காரணம் கோழிகள் அல்ல. சரியான வகையில் தீனி போடாமல் இருந்திருக்கலாம். எவ்வளவு பொறுக்கி வளர்த்தாலும் பராமரிப்பில் உள்ள குறைகளால் முட்டைகள் குறையும். ஆகையால் பொறுக்கிய கோழிதானே தீனி வைத்தாலும் வைக்காவிட்டாலும் முட்டைகள் நிரம்பக் கிடைக்கும் என்று எண்ணுவது தவறு. நிரம்பத் தீனியையும் தின்று விட்டு முட்டையிடுவதில் சுணக்கம் பிடிக்கும் கோழிகளைப் பிரித்து ஒதுக்குவதில் தான் இருக்கிறது கோழியினத்தில் பொறுக்கி எடுத்து வளர்க்கும் கலை.

கோழிகளுக்கு முறையாக முட்டையிடும் கணக்கு வைத்திருக்கும் விவசாயிகள் எளிதில் எந்தக் கோழி குறைவாக முட்டையிடுகிறதோ அதைப் பிரித்து ஒதுக்கிவிடலாம்.

இப்போது சாதாரணமாகக் கோழிகளை வளர்ப்பவர்கள் எவ்வாறு நல்ல கோழிகளைப் பொறுக்கலாம் என்று கவனிப்போம். நல்ல கோழிக்குச் சில இலட்சணங்கள் உண்டு. அதிக முட்டையிடாத பெட்டைகளுக்குச் சில இலட்சணங்கள் உண்டு. இவைகளைக் கோழி வளர்ப்பவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

கவனிக்கவேண்டிய இலட்சணங்கள்

கோழிகளைப் பொறுக்கி வளர்க்கக் கவனிக்கவேண்டிய விஷயங்களாவன: சிறகுகளின் தரல், நிறமிழத்தல், முதிர்ச்சி, உடல் பருமன், ஆழம், அகலம், மார்பெலும்பின் நீளம் முதலியன உட்பட இடுப்பு எலும்புக்கும், பிருஷ்டபாக எலும்புக்கும் உள்ள தூரம் தலை வடிவம், சோர்வு, எலும்புகளின் மென்மைத் தன்மை, நெகிழ்வு, இடையெலும்பின் சுற்றளவு, சதையின் உணர்வு, கொண்டை, கழுத்துச் சதையின் தன்மை முதலியன. இவைகளின் லட்சணங்களை ஒவ்வொன்றாய் பார்த்தால் அதிக முக்கியத்துவம் உள்ளதாகப் படாது. இவைகளின் இலட்சணங்கள் எல்லாவற்றையும் சேர்த்து நோக்கினால் ஒரு பறவை பொறுக்குப் பறவையா இல்லை விலக்கவேண்டிய பறவையா என்று தெரியும்.

கோழியின் தீனி

நிரம்ப முட்டையிடும் கோழியும், குறைவாக முட்டையிடும் கோழியும் தம் தின்னும் தீனியை இரண்டுவிதமாகப் பயன்படுத்துகின்றன. உணவு சாதாரணமாக உடல் வளர்ச்சிக்காக ஒரு பாகமும் முட்டை உற்பத்திக்காக ஒரு பாகமும் பயன் படுத்தப்படுகிறது. முட்டை குறைவாயிடும் கோழிகள் முட்டையுண்டாக்க என்று போடப்படும் தீனிப் பாகத்தை முட்டைகளை ஆக்கப் பயன் படுத்த முடிவதில்லை. ஆகையால் அத்தகைய கோழிகள் உடலில் கொழுப்பாக உணவை மாற்றிச் சேமித்துவிடுகின்றன. நிரம்ப முட்டையிடும் கோழி - தீனி முட்டையிடும் திறனை வளர்க்கப் பயன்படாதவையாக இல்லாவிட்டால் கொழுப்பைச் சேர்ப்பதில்லை. இதனால் அதிக முட்டையிடாத கோழிக்கு வைக்கும் தீனி வளர்ப்பவருக்குச் சிக்கனமாகவும் லாபகரமானதாகவும் இருப்பதில்லை என்று தெரிகிறது.

நாடு நலம் பெற ....

சிறகு உதிர்த்தல்

கோழிகளின் சிறகுகள் சில காலங்களில் உதிரும். பிற்பாடு முளைத்துவிடும். உதிரும் காலத்தையும் முளைக்கும் காலத்தையும் கவனித்துக் கோழி வளர்ப்பவர்கள் எந்தக் கோழி நிரம்ப முட்டையிலிக்கும் எவை குறைவாக இடும் என்று கண்டறிந்து கொள்ளலாம்.

முட்டையிலிருந்து குஞ்சுகள் வெளிவந்ததும் அதன் உடலை வெல்வெட் போன்ற மயிர் மூடியிருக்கும். சில தினங்களில் இம்மயிர் உதிர்ந்து விடும். உண்மையான சிறகுகள் முளைக்கத் தொடங்கும். சில குஞ்சுகளின் இறகுகள விரைவாக முளைக்கும். சில குஞ்சுகளின் இறகுகள் மெல்லவே முளைக்கும். விரைவாக எந்தக் குஞ்சுக்கு சிறகுகள் முளைக்கின்றனவோ அவைகளைத் தேர்ந்தெடுத்து வளர்க்க வைத்துக்கொள்ள வேண்டும்.

குஞ்சுகளை பூருடாலிருந்து சீக்கிரமே வெளிப்படுத்திவிடலாம். சிறகுகள் பறவைகளை வெப்பத்துடன் காக்கும். இத்தகைய குஞ்சுகள் தீனிகுறைவாகத் தின்னும். விரைவில் வளரும்.

தாமதமாக சிறகு முளைக்கும் குஞ்சுகள் தாமதமாக வளரும். முட்டைகள் குறைவாக இடும். உடல் வெப்பத்துக்காக அதிக தீனி தின்னும்.

விரைவாக இறக்கை முளைக்கும் குஞ்சு எது என்று கண்டறிய இலட்சணங்கள், பன்னிரண்டு வாரமாகிய குஞ்சின் முதுகும் இரண்டு இறக்கைகளும் முழுதும் இறகுகளால் மூடப்பட்டிருந்தால் அதைவிரைவில் இறக்கை முளைக்கும் ராசி என்று எடுத்துக்கொள்ளலாம். தாமத இறக்கை ராசியின் பன்னிரண்டு வாரக்குஞ்சின் முதுகிலும் இரண்டு இறக்கைகளிலும் அதிக இறகு பிடித்திருக்காது. மேலும் விரைவில் சிறகு பிடிக்கும் குஞ்சுகளின் மேல் பிறந்தவுடன் இருந்தமென்மயிர் முதல் வாரத்திலேயே உதிர்ந்து சிறகு பிடிக்கத் தொடங்கிவிடும். ஆறுவாரத்தில் சிறகு முளைத்துவிடும். எட்டு வாரத்தில் முளைப்பது பூர்த்தியாகிவிடும். ஆனால் எல்லாச் சிறகுகளும் வளருவதற்கு முன்னால் சிறகுகள் உதிரவும் தொடங்கிவிடும். ஐந்தாவது வாரத்தில் வால்புறச் சிறகில் தொடங்கி, ஆறுவது வாரத்தில் ஆதார இறகுகள் உதிர்ந்து எட்டாவது வாரத்தில் அடி இறகுகள் உதிரும். பதினெட்டாவது வாரத்தில் வால் இறகுகள் முற்றிலும் உதிரும். இருபத்திரண்டாவது வாரத்தில் ஆதாரச் சிறகுகள் யாவும் உதிர்ந்துவிடும். இருபத்தியொன்றாவது வாரத்தில் அடி இறகுகளும் உதிர்ந்துவிடும். சிறகுகள முழுதும் வளருவதற்கு முன்னரே மறுமுறையும் உதிரத்தொடங்கும். பறவை முதிர்ச்சியடையும் போது இந்த ஈட்டு இறகு வளர்ச்சி முடிவுபெறும். முதல் தடவையாக முட்டையிடஆரம்பித்து அது நிற்கும் வரையில் சிறகு உதிராது. பிறகுவருடாந்திரச் சிறகுதிரல் தொடங்கும்.

சிறகுவளர்க்கும் குஞ்சுகளின் இறக்கையில் சிறகுகள் குஞ்சு பொரித்த சமயத்தில் அடிச் சிறகுகளைவிட நீளமாக இருக்கும். தாமதித்து வளர்க்கும் குஞ்சுகளின் முக்கிய இறக்கையில் சிறகுகள் குட்டையாக இருக்கும்.

(5-ம் பக்கம் பார்க்க)

கேட்டிருப்பாய் காற்றே

—III—

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

"சீ இது வெறும் மாயம்..." பாப்பாவும், புவனமும் ஒன்று.

இருவருள்ளும் ஒருவர்.

அவர்களுக்குள் எவ்வளவு பிணைப்பு, உறவு, வாஞ்சை — அவையெல்லாம் குணவதிக்கு இல்லாதவை.

புவனம் தன்னை புதுபுதுச்சீலைகளால்அலங்கரித்துக்கொள்ள விரும்புவாள். தன்னுடைய தாய் பிரட்டுத்தப்பின் ஒலி கேட்டு எழும் அதிகாலையிலே தான் குளிர்ந்த மனதுடன் இருப்பாள் என்பது புவனத்திற்கு நன்றாகவே தெரியும். எனவே அவள் பிரட்டுத்தப்பின் ஒலி கேட்குமுன்பே எழுந்து ஆவென்று வாயைப் பிளந்து குறட்டை விட்டுத் தூங்கும் பாப்பாவை எழுப்புவாள்.

"ஏ அம்மா... நேரமாச்சு எழுந்திரி..."

அவளின் ஒலியில் பாப்பா வாரிச்சுருட்டிக்கொண்டு எழுந்திருப்பாள். புவனம் மெல்ல மெல்ல விஷயததைச் சொல்லுவாள் பாப்பா அவள் சொல்வதைக் கேட்டபடியே இருப்பாள். புவனத்தின் சின்னஞ் சிறிய உதடுகள் சொற்களைப் பிறப்பிக்க நெளிந்து வருவதிலேயே பாப்பாவின் உள்ளம் லயித்திருக்கும். கடைசியில் பாப்பா புவனத்தின் வேண்டுதலுக்குச் சம்மதித்துவிடுவாள். பணக்கஷ்டத்தை எண்ணிப் பெருமூச்செறியும் உவளின் மனம், அவளையறியாமலே முனக, வேதனைச் சொற்களாய் வெடிக்கும்.

"புவனம்... நீ சொகமாயிருக்கோணும் அம்மா... என்ன செய்யிறது. நம்ம பொழைச்ச பொழைப்பு இப்படியிருக்கு..."

புவனத்தின் வேண்டுதலைத் தவிர மற்ற யாருடைய வேண்டுதலுக்கும் பாப்பா நெகிழ்ந்ததில்லை. இரண்டாவது மகள் கறுப்பாயியோ, மூன்றாவது மகள் குணவதியோ எது கேட்டாலும் அவள் கவனிக்கமாட்டாள். குணவதிக்கு இளைய இரண்டு பையன்களும், ஒரு கைக்குழந்தையும் சொட்டையும் கஞ்சியையும் தவிர வேறெதையும் கண்டறிந்திருக்கமாட்டார்கள்...

நினைவு மேடையில் கறுப்பாயி கடைசியில் கடைசியாய் நிற்கிறாள்...கறுப்பாயி என்றுமேதனிமையில் பேசாமலிருப்பாள். வாழ்க்கையில் எல்லாவற்றையுமே இழந்துவிட்டவள் போல, முகத்தை ஏக்கத்துள் புதைத்து அவளிருக்கும் நிலையைக் குணவதி பலமுறை இரக்கத்துடன் கவனித்தாலும், கறுப்பாயியின் 'உம்மணாமூஞ்சித்தனம்' குணவதிக்குக் கட்டோடு பிடிப்பதில்லை. எனவே அவளோடு குணவதியும் ஒட்டிக்கொள்ளவில்லை.

"சீ... வெறும் மாயம்..."

மாறி மாறி மனவிளிம்பில் வரும் அவர்களை உடனடியாய் காணவேண்டுமென்றும், பாப்பாவை அணைத்துக்கொண்டு கூவவேண்டுமென்றும் அவளுடைய நெஞ்சுக்குள்ளே ஆசை நெருப்புப் பந்தமாய் பொங்கியெரிந்தது. 'அம்மா' என்று காந்திமதியை அழைக்கும் உணர்ச்சியற்ற சொல்லிற்குப் பதிலாய், எலமலைக் காம்பறையில் இருக்கும் தன்னுடைய வாயைக் கூவி அழைக்கவேண்டுமென்ற வெறியுணர்வு தலைப்பட, உடலில் ஏதோ ஒரு புதுமுறுகல் பரவிப் படர்ந்து அவளின் உணர்வுகளைச் சிலிர்க்கவைக்க அவள் அயர்ந்து போய் நித்திரையாகிப் படிப்படியாகத் தன்னுணர்விழந்து விட்டாள்.

அடுக்கல் நினைவுகள். அலை முறிந்து ஒரேவடிவில் அமிழ்ந்திச் சங்கமமாக நிம்மதியாகத் துயின்ற குணவதி அனிச்சையாகவே துள்ளி எழுந்தாள். பொழுது விடிகின்றது.

குணவதி பரபரப்புடன் பாயைச் சுருட்டி மூலையில் வைத்தாள்.

குணவதிக்கு அன்று உடலில் அலுப்போடு கூடிய புதிய கிளுகிளுப்பு. உடலின் வேகம் ஒருகணம் கிளர்வதும், மறுகணம் தளர்வதும் போல அவள் உணருகின்றாள்.

கலண்டரில் திங்கட்கிழமைக் கடுதாசியைக் கிழித்துவிட்டுத் திரும்பிய குணவதி, தனக்குப் பின்னால் இடுப்பிரண்டிலும் கை வைத்துக்கொண்டு ஆச்சரியத்துடன் நிற்கும் குணவதியைக் கண்டதும் திடுக்கிட்டு விட்டாள்.

"என்னம்மா... என்ன...?"

காந்திமதி மெல்லச் சிரித்தாள்; வாஞ்சை கலந்த செல்லப் புன்னகை அது.

"குணவதி... நீ அறைக்குளை... போ... நீ... நீ..."

குணவதியின் உடல் சிலிர்ப்புண்டது; இரத்த நாளங்களில் புதிய துடிப்பு பிரவகிப்பது போல உணர்வு தலையெடுக்க அவள் உள்ளே செல்லுகின்றாள்.

அவள் 'பெரிய மனிஷி'யாகி விட்டாள். அவளின் வாழ்க்கையில் இனி ஒரு புதிய அத்தியாயம் திறக்கப்படப்போகின்றது.

அடுத்த இதழில்
யோ. பெனடிக்ற் பாலன்

இதயம் தாங்குமா?

(8ம் பக்கத் தொடர்ச்சி)

டிற்காக வைப்பாள். இரவிலும் சாப்பிட்டபின் மிகுதியிருந்தால் பாட்டிக்கு அடுத்த நாட்காலை உணவுக்குப் போதுந்தான். இல்லாவிடில் கிழவியின் வயிற்றைக் காலையில நிரப்புவது நீர் ஆகாரந் தான். ஆனால் வசந்திக்கு மட்டும் பக்கத்து வீட்டு இடியப்பக்காரியின் உள்ளங்கையளவான இடியப்பம் வாங்கிக் கொடுப்பது வழக்கம்.

சோற்றுப்பானைக்குள் நீர் ஊற்றிய வசந்தி அடுக்களை விளக்கை எடுத்துக்கொண்டு சென்று வீட்டின் திண்ணைக் குந்தில் வைத்துவிட்டுப் பாவாடையை ஒதுக்கிச் சப்பாணி கட்டிக்கொண்டு, புத்தகத்தை எடுத்துப் படிக்கின்றாள்.

இரண்டொரு பாடங்கள் படித்திருப்பாள். பெரிய அசதியாகவிருக்கிறது என்பதைக் காட்டுவதற்காகப் பெருங் கொட்டாவியும் வருகிறது. தொடர்ந்து இரு கைகளையும் மேலே உயர்த்தி இரண்டையும் ஒன்றோடு ஒன்று பிடித்து நெட்டி முறிக்கின்றாள்.

புத்தகத்துக்கு அருகில் இருந்த விளக்கைச் சுற்றி ஈசல்களின் தொல்லைகள் அதிகரிக்கின்றன. இறகுகளும், கால்களும் ஒடிந்த ஈசல்கள், அடி நிழலில் வீழ்ந்து கிலுகிலுக்கின்றன. ஈக்களிலிருந்து ஒருவித அருவருப்பு நாற்றம் மூக்கைத் துளைக்கிறது. எதையும் சகிக்க முடியாத வசந்தி புத்தகத்தை மூடி வைத்துவிட்டுப் படுக்கைச் சென்றாள்.

பாட்டியின் பழைய சேலையின் ஒரு பட்டை முதுகுக்குக் கீழும், மறுபட்டை உடலுக்கு மேலும் போட்டு நீட்டி நிமிர்ந்தபடி முகட்டை நோக்கி ஏதோ யோசனையில் அமிழ்ந்து கின்றாள். இதனால் அல்லலுற்ற இமைகள் கருமணியை மேலே பார்க்காதபடி தடுத்து ஒன்று டனென்று பிணைந்து குசலம் விசாரிக்கின்றன.

தலைமாட்டுப் பக்கத்திலே தான் வசந்தி விளக்கை அணைத்துவைப்பது வழக்கம். இன்று அவளுக்கு என்ன யோசனைதான் வந்ததோ தெரியவில்லை விளக்கு எரிந்து கொண்டிருக்கின்றது

என்ன கொடுமை? இவ்வளவு ஈசல்களும் இறந்தும், இறவாமலும் விளக்கின்கீழ் போராடிக் கொண்டிருக்கின்றன. இதைப் பார்த்து மனஞ்சகிக்க முடியாமலோ என்னவோ வசந்தியின் பாட்டி விளக்கை அணைக்கின்றாள்.

இரண்டாம் சாமத்தைக் காட்டுவதற்காகச் சேவல்கள் இறகுகளை அடித்துக் கூவுகின்றன. இல்லை மூன்றும் சாமத்தையும் எடுத்துக்காட்டிய சேவல்கள் அடங்குகின்றன.

பாட்டியின் சேலையைத் தனது உடலிலிருந்து கைகளாலும், கால்களாலும் விலக்குகின்றாள். இரண்டு மூன்று முறை கண் இமைகள் விலகுவதற்கு வேதனைப்பட்டு ஒரு படியாக விலகுகின்றன. விடிய முன்னர் வேண்டிய ஒளி ஓரளவு படர்ந்திருப்பது தெரிகின்றது. கைகால்கள் இலேசாக நீட்டி மடக்கிச் சோம்பலை முறித்துவிட்டு பாட்டியை எழுப்பினாள்.

"கடபுடா" என்ற சத்தத்திற் கிடுகு வண்டில்தான் வருகிறது என்பதை அறிகின்றாள்.

"கிடுகு வில்லுக்கு இருக்கே' இது வண்டிற்காரனின் குரல்

"கிடுகு இருக்கு"என்று தன் மென் குரலைக் கொடுத்துவிட்டு, பேத்தியாருக்குக் காத்திராமல் பாயைச் சுருட்டி அசைவில் வைத்துவிட்டு முற்றத்திற்கு விரைகின்றாள். கிடுகையும் கையில் எடுத்துவிட்டாள். கிடுகு கையிலிருந்து நழுவுகிறது. ஏன் நழுவுகின்றது? சுமார் ஓரடி நீளத்திற்கு முல்லையன அரித்துவிட்டது. விடியற்காலையில் மரங்களிலிருந்து பனிநீர்வடிவது போல் வசந்தியின் கண்ணீரும் வடிந்து தரையை நனைக்கின்றது.

தூரத்தே "கடபுடா" என்ற சதத்தம். அந்தக் கிடுகு வண்டில் கண்ணுக்குத் தெரியாத தூரத்தில் சென்றுகொண்டிருந்தது.

(யாவும் கற்பனை)

அத்தியாயம் 4

கேட்டிருப்பாய் காற்றே

இப்பொழுது குணவதியின் நெஞ்சத்தளத்தில், அவளது குடும்ப நினைவே அயற்சூழல் காரணமாகத் தோண்டி எடுக்கப்பட்டுவிட்டது. இடைக்கிடை தோன்றும் நினைவுகளும் மின்னற்கீற்றுகளாய் கோடிட்டு உடனுக்குடன் அழிந்துவடுவையிடாது மறைந்தன.

இப்பொழுது அவளுக்கு உலகமே இராமமூர்த்தியின் வீட்டிற்குள் அடங்கிவிட்டது. மலைப்பாறைக்கு வடுக்கள் தேய்வது போல ஆகிவிட்ட மனநினைவுகள், இப்பொழுது அந்தக் குடும்பத்தில் இறுக ஒட்டிக் கொண்டு, அந்தக் குடும்பத்தையே பற்றுக் கோடாகக் கொண்டுவிட்டது.

முன்பிருந்ததைவிட இப்பொழுது அவளின் போக்கில் தலைகீழான மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. முன்பு அவள் பல்துலக்காமல் எத்தனையோ தடவை சாப்பிட்டிருக்கிறாள். தோட்டத்தில் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் போடும் நாட்களிலெல்லாம், தோட்டத் தொழிலாளர்கள் செய்வது போலவே அவள் வெறும் பச்சைத் தண்ணீரைக் குடித்துப் பசியாறியிருக்கின்றாள்; மூலையினிலுள்ள சாக்குரெட்டில் சோர்ந்து சுருண்டு புளுவாகிக் கிடந்திருக்கின்றாள். ஆனால் இப்பொழுது அவளின் போக்கு அதற்கு எதிரிடையாக மாறிவிட்டது அவள் நேரந்தவறாது ஓடும் மணிக்கூண்டைப்போல கருமங்களைச் செய்தாள். வழியும் வியர்வையைச் சுண்டியெறிவதும் மின்வெட்டுப்பொழுதிற்

குறுநாவல்

குள். அவள் முகத்தினில் புன்னகை வழிய வழிய துறுதுறுப்புடன் வீட்டுவேலைகளைச் செய்வது கண்டு இராமமூர்த்தியே அவளை வியந்து பாராட்டியிருக்கின்றார்.

அவள் தனக்குள்தானே திட்டம் போட்டுக்கொண்டு செயலாற்றிக் கொண்டாள். வெள்ளிக்கிழமையென்றால் அதிகாலையிலேயே நறுமணத்தைக் கமழ்ந்துகொண்டு ஊதுவத்திக் குச்சிகள் எரிய ஆரம்பிக்கும். தன்னுடைய பிறந்த வீட்டைப் போலவே அவள் அந்த வீட்டில் ஓடியாடி வேலைசெய்துகொண்டிருந்தாள். அங்கேதான் அவளுக்குகடமையுணர்ச்சி, வாழும் வீடென்ற பற்று முதலியவை ஏற்பட ஆரம்பித்தன. எலமலைக் காம்பறை, மழை காலத்தில் ஒதுங்கப பயன்படும் ஒதுக்கிடம் போல அவளுக்கு இப்பொழுது உணர்வு தட்டியது. அதிகாலையில் நித்திரைவிட்டெழுவது, பின்பு ஏதாவது பழையதையோ றொட்டியையோ உண்பது, எங்காவது ஏலக் காட்டிற்குப் போவது, திரும்புவது, சோறோகஞ்சியோ கிடைத்தால் வயிற்றை நிரப்பிவிட்டு வம்பளக்க ஆரம்பிப்பது ... உறக்கம், ஒரு கட்டுப்பாடோ வரையறை [illegible] மிருக வாழ்வு வாழ்ந்து அங்கேயே மடிந்து வாழும்பொழுது முதலாளிகளுக்கு உழைத்து வெறும் சக்கைகளாய்மாறியது போதாதென்று — இறப்பின் பின் மண்ணுக்கே மீண்டும் பசளையாகும் அவர்கள் ... அவர்களில் அவளுமொரு கொழுந்து. அது அரைப்பு மெஷின் என்ற கொடுமையுள் அரைபட்டு நைந்துபோகாது இயல்பாகவேவளர்ந்து பசுமை பூத்து, மகிழ்வில் கால்பரவி செழுமையிற் சடைத்துநிற்கப் போகின்றதா?

ஆனால் ஒரு வெள்ளிக்கிழமையன்று நடந்த சம்பவம் அவளின் மனதினில் ஓரளவிற்கு வருத்தத்தை ஏற்படுத்திவிட்டது. கண்டியில் அப்பொழுது பெரகரா நடந்துகொண்டிருந்தது. குணவதி அதைப்பற்றிக் கதை கதையாகக்கேள்விப்பட்டிருந்தாள். அறுபது எழுபது யானைகள் மின்சார விளக்குகள் வர்ணஜ்வாலை கக்க அசைந்து அசைந்து நடந்து செல்ல, அவை ஒவ்வொன்றிற்கு முன்னாலும் பிரதானிகளும், புத்தபிரானின் புனிததந்தத்தைத்தாங்கி இறுமாப்புடன் நடந்துசெல்லும் ராஜயானைக்கு அருகாக தலதமாளிகாவின் பிரதான நிலாமையும் செல்ல, கண்டிய நடனக்காரர்கள் இனிய ஒலியெழுப்பி பக்திசிரத்தையோடு நாட்டியம் ஆட, காவடிகள் சுழன்று சுழன்று நேர்த்தியாக ஆட்டம்போட, அழகிய மின்சாரதீபங்களோடு செல்லும் பெரகரா விழாவைப் பற்றிககேள்விப்பட்டதிலிருந்து அந்தவிழாவைப் பார்க்கவேண்டுமென்ற ஆசை அவள் நெஞ்சினுள் உதயமானதற்கு, தோட்டத்துக்குள் கட்டப்பட்டிருக்கும் சிறிய கோவில்கள்தான் காரணம்! தோட்டத்தின் காம்பறைக்குள் அறுவர் வாழ்வும் சமையல் வேலைகளும் நடந்ததென்றால், தோட்டத்து இறைவனுக்கு ஒரு தகரக்கோவில்— அவ்வளவுதான்! மனிதர்களைப் போல அடைந்து வாழாமல் அந்தஇறைவன் தனியாக வாழ்கிறார்! தோட்டத்து ஏழ்மைக் கோவிலையே கண்டு அலுத்தவள் இப்பொழுது எவ்வளவு பெரிய பெரிய கோவில்களையெல்லாம் காணுகின்றாள்!

வீட்டுவேலைகளைச் செய்துவிட்டு மாலைவேளைகளில்அவள் யன்னற்புறமாக முகத்தை வைத்துக்கொண்டு வெளியே பார்த்தபடி நிற்பாள். மஞ்சள் மாலையில், பசுஞ்செடிகளும், ஓங்கி உயர்ந்து நிற்கும் கமுக மரங்களின் வழுவழுப்பான மஞ்சள்பச்சை குழைந்தமனதை வசீகரிக்கும் குழையல்நிறமும், கித்துள் மரங்களின் தலைசுமந்த கடும்பச்சைஇலைகளும், குப்பை குப்பையாகக் கிடக்கும் செவ்வந்தியின் மஞ்சள் மலர்க்கூட்டமும் அந்த இளம் உள்ளத்திலே இனிமையான எண்ணங்களைச் சாம்பிராணிப் புகை போலக் கமழவைத்துக்கொண்டேயிருக்கும்! வெகுதொலைவிலிருந்து மகாவலித்தாயின் சலசலப்புக்குரல், மலைமுகட்டின் வளைவு நெளிவுகளில் வீழ்ந்து உடைந்து நைந்து பல ஒலி அலையில் வீணைத் தந்திகளின் மாறுபட்ட ஓசைகளாய் ஒலியெழுப்பும்! படிவெட்டி அதற்குள் நீரைத் தேக்கி, அலசிச் சேறாக்கி, நெல்மணிதூவி, அது பிறப்பிக்கும் பசுமநெற்குலையிலே உள்ளம் பூரிக்கும் ஏழை விவசாயியை அவளது உள்ளம் — கண்கள் யாவுமே அள்ளி அள்ளி விழுங்கி ஜீரணிக்கும்!

கப்பாத்துச் செய்ததேயிலைச் செடிகளையும், சடைத்துநிற்கும் முருக்கமரங்களையும், கோட்டைமானாப் புற்பரப்பையும் கண்டு கண்டு அலுத்து, சோகமூச்சை விட்டுக்கபங்கட்டியிருந்த குணவதியின்நெஞ்சம், இப்பொழுது உடல் அலுப்புப்போக மஞ்சன நீராடி, பஞ்சணையில் துயிலும் சுகானுபவத்தில் இதம்காண ஆரம்பித்துவிட்டது.

குணவதி, பைப்பை நிறுத்திவிட்டு நிமிருகின்றாள். அவளை பெரகராவுக்குக் கூட்டிச்செல்ல காந்திமதி சம்மதித்திருந்தாள்.

"குணவதி, நீ இண்டைக்கு புள்ளையளையும் கூட்டிக் கொண்டு ஜயாவோடையும் என்னோடையும் பெரகராப் பாக்கலாம். சரியா அலுவல்களைச் செய்துமுடித்திட்டு அஞ்சுமணிபோலை வெளிக்கிட்டு நில் ... என்ன?"

காலையில் காந்திமதி குணவதிக்குச் சொன்ன அந்தச்சொற்கள் அவளது ஆசைத்தீயிலே நெய்சொரிந்து சுவாலைபற்றி எரியவைத்துவிட்டது.

விறாந்தை முகப்பிலிருக்கும் மணிக்கூண்டு நான்குமுறைகள் அடித்து ஓய்கின்றது. குணவதி வீட்டுவேலைகள் எல்லாவற்றையுமே செய்துமுடித்துவிட்டாள். இனி ஒரு கொஞ்சநேரத்திற்கு அவளுக்கு ஓய்வு.

ஈஸ்வரி நல்ல உறக்கத்தில் ஆழ்ந்துகிடந்தாள். மெல்லணையின் சுகலயிப்பில் பூரித்த அந்தப் பிஞ்சின் உறக்கத்தைக் கலைக்க விரும்பாத குணவதி, பைப்படிக்கு மீண்டுஞ்சென்று முகத்தை நீரால் அலம்பினாள். பிறகு காந்திமதி வேண்டாமென்று எறிந்த குறைச்சவர்க்காரத்துண்டொன்றை வெகு பத்திரமாக எடுத்து முகத்துக்குப் போட்டுத் தேய்த்தாள். எல்லாம் முடிந்த திருப்தியில் முகத்தை நன்றாக ஈரம்போகத் துடைத்து, பளீச்சென்று துலங்க வைத்தபடியே, அவள் தனது சூட்கேஸ் எனக்கருதிக் கொள்ளும் சப்பாத்துப்பெட்டிக்குள் பக்குவமாக மடித்து கற்பூரப் பூச்சிக்கட்டிபோட்டு வைத்திருந்தபச்சைநிறக்கவுண் ஒன்றை எடுத்து மாட்டிக் கொண்டாள் ...

அவள் 'வெளிக்கிட்டு' விட்டாள்.

யன்னலோரமாகக்காந்திமதியின் வருகையைப் பார்த்தபடியே உள்ளம் இமைவெட்டாத கண்களாய்த்தவிக்க குணவதி பரபரத்தபடி நிற்கின்றாள். நேரஞ் செல்லச் செல்ல குணவதியின இளநெஞ்சம், செந்தணலின் வெட்கையில் வெந்துசுருளும் அட்டையாய் பொசுங்குகின்றது. கால்நகங்களின் துரிதமான நிலவிறாண்டல், மனஅடிவார உழைச்சல்களின் பிரதிபலிப்புத்தான்.

ஏழுமணியுமாகி விட்டது. இருள் கவ்வும் வெளிப்பகுதியில் மின்விளக்குகள் இமையாத செங்கண்களாகின்றன. என்றுமில்லாததொரு தனிமை இப்பொழுது தன்னைச் சூழ்ந்துள்ளதுபோல குணவதிக்கு அப்பொழுது தோன்றியது. காந்திமதியை இன்னமும்காணவில்லை.

வீதியில் யாரோ ஒருவன் அழுது கொண்டு பாடுகிறான். கள்வெறியில் பாடுகின்றானோ, உண்மையானசோகத்தில்தான் பாடுகின்றானோ என்பதை அவள் உணராவிடினும், அவனது ஒலி, அவளது நெஞ்சினிலே சோகச் சுருதியை மீட்டுகின்றது. அவளது கண்களில் கண்ணீர் கசிந்து நீர்க்கோடிட்டு, யன்னல் விளிம்பினில் தெறிக்கின்றன. மணிக்கூண்டின் 'டக்டக்' கென்ற ஒவ்வொரு ஒலியும் அவளின் இருதயத்திற்குள் ஓங்கியறையும் சம்மட்டியாய் விழுகின்றது.

யன்னலடியில் நிற்க நிற்க அவளின் மனம் சினத்தது. கைகளை உதறிக்கொண்டு அவள் உள்ளே சென்றாள். ஈஸ்வரியின் படுக்கை அருகாகப் போகவேண்டும் போல அவளுக்கு இருந்தது. அவள் அப்படி நினைத்துக்கொண்ட அதே வேளையில் வெளியே யாரோ வரும் காலடியரவம் கேட்டது. அவ்வளவிற்கு விரக்தி பூத்த நிலையிலும், அவளின் மனதில் அந்தக் காலடியோசை மகிழ்வையே சுரக்க வைத்தது.

அவள் அசையாமல் நிற்க கண்கள்தான் வெளியே விரைகின்றன ...

கதவுச்சீலை விலக, காந்திமதி தான் உள்ளே நடந்துவருகின்றாள். ஆனால் அவளையே பார்த்தபடி நிற்கும் குணவதியை அவள் முற்றாகக் கவனியாதவள் போல நடந்து கொண்டாள். குணவதிக்கு அந்த வேளையில் விம்மிவிம்மியழவேண்டும்போல இருந்தது. அவள் மனச்சோர்வுடன் சென்று தன்னுடைய கவுணைக் கழற்றிவிட்டு, அதைப் பத்திரமாக மடித்து சப்பாத்துப் பெட்டிக்குள் வைத்தாள். கற்பூரப் பூச்சிக்கட்டியை கவுணின இடையில் செருகினாள்.

மணி எட்டு அடிக்கின்றது.

காந்திமதி அன்றக்குப்பேசா விரதம் பூண்டாளோ என்னவோ அவள் குணவதியுடன் ஒன்றுமே பேசவில்லை.

எட்டுமணி, பதினைந்து நிமிடம். காந்திமதி குணவதியின் பின்னாகப் போய்நிற்கின்றாள். அலட்சியத்தின் மிடுக்கில் குழையுங்குரல் மெதுவாகவே கிளம்புகின்றது!

"ஓ... எட்டே... குணவதீ... நான் சொல்ல மறந்திட்டன். உனக்கு ஏன் இதுகளையெல்லாம்... நான் பிள்ளையளை வாறவழியிலையே அவரோடை பெரஹராவுக்கு அனுப்பியிட்டன்... நீ ஏன் பெரஹராவுக்கு... நீ வேலை செய்யத்தானே இஞ்சை வந்தனி."

காந்திமதியின் சொற்கள் தேங்காயைத் துருவி எறியும் துருவலைப்போல,குணவதியின் மகிழ்வுகளையெல்லாம் சுரண்டித் துருவியெறிகின்றது.

இரவு பதினொரு மணியடிக்க குணவதி கால்களை வீசிப்புரட்டிக்கொண்டு படுக்கையில் கிடந்து உழல்கின்றாள்... அவள் நீண்டநேரம் அன்று யோசித்தபடி கிடந்தாள்... அன்றிலிருந்து தனக்கும் அவர்களுக்குமிடையே ஒரு கருந்திரை யொன்று விழுந்து விட்டதைப் போல அவள் உணரத் தொடங்கினாள்.

— II —

இரவைச் சிறு பொட்டுள்ள வேலியாக்கி, தணல் கட்டியது போலத் தனியே பறந்த மின்மினிப்பூச்சியைப் பார்த்தபடியே அவள் மௌனமாகக் கிடக்கின்றாள். ஒரு பூச்சி இப்பொழுது ஒரு பூச்சியாயிராது பல திசையிலும் பூச்சிகள் பறக்கின்றன. இருட்டின் உடலைக் கிழித்து தணற்சிதலைப் பிதுக்குவது போலத் தெரியும் மின்மினிப்பூச்சிகளைப் போலத்தான் அவளின் சிந்தனைகளும்!

அவள் திடீரென்று கட்டிலில் இருந்து எழுந்தாள். மனதுள் இரத்தம் நிறைய உறிஞ்சிவிட்டு இறக்க நெளியும் மலையட்டையின் உள்ளக் குமைவும், நெளிவுப் புரளலும். ஏனென்று சொல்லமுடியாத ஏதோ ஒரு துன்பம் காரணமற்ற அருபமாய் எழுந்து மனதை இடிக்கிறாற்போல நெஞ்சுள் வேதனை எழுகின்றது. சாம்பிராணிக் குச்சியிலிருந்து, தனியே எழுந்து வளையும் தனிநூல் சுருணை போல எல்லாத் துன்பங்களுக்கும் ஒரே நார்தான் முடிப்புத் தளம்.

பாயிலேயே சம்மாளி கொட்டி உட்கார்ந்தபடியே அவள் 'கொட்டுகொட்' டென்று முழித்துக்கொண்டிருந்தாள். பழனியாயியைப் போல அடித்துன்பம் கிடைத்திருந்தால் அவள் பொறுத்துக் கொண்டிருப்பாள்— இது...?

காலையில் வீட்டுக்கு வந்தவரின் திருநீற்றுப் பூச்சின் இழுவை இப்பொழுதும் குணவதியின் கண்ணுககுள்ளேயே நிற்கின்றது. இரண்டு கையிலும் பார்சல்களுடன் வீட்டுக்கு வந்த அவரை முதலில் எதிர்கொண்டவள் குணவதி தான். குணவதி வாசற்கதவைத் திறக்கக் கண்டதும் அவர் அவளுக்குச் சற்றுத் தள்ளி ஒதுங்கிக்கொண்டார். அவர் காந்திமதியின் தமையனார். மிகவும் ஆசாரசீலர். என்னவோ தெரியவில்லை. வந்த நேரத்திலிருந்து அவளையே அவர் 'முழிசி'ப்பார்த்துக்கொண்டிருந்தார். 'சீ! இப்படிக் கண்ட காணத்திரியுறதுகளை வீட்டுக்குள்ளை வைச்சிருந்தா உலகம் பின்னை எப்பிடியெண்டுதான் முன்னாலை வரேலும்.' கண்களிலே விஷமமும் வெறுப்பும் பொங்க குணவதிக்கு முன்னாலேயே, அந்த ஆசாரசீலர்— சுப்பையா அப்படி அடிக்கடிச் சொல்லி அலுத்துக்கொண்டார். குணவதிக்கு அவரது ஒவ்வொரு சொற்களும் பன்றிமுட்களைப் போல நெஞ்சைக் குத்தி வேதனையில் கொதிக்கவைத்தன!

அரை வழுக்கையாகி விட்ட தலையை அவர் தடவிக்கொண்டு சளித்த மூக்கை உறிஞ்சியபடியே இப்படி அடிக்கடி குத்தற் கதைகள் கதைக்கும் பொழுது இராமமூர்த்தியும். காந்திமதியும் கேட்டுக்கொண்டுதானிருந்தார்கள்! இராமமூர்த்தியும், காந்திமதியும் தனது உழைப்பைப் பற்றியும் சுறுசுறுப்பைப் பற்றியும் நன்கு அறிந்தவர்கள். தன்னில் ஓரளவிற்குப் பிடிப்புள்ளவர்கள். அத்தோடு தனது வேலைக்கு அவள் குறைவாகவே கூலி வாங்குகிறாள் என்று அடிக்கடி சொல்லிக் கொள்பவர்கள் — எனவே அவர்கள் தனக்காக நிச்சயம் பரிந்துபேசுவார்கள்

சு. யோகநாதன்

என்று அவள் நம்பியிருந்தாள். ஆனால் அதுவெறும்நினைவுதான் இனம் இனத்தோடு சேர்ந்து கொண்டுவிட்டபொழுது அவள் அந்த விட்டில் வைத்திருந்த பற்றுக்கள் எல்லாம் உடைந்து தகர்ந்தன. திடீரென்று விழுந்த அந்தத் திரை வர்க்கங்களை வர்க்கித்துக்கொண்டு, இரு பகுதியிலும் முகந்தெரியாத சந்தேக இருளை அப்பிப் பூசிக் கொண்டுவிட்டது!

குணவதிக்கு இடுப்பு வலித்தது. நாரியைக் கையால் உராஞ்சிக்கொண்டே அவள் படுக்கையிற் சாய்கின்றாள்.

நீண்ட நாட்களுக்குப் பிறகு ஏனோ தெரியவில்லை, மீண்டும் வீட்டு நினைவுகளே நெஞ்சிற்குள் குருத்தோலைத் தோரணம் கட்டுகின்றன. உருவெளியில் காட்சிகள் இருளிடையே ஒளிப்புக்காட்டித் தோன்றுகின்றன.

எலமலைக் காம்பறையிலும் அவளுக்கு அன்பு இல்லை. பேராதனை வாழ்விலும் அவளிற்கு மனதினுள் கனிந்து மலரும் மகிழ்வு இல்லை... 'இல்லை' என்பதுதான் அவளிற்கு 'உண்டு' என்றிருந்தது. சிலவேளைகளில் தெட்டந்தெறியனாய் வரும் நினைவுகளை அவள் உருக்கொடுத்து யோசிப்பாளென்றால்— அவளைப் போல அவள் மட்டுமல்ல. அவளைப் போலத் துயரத்திலே வாடும் தோட்டத்தொழிலாளர் முழுப்பேருமே அந்த நிலையில் தான் இருக்கின்றார்கள் என்பதும் தெரியவரும்.

அனுக்கக் கத்தி புறநினைவுகளை வெட்டித் தறிக்கின்றது. நினைவுகள் ஒன்றிற்குள்ளேயே ஒன்றுகின்றன.

துறுதுறுத்தபடி நேஞ்சலான உடம்பை, தயிர் கடையச் சுழரும் மத்தாய் இயக்கிக் கொண்டு உழைக்கும் பாப்பா — அவளுடைய தாய் தான் முதலில் அவளிற்கு முன்பு வருகின்றாள். புவனத்தையே எல்லாவற்றுள்ளும் எல்லாமாகக் காணும் பாப்பா அவளிற்கு அருகாக வருவது போல...

(8ம் பக்கம் பார்க்க)

மகளிர் மன்றம்

குழந்தையும் நற்பழக்கமும்

— கவிதா —

குழந்தை வளர்ப்பு என்பது ஒரு எளிதான விஷயமல்ல. அது எதிர்கால உலகையே உருவாக்கும் புனிதமான பணியாகும். தன் குழந்தைக்கு அலங்கார ஆடையணிவித்து, தலைவாரிப் பூச்சூடி, பொட்டிட்டு, பாலும் சோறும் ஊட்டுவதுடன் ஒரு தாயின் கடமை முடிந்துவிடுவதில்லை. பெற்ற குழந்தையை நல்வழியில் நடப்பிப்பதே அவளின் முதற் கடமை.

தன்னலம்

ஒரு தாய்க்கு ஒரேயொரு குழந்தை இருந்தாலும் சரி பல குழந்தைகள் இருந்தாலும் சரி எல்லோரையும் ஒரேமாதிரியாகவே வளர்க்கவேண்டும். அதிகமாக ஒரேயொரு குழந்தை உள்ள பெற்றோர் குழந்தைக்கு அதிகம் செல்லம் கொடுத்து அதைக் கெடுத்து விடுகின்றனர். அப்படியே சில தாய்மார்கள் மூத்த குழந்தைக்கு அல்லது கடைசிக் குழந்தைக்கு அதிக செல்லம், ஆதிகாரம் கொடுக்கின்றனர்.

இப்படியான குழந்தைகள் தாங்கள் குற்றம் செய்தாலும் தங்களுக்குப் பக்கபலமாகப் பெற்றோர் இருக்கின்றனர் என்ற துணிவினால் சீர்கெட்டு நடக்கின்றனர். இப்படியான குழந்தைகள் பிறரைத் துன்பப்படுத்துவதில் இன்பமடைகின்றனர். பாடசாலையிலும் சரி, வீட்டிலும் சரி பிறரை அடித்துத் துன்புறுத்தி மகிழ்கின்றனர். இவர்களிடமே அகங்காரம், கோபம் போன்ற குணங்கள் அதிகம் காணப்படுகின்றன. இவர்கள் வளர வளர எதற்கெடுத்தாலும் பிறருடன் கோபித்து, தானென்ற பெருமையுடன வாழ்ந்து சிறிதும் பொறுமையில்லாமல் நடந்து கெட்ட பிள்ளையெனப் பெயரெடுக்கின்றனர்.

பொறுமை

ஒன்றுமே தெரியாத பிஞ்சு உள்ளங்களில் பொறுமை என்னும் தீ மூண்டுவிட்டால் அதைத் தணிப்பது மிகவும் கஷ்டம். குழந்தைகளின் மனதில் பொறுமை ஏற்பட்டால் அதிகமாக அவர்கள் கெட்டே விடுகின்றனர். தாய்மார்கள் தங்களை அறியாமலே குழந்தைகளுப் பொறுமைப்பட விட்டுவிடுகின்றனர். பெற்றோரின் முழு அன்புக்கும் பாத்திரமாக இருந்த ஒரு குழந்தை தனது அன்பில் பங்கு கேட்க இன்னொரு குழந்தை வந்துவிட்டால் மிகவும் ஆத்திரமடைகின்றது. இப்படியான சமயங்களில் தனது தாயின் கவனத்தைத் தன்மேல் திருப்பிய குழந்தை தப்பிதங்களைச் செய்கின்றது.

அமைதியாக இருக்காமல், எப்பொழுதும் குழப்பங்களை செய்வதையே விரும்புகின்றது. இப்படியான குழந்தைகள் பிறரை அடித்து, திருடி, பொருட்களை உடைத்துக் கலகங்கள் செய்கின்றனர். இவர்களை முதலில் பொறுமையினால் தாயின் கவனத்தைத் தன்மேல் திருப்புவதற்காக இப்படியான குழப்பங்களைச் செய்வதால் பின்பு அதுவே பழக்கமாகி கெட்ட சுபாவமுள்ளவனாக்கிவிடுகின்றது.

குடும்பம்

நல்ல சுற்றுடலும் குழந்தை வளர்ப்புக்கு மிகவும் அவசியம். சுற்றுடல் என்றால் குழந்தையின் குடும்பமும் அதில் தங்கியிருக்கின்றது. குழந்தையின் நற்பழக்கத்திற்கு பெற்றோர் முன்மாதிரியாக இருக்கவேண்டும். அதுபோல குழந்தை ஏதாவது குற்றங் குறைகளை உடனுக்குடன் தண்டித்துவிட வேண்டும். தாயார் ஒருபுறமும், தந்தை ஒருபுறமும் இருப்பது குழந்தையின் எதிர்கால நன்மைக்கு உதவாது. தாயார் தனது குழந்தையிடம் எவ்வளவு பாசத்தைக் காட்டுகிறாளோ அவ்வளவுக்குக் குழந்தை பிழைவிடும் சமயங்களில் கண்டிக்கவும் வேண்டும். இரக்க மனமுள்ள தாயார், தந்தை தன் குழந்தையைக் கண்டிக்கும்பொழுது தடுப்பது குழந்தைக்குத் தீங்குசெய்வது போலாகும்.

தந்தை குடிகாரனாக இருப்பதாலும் குழந்தைகள் கெட்டு விடுகின்றனர். குடிகாரத் தந்தைக்கும், தாயாருக்கும் நித்தம் வரும் சண்டைகளினால் குழந்தைகளிடம் பெற்றோருக்கிருக்கும் மரியாதை குறைந்து விடுகின்றது. இவர்களும் தந்தையைப் பின்பற்றிக் குடிகாரனாகிவிடுவார்கள்.

விவாகரத்துச் செய்து கொள்ளும் பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளுக்குப் பெருந் தீங்கு செய்கின்றனர். நல்ல காலமாக எமது மக்களிடையே இன்னும் விவாகரத்து அதிகரிக்கவில்லை. பெற்றோர் இவ்விதமாகக் கட்டுப்பாடின்றி ஒற்றுமையில்லாமல் இருப்பதால் குழந்தைகள் யாரைப் பின்பற்றுவது; யாருக்குப் பயப்படுவது என அறியாமல் திகைக்க வேண்டியநிலை ஏற்படும்.

இப்படியான இடங்களில் சில பிள்ளைகள் ஒருவரின் அன்பை, செல்வாக்கை அதிகம் பெறுவதற்காகப் பெற்றோரிடையே கோள் சொல்லுவதும் உண்டு. இப்படியாக குழந்தைகள் பெற்றோரின் கவனக்குறைவால் நல்ல பழக்க வழக்கங்களைக் கைகொள்ளாதலால் கெட்டுவிடுகின்றனர்.

இவர்களைத் திருத்தும் பொறுப்பு தாயினுடையதே. குழந்தைகள் கெட்டுப்போவதற்குத் தாங்களே காரணம் என்பதை உணர்ந்த தாய்மார்கள் குடும்பத்தில் வரும் சச்சரவுகளைக்கூட குழந்தைகள் அறியாவண்ணம் தீர்க்கவேண்டும். வீட்டில் உள்ள பெரியார்களை குழந்தைகள் கனம்பண்ணப் பழக்கப்படவேண்டியது அவசியம்.

உடல் அழகு

— ஜெயம் —

ஒரு பெண்ணுக்கு நல்ல அழகைக் கொடுப்பது அவளின் உடல் அமைப்புத்தான். ஆகவே உடலழகில் அதிக அக்கறைகாட்டவேண்டும்.

ஒடிந்துவிழும் 'சூஞ்சு' எனவும், 'யானைக்குட்டி' எனவும் பிறர் பரிகசிக்காவண்ணம் உடலைப் பெண்கள் பாதுகாக்க வேண்டும். சத்துள்ள புஷ்டியான உணவுகளை உண்டு தேகத்தை ஆரோக்கியமாக வைத்திருக்கவேண்டும். பெண்கள் அதிகம் பருப்பது அழகல்ல. அதேபோல ஒல்லியாக இருப்பதும்விரும்பத்தக்கதல்ல உயரத்துக்கு ஏற்ற பருமனை இருத்தல் வேண்டும். முக அலங்காரம், ஆடை அலங்காரம், கூந்தல் அலங்காரம் செய்யும் பெண்கள் தங்களின் உடலளகைக் கவனியாது விட்டால், அவர்களின் மற்றைய அழகுகள் எல்லாம் அவற்றின் சிறப்பை இழந்துவிடும்.

ஒருவரைப் பார்த்தவுடனே அவரில் மரியாதை நம்பிக்கை வைக்கும்படியாக இருக்க வேண்டும். இதற்கு உறுதி வாய்ந்த கம்பீரமான உடலழகு தேவை. அக்காலத்துப் பெண்கள் உடலழகைப்பற்றி கவலையடைந்திருக்க மாட்டார்கள். காரணம் இயற்கையாகவே இவர்களிடம் உடலழகு அமைந்திருந்தது.

நெற் குற்றல், அம்மியில் அரைத்தல் போன்ற வீட்டு வேலைகளைச் செய்த பெண்களின் உடல் உறுதி வாய்ந்ததாக இருந்தது. இடுப்பில் குடம் ஏந்தி ஒயிலாக நடந்தால் அவர்களது இடை சிறுத்து அவர்கள் விரும்பிய படி இடை வளைந்துகொடுத்தது.

அப் பெண்கள் இருந்து சமைத்து, குனிந்து பரிமாறியதால் அவர்களின் உடம்பில் ஒவ்வொரு பகுதியும் ஆடி அசைந்து வேலை செய்தது. அக்காலத்துப் பெண்கள் அழகாக இருத்தற்குக் காரணம் ஆரோக்கியமான அவர்களது வாழ்க்கைமுறையே ஆகும்.

தவிர்க்கமுடியாத சில காரணங்களால் இக்காலப் பெண்கள் பருத்தோ அல்லது மெலிந்தோ இருக்கின்றனர். இதைத் தடுப்பதற்கு இதோ சில யோசனைகள்:

பருத்தவர்களுக்கு:-

இயந்திர யுகமான இக்காலத்தில் உடல் உழைப்புக்கு அதிக வேலை கிடையாதுதான். ஆனால் பெண்களுக்கு ...டிய வரை உடல் உழைப்பு அவசியமாகி தினமும் நடந்தால் மெலிந்துவிடலாம் என்று எண்ணுவது தவறு. மேலும் கண்ட கண்ட மருந்து வகைகளை உட்கொண்டாலும் மெலிந்துவிடமுடியாது.

* கொழுப்புச்சத்து நிறைந்த உணவுவகைகளை உண்பதைத் தவிர்க்கவேண்டும் நெய், பால், தயிர், எண்ணெய்யில் பொரித்த உணவுவகைகள், சர்க்கரை, இனிப்புப் பண்டங்கள், சாக்கிலெட் போன்ற உணவுகளை கூடிய மட்டில் குறைத்துக் கொள்ளவேண்டும்.

* உண்ணும் உணவை நிறுத்துவதால் உடல்மெலிந்து விடாது. கண்ட கண்ட நேரங்களில் உண்பதை நிறுத்த வேண்டும்.

* பழங்களில் வாழைப்பழம் பருத்தவர்களை மேலும் கொழுக்கப்பண்ணும்.

* உடலை ஆட்டி அசைத்து வேலைசெய்ய வேண்டும்.

* பகலில் நித்திரை செய்தல் கூடாது

மெலிந்தவர்களுக்கு:-

* இவர்கள் பருத்தவர்கள் உண்பதைத்தாத உணவுவகைகளை உண்ணவேண்டும்.

* இவர்கள் வழமையாகச் சாப்பிடும் அளவிலும் பார்க்க கூடுதலாக உட்கொள்ளவேண்டும்.

* நிறைய ஓய்வும் நித்திரையும் இவர்களுக்கு அவசியம் தேவை.

* மெலிந்தவர்களைக் கொழுக்க வைப்பவற்குத் 'தேன்' ஒரு நல்ல மருந்து என்பது பலரின் அபிப்பிராயம்.

உடல் நலத்தில் எவ்விதக் கவனமும் செலுத்தாமல் விலை உயர்ந்த சேலைகளினால் மட்டும் அழகைப் பெற்றுவிடலாம் என எண்ணுவது மடமை.

முக அழகு இல்லாவிட்டாலும் பெண்கள் உடலழகினால் அழகுராணிகளாக விளங்க முடியும் அல்லவா?

தமிழ் வளர்த்த சான்றோர்கள்: 1

செந்நாப்புலவர் சேதுப்பிள்ளை

— வித்துவான் க. வேந்தனார் —

எச். எஸ். ஸி. வகுப்பிற் பயிலும் மாணவர்களுக்குப் பயன் தரத்தக்க முறையில் 'தமிழ் வளர்த்த சான்றோர்கள்' என்ற வரிசையில் தமிழ்ப் பேரறிஞர்கள் சிலரைப்பற்றிய கட்டுரைகள் இங்கு தொடர்ந்து வெளிவரும்.

பழுத்த தமிழ்ப்புலமையும் பண்பும் தெய்வச் சால்பும் படைத்த செந்நாப் புலவர் சேதுப்பிள்ளை அவர்கள் எம்மைப் பிரிந்து சென்றுவிட்டார்.

கனிச்சாற்றுச் சுவைத்தமிழில், கட்டுரைகளும் காவிய நலங்கனிந்த சொற்பொழிவுகளும், எங்கள் சிந்தைக்கினியவாய், செவிக்கினியவாய், வாய்க்கினியவாய், வழங்கி, வழங்கி, எம்மை மகிழ்வித்த வள்ளல் சேதுப்பிள்ளை அவர்கள், வானகம் நண்ணி விட்டார்.

தென்னாட்டில் ஒரு திருநெல்வேலி, இந்நாட்டில் ஒரு திருநெல்வேலி என முன்னாள் யாழ்ப்பாணத்தில் பரமேசுவரக் கல்லூரி முன்றலில் நடந்த நான்காம்தமிழ்விழாப் பேரவையில் நவின்று நம்மையெல்லாம் எல்லையில்லா இன்பவாரியில் மூழ்குவித்த சொல்லின் செல்வர், சேதுப்பிள்ளை அவர்கள் எம்முடன் இல்லை என்பதை எண்ணி, எண்ணி ஏங்குகின்றோம்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும், சென்னைப் பல்கலைக் கழகத்திலும் பல்லாண்டு வீற்றிருந்து தண்ணார் தமிழ்ப் புலமை நடாத்தியஅண்ணலுயர் சேதுப்பிள்ளை அவர்களை இனி எந்நாளிற் காணப்போகின்றோம்.

எழுத்திலும் பேச்சிலும் எள்ளளவும் வேறுபாடின்றி, இனிமையும், கனிவும், எளிமையும், எண்வகைச் சுவைகளுமிகிந்து நிழலாடும் வண்ணம் எழுதவும் பேசவும் தக்க அரும்பெரும் ஆற்றல் வாய்ந்த பெரும்பேராசிரியர் சேதுபதிப்பிள்ளை அவர்கள் போலச் சிறந்த ஒருவரை இனி எந்நாளோ செந்தமிழ்த் தென்னாடு பெறப்போகின்றது.

இந்தியாவைத் தாய்நாடென்றும் இலங்கையைச் சேய்நாடென்றும், எழுதியும் பேசியும் இலங்கைக்குப் பலமுறைவந்து இனிய சொற்பொழிவுகள் நிகழ்த்தியும் இலங்கைத் தமிழறிஞர்களுடன் உளங்கலந்து, உறவாடியும் இன்றளவும் இலங்கை இந்திய தொடர்பைத் தமது தமிழ்ப்புலமையாலும் சைவச்சால்பாலும் இணைத்து மலர்த்தி எங்களில் ஒருவர்போல் விளங்கிய இலக்கியப் பேரறிஞர் சேதுப்பிள்ளை அவர்களை எங்ஙனம்மங்களால் மறந்து வாழமுடியும்.

பிள்ளை அவர்கள் பேசாத பேரவைகள் இல்லை. எழுதாத இலக்கியவெளியீடுகள் இல்லை. படிக்காத இலக்கியங்கள் இல்லை. சங்க இலக்கியங்களாகிய பாட்டும் தொகையும் நன்கு படித்தவர். காவியங்களாகிய சிந்தாமணியும் சிலப்பதிகாரமும் கம்பராமாயணமும் கந்தபுராணமும் கற்றுத் தெளிந்தவர். அறநூலாகிய திருக்குறளை ஆய்ந்து படித்தவர். சிற்றிலக்கியங்களாகிய பரணியும் உலாவும் பள்ளும் பயின்றவர். பெரியபுராணம், தேம்பாமணி, சீறுப்புராணம் என்னும் சமயகாவியங்களிலும், தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி எனும் அருட்பனுவல்களிலும் ஆழ்ந்த ஈடுபாடுடையவர். அல்லியரசாணிமாலையில் இருந்தும் ஆதாரம் எடுத்துக்காட்டி அவையோரை மகிழ்விக்கும் ஆற்றல் வாய்ந்தவர்.

அவர் ஆக்கிய வீரமாநகர் என்னும் வியத்தகு விழுமிய உரைநடை நூலும் தமிழ் இன்பம் என்னும் தகைநூல் ஆராய்ச்சி நூலும், இறவாத புகழுடைய இலக்கியங்கள். ஊரும் பேரும் என்னும் உரைநடைநூல் வரலாற்றுராய்ச்சிக்கும் மொழியாராய்ச்சிக்கும் வழிகாட்டியாக விளங்குகின்றன. அலையும்கலையும் என்னும் நூல் விலைமதிக்க முடியாத அறிவுக்களஞ்சியமாகும். வில்லும் வேலும், கங்கைவேடனும் காளத்திவேடனும் என்னும் நூல்கள் காவியப்பாத்திரங்களை ஒப்பிட்டுத் திறனாய்வு செய்த சிறப்பு நூல்களாகும். கடற்கரையில் என்னும் நூல் கற்பனை வளங்கனிந்ததாகும்.

இங்ஙனம் பல்லாண்டுகளாகத் தமிழைப் பயின்று பலநூல்களின் ஆசிரியராக விளங்கிய பல்கலைக் குரிசில் கலாநிதி சேதுப்பிள்ளை அவர்கள் மறைந்தும் மறையாதவராய், நிறைந்த தமிழ் அன்பர்களின் நெஞ்சமலர்களில் உறைந்து வாழ்கின்றார்.

'புத்தர் முதல் காந்திவரை'

இந்தியாவைப்பற்றியும் அது சம்பந்தப்பட்ட நூல்களையும் நன்கறிந்த, டுபின்ஜென் பல்கலைக்கழக ஜேர்மன் பேராசிரியர் வான் கிளாஸ் நூற்பின் 70-வது பிறந்த தினகொண்டாட்டம் சமீபத்தில் கொண்டாடப்பட்டது. அவரது மாணவர்கள் பலர் ஒன்று சேர்ந்து ஒரு மணிமலர் தயாரித்து அவருக்கு வழங்கினர். இப்புத்தகத்துக்கு "புத்தர் முதல காந்திவரை என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்திய ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் இதற்கு முன்னுரை எழுதியுள்ளார்.

இந்து, புத்த, ஜைன மதங்களைப் பற்றிய பல அரிய ஆராய்ச்சிக்கட்டுரைகள் இதில் அடங்கியுள்ளன. கிளாஸ் நூற்பு மகாத்மா காந்தியுடனும் நேரிடையாகப் பழகியவர். இவர் தன் இந்திய விஜயம் பற்றி எழுதுகையில் இந்தியா பற்றி ஐரோப்பியர்களிடையே இருந்துவரும் தவறான கருத்துகளை மாற்ற வழிதேடியிருக்கிறார்.

"இந்தியா வாரம்"

கீல் நகரில் முதல் தடவையாக "இந்தியா வாரம்" சமீபத்தில் கொண்டாடப்பட்டது. அங்குள்ள இந்திய மாணவர்கள், பயிற்சியாளர்கள் இதற்கான ஏற்பாடுகளைச் செய்தனர். பல்வேறு மேற்குஜெர்மன் ஸ்தாபனங்கள் இவ்விஷயத்தில் பெரிதும் ஒத்துழைத்தன.

சிறுவர் பூங்கா

தன்வினை தன்னைச் சுடும்

— செல்வி. வ. ரவீந்திராணி —

அன்று பாடசாலைதொடக்கம். பிள்ளைகள் எல்லோரும் குதூகலத்துடன் பாடசாலைக்குச் சென்றார்கள். அநேக நாட்களாகக் காணாத நண்பர்களைக் கண்டு களித்தார்கள். பாடசாலையே அன்று அமர்க்களமாக இருந்தது. அநேக புதுப் புதுப் பிள்ளைகள் வந்து சேர்ந்தார்கள். அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தனர் சிலர். விடுமுறை நாட்களில் நடந்த விசேஷ தினத் (கிறிஸ்மஸ்)தைப்பற்றிப் பேசிக்கொண்டனர் சிலர். சிலர் பாடசாலையைச் சுற்றியுள்ள இயற்கை வனப்பைப் பார்த்து ரசித்தனர்.

வகுப்புத் தொடங்குவதற்கு அறிகுறியாகப் பாடசாலை மணி 'கிணிங் ... கிணிங்' என ஒலித்தது. பிள்ளைகள் தங்கள் பழைய வகுப்பு அறையினுள் இருந்தனர். சிறிது நேரத்தின் பின் அதிபர் நாதன் வந்து புது வகுப்புக்குப் போகும் மாணவர்களின் பெயர்களையும் அவர்களுக்குரிய வகுப்பு அறையையும் வாசித்துவிட்டுச்சென்றார். புது வகுப்புகளை அடைந்தமாணவர்கள் குதூகலப்பட்டார்கள்.

8-ம் வகுப்பில் ஒரே சத்தம். கமலா மட்டும் எதையோ வைத்து வாசித்துக்கொண்டிருந்தாள். டாக்டர் சேகரின் மகள் கமலா. அவளுடையதூய உள்ளமும், கபடமற்ற முகமும், சிறந்த குணங்களும், அவளைப் பார்த்தவுடனேயே நல்லபெண் என்று சொல்ல எவரையும் வைத்துவிடும்.

பிரேமா அந்தப் பாடசாலை அதிபரின் மகள். அவள் அழகியாயிருந்தாலும் அவளது நெஞ்சு முழுவதும் நஞ்சு. அது மட்டுமன்று. பெருமையும் பொறுமையும் கொண்டவள். யாருக்கு முன்னாலும் தன்னைத் தானே புகழுவாள். இந்தக் குணங்களைக் கண்டு யாருமே அவளுடன் நெருங்கிப் பழகுவதில்லை. கமலாவோ யாருடனும் நன்றாகப் பழகுவாள். கமலா வைத தெரியாத சிறுமிகளே இல்லை அந்தப் பாடசாலையில் என்று கூறிவிடலாம்.

அன்று கௌரி என்று ஓர் பெண்பிள்ளை வந்து கமலாவின் வகுப்பினுள் சென்றாள். அப் போது ஆசிரியர் அவ்வகுப்பில் இல்லை. கமலாவும் பிரேமாவும் தான் முன்வரிசை பெஞ்சில் இருந்தார்கள் மூன்று பிள்ளைகள் இருப்பதற்குப் போதிய இடமிருந்தும் பிரேமா தன் இடத்தை விட்டே அசையவில்லை. கமலா சிறிது தள்ளி கௌரிக்கு இடங்கொடுத்தாள். அவளும் நன்றி கூறிவிட்டு அமர்ந்தாள். அப்போதே பிரேமாவின் குணங்களைப் பற்றிச் சிறிது புரிந்துகொண்டாள்.

அந்த ஆசிரியரின் பெயரைக் கேட்ட உடனேயே பிள்ளைகள் பயந்துநடுங்துவார்கள். அன்று பிரேமாவின் வகுப்பிலுள்ள மாணவர் கூச்சல்போட்டுவிளையாடிக் கொண்டிருந்தார்கள். திடீரென அவ்வகுப்பில் அமைதிநிலவியது. மாணவிகள் வியப்புடன் வாசலைநோக்கினர்கள். அங்கே அந்த ஆசிரியர் வகுப்பறையை நோக்கி வந்து கொண்டிருந்தார். வகுப்பறையுள் நுழைந்ததும் எல்லோரும் எழுந்து வணக்கம் சொல்லிவிட்டு இருந்தனர். அவரே அவ்வகுப்புவாத்தியார். தேவையான புத்தகங்களின் பெயரைக்கரும்பலகையில் எழுதினர். நேரசூசியையும் எழுதினர். பின் அவர் சில கணக்குகளைக்கரும்பலகையில் எழுதிவிட்டு அவற்றைச் செய்யும்படி மாணவர்களுக்குக் கட்டளையிட்டுவிட்டு, ஏதோ விஷயமாக அதிபரிடம் சென்றார்.

முதலில் கௌரியே கணக்கைச்செய்துமுடித்தாள். அதன் பின் கமலாசெய்தாள். அதைத் தொடர்ந்து ஒவ்வொருவரும் செய்து முடித்துவிட்டனர். ஆனால பிரேமாவோ கணக்கு எழுதவுமில்லை; செய்துமுடிக்கவுமில்லை. கதைப்புத்தகத்தில் ஆழ்ந்திருந்தாள். வகுப்புவாத்தியார் வந்தது கூடதெரியவில்லை அவளுக்கு. வகுப்புவாத்தியார் வந்ததும் எல்லோரும் தாங்கள்செய்துமுடித்த கணக்கைக் காட்டிவிட்டுவந்துஅமர்ந்தார்கள். ஆனால் பிரேமாவோ வைத்த கண்வாங்காது அந்தக் கதைப்புத்தகத்தை வாசித்துக் கொண்டிருந்தாள்.

எங்கே பிரேமா நீ செய்த கணக்கைக் கொண்டுவா என்றார் வாத்தியார். அதுவே அவளுடைய காதில் விழவில்லை. மறுபடியும் உரக்ககேட்டார். அப்போதுதான் திகைத்து எழுந்து நின்று கரும்பலகையைப் பார்த்தாள். அவளைப் பார்த்தவுடன் கௌரிக்குச் சிரிப்பு அடக்க முடியவில்லை. உடனே 'பக்' எனச் சிரித்தே விட்டாள். அதைத்தொடர்ந்து ஆசிரியரும் மாணவரும் சிரித்தார்கள். பிரேமாவுக்கோ ஒருபுறம் கோபமும் மறுபுறம் ஆத்திரமும் வந்தது. கௌரியைப் பார்த்துக்கறுவிக்கொண்டாள். பாடசாலை முடிந்தது. கௌரியும் கமலாவும் வகுப்புக்கு வெளியே வந்தனர். கமலாவுக்குக் கார் காத்திருந்தது. கமலா தன்னுடன் வரும்படி கௌரியையும் கேட்டுக்கொண்டாள். கமலாவின் வேண்டுகோளின்படியே கௌரியும் அவளுடன் காரில் சென்றாள்.

இருவருடைய வீடும் பக்கம் பக்கமாகத்தான் இருந்தன கௌரியின் அப்பாவும் ஓர் டாக்டர். அவருக்கு மாற்றங் கிடைத்த காரணத்தினால் கௌரி, கமலா படிக்கும் பாடசாலையில் படித்தாள்.

நாட்கள் நகர்ந்தன. கௌரியும் கமலாவும் இணைபிரியாத சிநேகமானார்கள். இவர்களின் நட்பைக் கண்டதும் பிரேமாவின் உள்ளத்தில் பொறுமைத் தீ பற்றி எரித்தது.

சில நாட்களில் பாடசாலையில் ஒரு கட்டுரைப்போட்டி வைத்தார்கள். கட்டுரை எழுதுவதில் கௌரி நல்ல திறமைவாய்ந்தவள். பிரேமாவுக்கோ அவள் நெஞ்சம் இன்னும் கனன்றுகொண்டிருந்தது. பொறுமைத் தீ அவள் நெஞ்சில் ஓங்கி எரிந்துகொண்டேயிருந்தது. அவளுக்கு ஒரு யுக்தி தோன்றியது. அன்று கௌரியின் பேனாவை எடுத்து யாருமறியாமல் மூரித்து வைத்துவிட்டுச் சென்றுவிட்டாள். கௌரியின் பேனாவை மூரித்து வைப்பதற்கும் கமலா வகுப்பறையினுள் நுழைவதற்கும் சரியாக இருந்தது. தன்னுடைய பேனாவையும் பெஞ்சினுள் வைத்துவிட்டு ஒன்றும் அறியாதவள்போல் வெளியே சென்றாள் பிரேமா. பிரேமா மீது சந்தேகங்கொண்ட கமலா பெஞ்சினுள் கைவைத்தாள். கௌரியின் பேனா மூரிந்திருப்பதைக்கண்டு விஷயத்தைப் புரிந்துகொண்டாள். உடனே அவன் இருவருடைய பேனாக்களும் ஒரே மாதிரி இருந்ததினால் இடம் மாற்றி வைத்துவிட்டு அவளும் ஒன்றும் அறியாதவள்போல் இருந்தாள்.

ஒன்பது மணிக்குப் பரீட்சை ஆரம்பமானது. வினாப்பத்திரங்களும் விடைத்தாள்களும் கொடுத்தாயிற்று. வினாப்பத்திரத்தில் 'தன்வினை தன்னைச் சுடும்' என்ற தலையங்கத்தில் ஓர் கட்டுரை எழுதுக என இருத்தது. அதைப் படித்து விட்டு விடை எழுதப் பேனாவைத் திறந்த பிரேமா, ஆச்சரியத்தால் வாயடைத்திருந்தாள். அப்போதுதான் கட்டுரைத்தலைப்பின் பொருள் நன்றாக விளங்கியது பிரேமாவுக்கு. போட்டியில் முதலிடம் பெற்றாள் கௌரி. இதையறிந்து மகிழ்ச்சியடைந்த கமலா நடந்தவற்றை விபரமாகக் கூறி முடித்தாள்.

பாடசாலையில் ஒரே ஆரவாரம். பரிசளிப்பு விழா நடந்தது. கௌரி எழுதிய கட்டுரைக்குத் திரள் திரளாக ஜனங்களுக்கு முன்னால் ஒரு தங்க மோதிரம் பரிசாக வழங்கப்பட்டது. அவள் உடனே அதைக் கொண்டுவந்து கமலாவின் கைவிரலில் பேட்டாள்

படமும் கதையும்

இப்படத்தைப் பார்த்ததும் உங்களுக்குப் பற்பல எண்ணங்கள் தோன்றலாம். படத்தினுள் இருக்கும் படத்தில் இருப்பவர் யார்? அப்படத்தை இடதுபக்கத்தில் பிடித்திருப்பவர் யார்? மலர்ந்த முகத்துடன் சூழ்ந்திருக்கும் அந்தப் பெண்கள் யார்? படத்துள்ளிருக்கும் படத்தில் இருப்பவர்தான் அடிமை விலங்கினை அறுத்தெறிந்த பதினாறாவது அமெரிக்க ஜனாதிபதி ஆபிரஹாம்லிங்கன். அவரின் உருவப்படத்தைப் பிடித்திருப்பவர் அமெரிக்காவின் இன்றைய ஜனாதிபதி கென்னடி. சூழ்ந்திருக்கும் பெண்கள், தேசிய நிறமகளிர் சங்கத்தைச் சேர்ந்த அங்கத்தவர்கள். செம்பினால் செதுக்கப்பட்ட ஆபிரஹாம்லிங்கனின் உருவப்படத்தை தேசியநிற மகளிர் சங்க அங்கத்தினர்கள், ஜனாதிபதி கென்னடியிடம் கொடுக்கிறார்கள். இவ்வுருவப்படத்தை அமெரிக்க ஓவியக்காரர் வில்லியம் மார்க்ஸ் வெல் என்பவர் வரைந்தார்.

விளம்பர வாழ்க்கை

பாமர - ராஜகோபால்

இது ஒரு விளம்பர யுகம். வியாபாரிகள், சினிமாக் காரர்கள் முதலியவர்களது விளம்பரங்களைத் தவிர தனி மனிதர்கள் தங்களைப்பற்றியும் தங்களது தேவைகளைப் பற்றியும் விளம்பரம் செய்கிறார்கள். ஒருவர் எப்போது பிறந்தார். அவரது வாழ்க்கையில் நடந்த முக்கிய நிகழ்ச்சிகள்என்னென்ன, எப்போது விவாகம் செய்துகொண்டார், என்ன உத்தியோகத்தில் இருந்தார், அவருக்குக் குழந்தைகள் எத்தனை என்பது போன்ற விபரங்களை அவரது பெற்றோரும், அவரும் செய்யும் விளம்பரங்களைக் கொண்டே அறிந்து கொள்ளலாம்.

ஸ்ரீமான் சண்முகசுந்தரத்தை நீங்கள் அறிந்திருக்க முடியாது; நானும் பார்த்ததில்லை. ஆனால் அவரது வாழ்க்கையைப் பற்றி நீங்கள் அறிந்துகொள்ள விரும்பினால்—

கீழேயுள்ள விளம்பரங்களைப் படித்துப்பாருங்கள்— அவருடைய சரித்திரமே தெரிந்துவிடும்!

★ பிறப்பு: 1920-ம் ஆண்டு ஜனவரி மாதம் 22-ம் தேதி காலை எட்டு மணிக்கு என் மனைவி சுந்தரம்மான், சியாமளா ஆஸ்பத்திரியில் ஓர் ஆண்மகவு ஈன்றாள். — சண்முகலிங்கம், திருமலை.

★ தேவை: பள்ளிக்குச் சென்றுகொண்டிருக்கும் எனது ஆறுவயதுப் பையன் சண்முகசுந்தரத்துக்கு 'டியூஷன்' சொல்லிக்கொடுக்கவும், கவனித்துக்கொள்ளவும் ஒரு உபாத்தியாயர் தேவை. முன் அனுபவமுள்ளவராயிருத்தல் வேண்டும். கீழ்க்கண்ட விலாசத்துக்கு விண்ணப்பித்துக் கொள்ளவும். — சண்முகலிங்கம், 'பாக்கியகிரி', திருமலை.

★ காணேம்: எனது புதல்வன் சண்முகசுந்தரம் (13 வயது) நேற்று மாலையிலிருந்து காணவில்லை. மாலை 'புட்-பால்' ஆடிவிட்டு வீட்டுக்கு வந்தவனை அப்புறம் காணவில்லை. மாநிறம்; உயரம்: 4 அடி, 6 அங்குலம்; சிறிது சுருட்டையான கிராப்புத்தலை; அரைக் கைச்சட்டை காற்சட்டை அணிந்திருந்தான். கீழ்க்கண்ட விலாசத்துக்கு அவன் இருக்குமிடம் தெரிவித்தாலும், அல்லது கொண்டு வந்து சேர்ப்பித்தாலும் சன்மானம் அளிக்கப்படும். — சண்முகலிங்கம், 'பாக்கிய கிரி', திருமலை.

★ அமெரிக்கா செல்கிறார்: சண்முகசுந்தரம், பி. ஏ. வருகிற ஆகஸ்ட் மாதம் முதலாந் தேதி மேற்படிப்புக்காக விமானம் மூலம் அமெரிக்கா செல்கிறார். அங்கே 'யூனிவர்ஸிட்டி ஒவ் அமெரிக்கா'வில் சேர்ந்து படிப்பார்.

★ இலங்கை திரும்பிவிட்டார்: சண்முகசுந்தரம், பி. ஏ இரண்டுவருட காலம் அமெரிக்காவில் ரசாயனக் கல்வி கற்று, சென்ற வாரம் 'எஸ். எஸ். கியூங் மிங்கி லிங்' கப்பலில் இலங்கை வந்துசேர்ந்தார். தாம் அமெரிக்காவில் கற்றவைகளைத் தாய்நாட்டுக்குப் பயன்படுத்தவேண்டுமென்று விரும்புகிறார்.

★ வேலை தேவை: 'கெமிஸ்ட்ரி'யில் நல்ல படிப்பாளியும் இரண்டு வருட காலம் அமெரிக்காவில் 'ஒய். ஹி. எப். கியூ. இஸட்.' பட்டங்கள் பெற்றவருமான ஓர் இளைஞருக்குத் தகுந்த உத்தியோகம் தேவை. ஆங்கிலம், தமிழ் இரு மொழிகளும் தெரியும். மற்ற விபரங்களுக்கு கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுங்கள். —இல: 886, C/o. 'கெமிஸ்ட்', யாழ்ப்பாணம்.

★ திருமண அழைப்பிதழ்: சிரஞ்சீவி சண்முகசுந்தரம் பி.ஏ. அவர்களுக்கும், சௌபாக்கியவதி இந்திரகுமாரி (திரு. நடராசா - பி. டபிள்யூ. டி. என்ஜினியரின் புதல்வி)க்கும் 29-5-45ம் தேதியன்று நடக்கவிருக்கும் திருமணத்திற்குத் தவறாது விஜயம் செய்வீர்களாக.

★ நன்றி அறிவிப்பு: திரு. சண்முகசுந்தரம் அவர்களுக்கும், திருமதி. சண்முகசுந்தரம் அவர்களுக்கும் கல்யாணம் நடைபெற்ற சமயம் அங்கே வந்து வாழ்த்துச் செய்தி அனுப்பியவர்களுக்கும், பரிசுகள் வழங்கியவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறார்கள். தனித்தனியாக நன்றி தெரிவிக்க முடியாமைக்கு வருத்தம் தெரிவித்துக் கொள்கிறார்கள்.

★ குழந்தை பிறந்தது: என் மனைவி இந்திரகுமாரிக்கு சியாமளா ஆஸ்பத்திரியில் ஓர் பெண்குழந்தை பிறந்தது. — சண்முகசுந்தரம்

★ காலஞ்சென்றார்: 'வாக்கர்ஸ் கம்பெனி'யின் 'சுப்பவைஸரா'ன சண்முகசுந்தரம் சென்ற வாரம் திடீரென்று மாரடைப்பினால் இறந்தார். அவர் தயாளகுணமும் பரந்த நோக்கமும் கொண்டவராயிருந்தார். தம்முடைய மனைவியையும், ஒரே புதல்வனையும் விட்டுவிட்டு விண்ணுலகம் சென்றுவிட்டார்.

அறிவித்தல்

யாழ்ப்பாணம் சுண்டிக்குளியிலுள்ள சென். ஜோன்ஸ் அகடமியில் ஜி. ஸி. ஈ. சாதாரண உயர்வகுப்பு ஆகிய வகுப்புகளுகும் எச். எஸ். ஸி. க்கும் ஜனவரி 21-ம் திகதியிலிருந்து பயிற்சி வகுப்புகள் ஆரம்பமாகியுள்ளன. இந்த வகுப்புகளில் சில காலிஸ்தானங்கள் இருக்கின்றன. எனவே குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் அனுப்பப்படும் மனுக்கள் கவனிக்கப்படும்.

லண்டன் சேம்பர் ஆப் கம்மேர்ஸ் பரீட்சையில் தோற்றுவதற்கு தயாராக்கும் வகுப்புகள் பெப்ரவரி முற்பகுதியில் ஆரம்பமாகும்.

பாளி, சமஸ்கிருதம் மற்றும் கலை சம்பந்தப்பட்ட பாடங்கள் பட்டதாரி வகுப்புவரை பயின்றுகொள்வதற்கு விரும்புபவர்களுக்கு விசேஷ வகுப்புகள் நடத்த ஏற்பாடு செய்யலாம்.

இந்த வகுப்புகளில் சேர்ந்து பயில்வதற்கான மனுக்கள் 1963 பெப்ரவரி 2-ம் திகதிக்கு முன்னர் காரியாலயத்திலிருந்து பெறும் விண்ணப்பப் பத்திரங்கள் மூலம் விண்ணப்பிக்கலாம்.

ஜே. ஸி. ஹன்டி,
662 டைரக்டர்.

லொறி விற்பனை

கொமர் (Commer) 33 ஸ்ரீ 5800, சீரியல், 7800, மைல்களே ஓடியுள்ளது. டென்டர்மூலம் விற்பனை செய்யப்படும். விபரங்கட்கு: செயலாளர், கூட்டுறவு மரக்கறி உற்பத்தி விற்பனைவுச் சங்கம், 75, கஸ்கிசன் வீதி, திருக்கோணமலை. 663

குடியேற்றம்

மன்னர் மாவட்டத்தில் குடியேற்ற திட்டமொன்று ஆரம்பித்திருக்கிறோம். முக்கியமாக இளைப்பாறிய உத்தியோகத்தருக்கும் எஸ். எஸ். சியில் சித்திபெற்று வேலையில்லாதிருக்கும் இளைஞருக்குமாக. விரும்புவோர் விண்ணப்பம் செய்து கொள்ளலாம்.

667 C/o ஈழநாடு

தொய்வு: நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக இலவம். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.

வைத்தியர் பரிபூரணானந்தர்
கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

இராமநாதன் இசைக்கல்லூரி, மருதனார்மடம்

புதிய சங்கீத வகுப்புகள் (வாய்பாட்டு, வீணை, மிருதங்கம்) பிப்ரவரி மாதம் முதல் ஆரம்பிக்கப்படும். சேரவிரும்புகிறவர்கள், இந்த மாதம் இறுதிக்குள் நேரில் விவரங்களை அறியலாம்.

672 அதிபர்.

விற்பனைக்கு

நல்லநிலையிலுள்ள E N. 9000 தொடர் இலக்கத்தைக் கொண்டவொக்சோல்வலெக்ஸ் கார் ஒன்று விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு ஏ. தேவராஜ், 60/5, இந்துக்கல்லூரி ஒழுங்கை, வண்ணார்பண்ணை.

664

தாயும் குழந்தையும் மரணம்!

கணவனுக்கு ரிமாண்ட்

கொலையா, தற்கொலையா?

மாவிட்டபுரம், சனி சுன்னாகத்தில் மனைவியும் குழந்தையும் மரணமானதையொட்டி கணவன் ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார். இருவரின் மரணமும் கொலையா அல்லது தற்கொலையா? என்பது பற்றிய விசாரணை நடைபெறறு வருகிறது.

சுன்னாகத்தைச் சேர்ந்த திரு மதி. தவரத்தினம் அன்னமலர் (25 வயது) என்பவரும் அவருடைய கடைசிக் குழந்தை பிரேமச்சந்திரனும் தான் மரணமானவர்கள். அன்னமலரின் கணவனான சிவகுரு தவரத்தினம் ரிமாண்டில் வைக்கப்பட்டிருக்கிறார்.

இச்சம்பவம் பற்றி பொலிஸ் விசாரணையின் போது கூறப்பட்டதாவது:

'கடந்த வியாழக்கிழமை தவரத்தினம் குடும்பத்தினர் மதிய உணவை உட்கொண்டபின் கணவனுக்கும் மனைவிக்கு மிடையே வாக்குவாதம் ஏற்பட்டது. ஆத்திரத்தினால் கணவன் மனைவியை அடித்தார். அடித்துவிட்டு தனது முதல் மூன்று பிள்ளைகளையும் சலூனுக்கு அழைத்துச் சென்றார். நான்காவது பிள்ளை பேரன் வீட்டிற்குப் போயிருந்தது. வீட்டில் அன்னமலரும் கடைசிக் குழந்தையான பிரேமச்சந்திரனும் இருந்தார்கள். தவரத்தினம் சலூனிலிருந்து மூன்று பிள்ளைகளையும் இனிப்பு வாங்கிக் கொடுத்து வீட்டுக்கு அனுப்பிவைத்துவிட்டு சந்தைக்குப் போனர்.

வீட்டுக்கு வந்த மூன்று பிள்ளைகளும் தாய் வாந்தியெடுத்துக்கொண்டிருப்பதனையும், பிரேமச்சந்திரன் படுத்திருப்பதனையும் கண்டனர். மூத்தபிள்ளையான வைகுந்தவாசன் தந்தையிடம்போய் விஷயத்தைத் தெரிவித்தான்.

தவரத்தினம் உடனே வீட்டுக்குச்சென்று மனைவியை மானிப்பாய் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றார். அங்கு அவர் மரணமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

கடைசிக் குழந்தையான பிரேமச்சந்திரன் நித்திரை என்று எண்ணியிருந்தவர்கள் அக்குழந்தையும் இறந்துவிட்டதனைக் கண்டனர். அன்னமலரின் வாயிலும் குழந்தையின் வாயிலும் பொலிடோல் காணப்பட்டது.

இம்மரணம் சம்பந்தமாக வலி வடக்கு மரணவிசாரணை அதிகாரி திரு. பிரின்ஸ் ராஜேந்திரா மரணவிசாரணை நடத்தினர். சுன்னாகம் உதவிப் பொலீஸ் இன்ஸ்பெக்டர் திரு. தியாகராஜா சாட்சிகளை ஆஜர் செய்தார். தவரத்தினம் வைகுந்தவாசன், மாரிமுத்து கந்தையா, வேலுப்பிள்ளை சிவகுரு ஆகியோர் சாட்சியமளித்தனர். மரணவிசாரணை அதிகாரி பிரேதபரிசோதனை நடத்த உத்தரவிட்டு சிவகுரு தவரத்தினத்தை இம்மாதம் 29-ம் திகதிவரைரிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டதுடன் தமது தீர்ப்பையும் ஒத்திவைத்தார்.

பாதுகாப்பு பணியில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சிறிதும் தளர்ந்துவிடக்கூடாதென்றும் கூறினர்,

தொண்டர்கள் பிரதிக்ஞை

புதுச்சேரி, காரைக்கால் ஆகிய இடங்களைச்சேர்ந்த பத்தாயிரத்துக்குமதிகமான கிராமத் தொண்டர்கள் நாட்டின் பாதுகாப்புக்கு தங்களது சேவையை அளிப்பதென இன்று பிரதிக்ஞை எடுத்துக்கொண்டனர். திருவனந்தபுரத்தில் கேரள கவர்னர் தலைமையில் குடியரசுதின அணிவகுப்புகள் நடைபெற்றன. எளிய முறையில்குடியரசுதினநிகழ்ச்சிகள் இங்கு கொண்டாடப்பட்டன. மேற்கு வங்காளத்தில் மேற்குவங்காளகவர்னர், அணிவகுப்பைப் பார்வையிட்டார். பலவிடங்களிலும் குடியரசுதினநிகழ்ச்சிகள் கொண்டாடப்பட்டன. ராஜ்யமெங்கிலும் ஆட்பலத்தை அதிகரித்து நாட்டுக்காகப் பாடுபடுவதென்று மக்கள் உறுதி கொண்டார்கள். பாட்னாவில் நடைபெற்ற குடியரசுதின அணிவகுப்புகளை 50,000 க்கு அதிகமான மக்கள் பார்வையிட்டனர்.

அமைதிக்கு பிரார்த்தனை

பம்பாயில், நாட்டின் அமைதி குறித்து பலமதங்களைச்சேர்ந்த மக்களும் இன்று பிரார்த்தனை செய்தார்கள். இங்கு நடைபெற்ற பிரார்த்தனைக் கூட்டமொன்றில் பம்பாய் கவர்னர் ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் கலந்துகொண்டார்.

காஷ்மீரில் இப்போது கடுங்குளிராக இருந்தாலும், இன்று நடைபெற்ற குடியரசுதின அணிவகுபபைக் காண்பதற்காக ஏராளமான மக்கள் திரண்டிருந்தனர்.

பஞ்சாபில் ராஜ்ய கவர்னர், அணிவகுப்புகளை ஏற்றுக்கொண்டார். இந்தியாவுக்கு இன்று ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு தங்களது சேவைகளை அளிப்பதென்றும் நாட்டின் பாதுகாப்புக்கு ஒத்துழைப்பதென்றும் மக்கள் பிரதிக்ஞை எடுத்துக்கொண்டனர்.

தமிழரசுக்கட்சி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சிவானந்தசுந்தரம் பேசுகையில், தமிழரசுக்கட்சி ஒரு விடுதலை இயக்கமென்றும் எமது கட்சி மக்களின் சகல துறைகளிலும் நாளாந்தம் ஈடுபட்டு உழைக்கவேண்டுமென்றும், நாடு பூராவும் தமிழரசுக் கட்சிக் கிளைகள் நிறுவப்படவேண்டுமென்றும் கூறினர்.

எதிர்காலத் தமிழரசின் தலைநகராக விளங்கவிருக்கும் திருக்கோணமலையில், தமிழரசுக் கட்சியின் திருமலைக்கிளை புனருத்தாரணம் செய்துவைக்கப்பட்டது ஒரு முக்கியமான வைபவமாகும் என்றும் அவர் கூறினர். அக் கூட்டத்திற்கு திருக்கோணமலை நகரசபை ஏழாம்வட்டார அங்கத்தவர் திரு. இ. சோமசுந்தரம் தலைமை வகித்தார்.

இன்று மாலை நிலாவெளியில் தமிழ் அரசுக்கட்சியின் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது. நாளை திருக்கோணமலையில் திரு. எஸ். ஆர். ராஜவரோதயம் தலைமையில் பிரசாரக் கூட்டமும் பொதுச்சபைக்கூட்டமும் நடைபெறும்.

வெளிநாடுகளில்.....

வெளிநாடுகளிலும் இன்று இந்திய குடியரசு தினம் கொண்டாடப்பட்டது. வெளிநாடுகளிலுள்ள இந்திய தூதராலயங்களில் குடியரசு தினத்தையொட்டி பல நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இந்தியாவின் குடியரசு தினத்தையொட்டி மாஸ்கோவில் மாபெரும் கூட்டமொன்று நடைபெற்றது. இங்குள்ள இந்திய மக்களும், பல பிரமுகர்களும் கலந்துகொண்ட இக்கூட்டம் மாஸ்கோவிலுள்ள இந்தியஸ்தானிகரும் இந்திய வெளிநாட்டமைச்சின் பொதுக் காரியதரிசியுமான திரு. ஆர். கே. நேருவின் தலைமையில் நடைபெற்றது.

உண்ணாவிரதம் கைவிடப்பட்டது

ஊர்காவற்றுறை, சனி சரவணை - நாரந்தனைக் கிராமங்களில் மதுஒழிப்பை செயல்படுத்தக்கோரி சென்ற திங்கட்கிழமை தொடக்கம் உண்ணாவிரதம் அனுட்டித்த நாரந்தனைக் கிராமத்தைச் சேர்ந்த திரு. மார்க்கண்டு நேற்றிரவு 10 மணியளவில் தமது 5-வது நாள் உண்ணாவிரதத்தைக் கைவிட்டார்.

நேற்றிரவு சரவணை கி.மு.சங்க சிவஞான மண்டபத்தில் கிராம முன்னேற்றச் சங்க ஆதரவில் மதுஒழிப்புப் பற்றிய பொதுக் கூட்டம் நடைபெற்றது. சங்கத் தலைவர் திரு. அ. சண்முகரத்தினம் கூட்டத்திற்குத் தலைமைவகித்தார்.

கூட்டம்முடிவடைந்தபின் சரவணை கிராமமுன்னேற்றச்சங்க பிரதிநிதிகள் பலர், சரவணை—நாரந்தனைக் கந்தசுவாமி ஆலயத்தைடைந்து மதுவிலக்குக் கோரி உண்ணாவிரதம் இருக்கும் திரு. மார்க்கண்டுவை உண்ணாவிரதத்தைக் கைவிடும்படி கேட்டுக்கொண்டனர்.

உண்ணாவிரதம் நடபெற்ற ஆலய சங்கிதானத்தில் மேற்படி சங்கப் பிரதிநிதிகள் பலர் மது அருந்துவதில்லை என சபதம் செய்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

விரைவில் எதிர்பாருங்கள்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)

மற்றும் சில சினிமாஸ் திரைகளில்!

★ நாட்டுக்குத் தேவையான நல்ல கதை!
★ குடிப்பது ஒன்றே வாழ்வு என்று எண்ணுபவர்களுக்கு நல்ல பாடம்!!

பார்க்கத்தவறாதீர்கள்!!!

சிவாஜி கணேசன் - பத்மினி

மற்றும் பலர் நடிக்கும்

புனர்ஜென்மம்

திரைக்கதை-வசனம் ஸ்ரீதர் | டைரக்ஷன் ஆர்.எஸ்.மணி | இசை டி.சலபதிராவ்

இப்பொழுது நடைபெறுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) விஜயா (அமபாறை) மொடேர்ன் (பதுளை)
விஜயா (மட்டக்களப்பு) வெம்பிளி லக்ஷ்மி (கண்டி) ஜெமினி (இரத்தினபுரி) (ரூகலை)
ஸ்ரீகிருஷ்ணா ஜூபிட்டர் விஜிதா தீவொளி
(திருகோணமலை) (குருணாகலை) (ஹட்டன்) (நுவரேலியா)

காதுக்கினிய பாடல்களும், திடுக்கிடும் சண்டைக் காட்சிகளும் நிறைந்த படம்

எம். ஜி. ராமச்சந்திரன், பத்மினி, ராகினி
எம். என். நம்பியார், எம். என். ராஜம்

மற்றும் பலர் நடித்த

ராணி சம்யுக்தா

பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன்
டைரக்ஷன் டி. யோகானந்த்

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)

பி. எஸ். வீரப்பா, எஸ். ஜானகி

மற்றும் பலர் திறம்பட நடித்த

சவுக்கடி சந்திரகாந்தா

மனோகரா
(யாழ்ப்பாணம்)

சிவாஜி, ஜெமினி கணேசன், சாவித்திரி

மற்றும் பலர் நடித்த

பாசமலர்

SCHOOL OF TECHNOLOGY
CHUNDIKULI, JAFFNA.

Course in Electrical Installation Work

Intensive instruction, both theory and practical, provided by qualified Electrical Engineer, for one year. Students who have reached the J. S. C. Standard can successfully complete this course and become competent Electricians.

Trained Electricians have good chances of employment.

There are vacancies in the class just commenced. No admission after 1st February, for the 1963 class.

Apply Immediately.

A. A. COOKE
Director

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் 27-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.